

# செங்காந்தள் – கம்பராமாயணம்

முனைவர் ஜெ.கவிதா & முனைவர் சே. பிரேமா

புத்தகக்குறிப்பு

9 789391 115784



# செங்காந்தள் - கம்பராமாயணம்

# Title Verso


| | |
|---|---|
| **TITLE OF THE BOOK** | : **Chenkaantal - Kambaramayanam** |
| **புத்தகத்தலைப்பு** | **: செங்காந்தள் - கம்பராமாயணம்** |
| **EDITORS** | **: Dr J. Kavitha & Dr S. Prema** |
| **தொகுப்பாசிரியர்** | **: முனைவர் ஜெ.கவிதா & முனைவர் சே. பிரேமா** |
| **FIRST EDITION** | : 2022 |
| **முதல் பதிப்பு** | : 2022 |
| **PAGES/ பக்கங்கள்** | : 100 |
| **PRICE/ விலை** | : 200 |
| **ISBN NUMBER** | : 978-93-91115-78-4 |
| **CONTACT NUMBER** | : 8526769556 |

PUBLISHER : Pandian Educational Trust,
3/350, Veterinary Hospital Backside,
Virudhunagar – 626001.
Tamil Nadu

PRINTER : Maheswari Publishers,
3/350, Veterinary Hospital Rear side,
Virudhunagar – 626001.
Tamil Nadu



**பதிப்புரிமை/Copyright © 2022 – கட்டுரையாளர்களுக்கு /Authors'**

அனைத்து பதிப்புரிமையும் பெறப்பட்டுள்ளது. இப்புத்தகத்தின் எப்பகுதியும் பதிப்பகத்தின் அனுமதியின்றி அச்சிடப்படக்கூடாது.

All rights reserved. No part of this book should be transmitted to any type of printed material without proper permission from the publisher.

# செங்காந்தள்

குறிஞ்சி நில தெய்வமான முருகனின் அடையாளப்பூ செங்காந்தள்பூ. போர் கடவுளான முருகன் பிறந்த கார்த்திகை மாதத்தில் இதன் பூ அகல்விளக்கு போல பூப்பதால் கார்த்திகைப்பூ என்று அழைக்கப்படுகிறது. *கரும்பு மூசாசச் சுடர்பூங் காந்தள் பெருந்தண் கண்ணி மிலைந்த சென்யன்* என்ற திருமுருகாற்றுப்படை பாடல் வண்டு இனங்கள் மொய்க்காத நல்ல மணமுடைய, நெருப்புப் போன்ற செந்நிறம் மற்றும் ஒளியுள்ள செங்காந்தள் பூவாலாகிய குளிர்ச்சியுடைய மாலையைச் சூடியவன் *முருகன்* என்று வர்ணிக்கிறது. தமிழர்களின் வீரம் மற்றும் கலாச்சாரப் பெருமையை அடையாளப்படுத்தும் செங்காந்தள் மலரின் பெயரையே இவ்ஆய்வுநூல் வரிசைக்குச் சூட்டுவதழில் அகமகிழ்வடைகிறேன்.

செங்காந்தளின் அழகிய முகை தன் இதழ் விரியும் வரை வண்டுகளைக் காத்திருக்க வைக்காமல் வண்டு வந்தவுடன் அதனை எதிர்நோக்கி தம் இதழை விரித்து தேனைத் தந்து வண்டினை மகிழ்ச்சிப்படுத்தும். செங்காந்தள் தன்னுள் உள்ள தேனை அடக்கி வைத்திருப்பது போன்று கல்தோன்றி மண்தோன்றா காலந்தொட்டே தமிழ்மொழி அரிய இனிய செய்திகளைத் தன்னுள் அடக்கி வைத்துள்ளது. தேனைப் பருக வண்டுகள் அணிவகுப்பது போல் தமிழ்ச் சமூகம் தமிழ்த்தேன் பருக தமிழ்ப்பேராசிரியர்கள், ஆர்வலர்கள் தங்கள் எழுத்தாற்றலை அர்ப்பணிக்க ஆயத்தமாயுள்ளனர்.

முருகன் என்றால் அழகன். அவன் கார்த்திகை மலரைச்சூடி பேரழகுடன் திகழ்வது போல் தமிழின் பல்வகை இலக்கிய செய்திகளைப் புதிய ஆய்வு நோக்கத்துடன் தமிழ்மொழியில் மாலையாகத் தொடுத்து வெளிக்கொணர்வதில் இச்செங்காந்தள் பயணம் இனிதே மலர்கிறது. கம்பராமாயணத்தைப் பற்றிய புதுமையான தலைப்புகளில் நான்கு கட்டுரைகள் கல்வி ஆர்வம் கொண்ட தமிழ்ப் பேராசிரியர்களால் எழுதப்பட்டுள்ளது. தமிழ் ஆர்வலர்களுக்காகத் துளிர்விடும் ஏழாம் புத்தகப் பகுதியின் பயணத்திற்குச் **செங்காந்தள் - கம்பராமாயணம்** என்று பெயரிட்டது சாலப் பொருந்தும்.

# உள்ளடக்கம்


| வ.எண் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|
| 1. | கம்பன் புனைந்த பாத்திரப் பண்புகள்<br>**The Characteristics of the Characters of Kamban**<br>முனைவர் ஜெ.கவிதா / Dr J. Kavitha | 1-20 |
| 2. | கம்பராமாயணத்தில் ரகு வம்சமும் நிமி வம்சமும்<br>**Raghu Dynasty and Nimi Dynasty in *Kambaramayana***<br>முனைவர் சே.பிரேமா / Dr S. Prema | 21-37 |
| 3. | கம்பன் கண்ட அனுமன்<br>**Kamban's Hanuman**<br>திருமதி பெ. பாரதி / Mrs. P. Bharathi | 38-71 |
| 4. | கம்பராமாயணத்தில் மகளிர் - பன்முகப் பண்புகள்<br>**Women in Kambaramayanam – Multi-Faceted Quality**<br>முனைவர் ம.ஆனந்தவள்ளி / Dr M. Anandavalli | 72-99 |

# 1

## கம்பன் புனைந்த பாத்திரப் பண்புகள்

## The Characteristics of the Characters of Kamban

**முனைவர் ஜெ.கவிதா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

பூசாகோ அர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோவை-04

**Dr J.Kavitha,** Assistant Professor, Department of Tamil,

PSGR Krishnammal College for Women, CBE-04.

**ORCiD:** http://www.orcid.org/0000-0002-3938-1985

**DOI: 10.5281/zenodo.6966956**

### Abstract

*Kambaramayanam prevails not only as a famous epic but also as a crown of social cohesion, and treasury of Tamil culture. This great production of Kambar has a lot of in-depth thoughts in it. Kambar is always known for his excellency in poetry. He is the emperor of poems who gave us this great epic with a lot of human values as well. Lots of appreciation quotes like "Kalviyil Periyar Kambar", "Kamban Veetu Kattuthariyum Kavipaadum" etc... suites only this great poet. In this epic, he has shown us a lot of emotions, more valuable thoughts etc. Great God like Rama, Great qualities of Lakshman, Sacrificing heart of Barathan and also some of the general things to be followed by the common man are given. Faith in God, sincerity, responsibility, hard work, kindheartedness, etc. Kambaramayanam is one of the sweetest poems and one which is special for the Tamil language. It gives the historical knowledge of Ramayana. It is a different one because lord Rama has taken birth as a human being and also he faced all the struggles and problems to survive in this world. Kambar has given a fantastic characterisation for Lakshman, who is the brother of Rama. He is a very strong person who is ready to give even his soul to his brother. The other brother of Rama was Barathan, who is as equal to Ramar in all aspects and as well King Dhasharadhan is very much proud of his sons. Of course, all this pride holds for Kambar, who gave us this ethical epic poem and a poem which serves as proud evidence for the Tamil language. That's why Ilangovadigal said, "I had never seen a poet like Kambar". Hence, this chapter elucidates the characteristics of the characters of Kamban.*

**Keywords:** Kambar, *Kambaramayanam*, Characterisation, Characters, Kind-heartedness.

### முன்னுரை

வானம் அளந்தது அனைத்தும் அளந்திடும் இவ்வண்மைத் தமிழ்மொழியில் வழங்கப்பெற்று, தமிழ்ப்பண்பாட்டின் கருவூலமாகவும், உலகளாவிய உயர்நோக்கின் இருப்பிடமாகவும் சமுதாய ஒருமைப்பாட்டின் மகுடமாகவும் திகழ்வது ஆழமுடைத்தாய கம்பனின் மகா காவியம், கம்பர் ஒரு பெருங்கவிஞர், கனவும் நினைவும் பொருந்திய ஒரு

தமிழ்ச்சுரங்கம், கல்வியில் பெரியவர் கம்பர் என்ற முதுமொழியும், விருத்தமென்னும் ஒண்பாவிற்கு உயர் கம்பன் என்ற பாராட்டும், கம்பநாடன் கவிதையிற்போல கற்றோர்க்கு இதயம் களியாதே என்ற புகழுரையும் கம்பனுக்கே பொருந்தும். பாத்திரப்படைப்பில் கம்பருக்கு இணை அவரே இக்கட்டுரை நடையில் நின்றுயர் நாயகன் மானுடனாக அவதாரம் எடுத்து நடைபயின்ற தன்மையையும், பரம்பொருளுக்குச் சேவை செய்வதையே வாழ்வின் நோக்கமாகக் கொண்ட துஞ்சல்… நயனந்து ஐயன் இலக்குவனின், உயர்பண்புகளையும் பதவி வந்தபோதும் அதைப்புறந்தள்ளி, பாசத்திற்காக எங்கும் தூய உள்ளம் கொண்ட பரதனின் ஆளுமையையும் இக்கட்டுரையில் புலப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாத்திரங்களின் திறமைகள், நடத்தைகள், செயற்பாடுகள், தலைமைப்பண்புகள், சான்றாண்மை, பேராண்மை, இறையாண்மை என்கின்ற மிகப்பெரும் தன்மைகளை கொண்ட கம்பனின் பாத்திரப் பண்புகளை நோக்கியே இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளன.

**கம்பராமாயணத்தில் மானுட இராமன்**

தெள்ளுதமிழ்த் தீஞ்சுவை கூட்டி, தேன்கலந்து பால்கலந்து தந்தது போல் ஒன்பான்சுவைகளையும் ஒருசேரச் சேர்ந்தளிப்பது கம்பராமாயணம். வால்மீகியிடமிருந்து பெற்ற காவியச் சுவையை அடித்தளமாக அமைத்துக் கொண்டு கம்பன் வீட்டுத் தறியில் நெய்யப்பட்ட பல்வண்ணப் பட்டாடை கம்பராமாணயம். இறைவனின் அவதாரத் தன்மையில் ஒன்றாக இராமாவதாரத்தில், இறைவனாகிய இராமன் தலைமைப் பாத்திரமாயினும், இறைநிலையிலிருந்து தனித்துவப் படுத்தி, அவனை எண்வகை மெய்ப்பாடுகளைக் கொண்டு திகழும் சாதாரண மானுடனாகப் படைத்துக் காட்டியிருக்கின்றார் கம்பர். இம்மண்ணில் மனிதனாகப் பிறந்து, பல துன்பங்களைக் கடந்து அழுது புலம்பி, இன்பங்களைத் துய்த்து மகிழ்ந்து மனநிறைவு பெறும் சாதாரண மனிதனாக இராமன் காட்சியளிக்கின்றான். காலகாண்டம், அயோத்தியாகாண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தரகாண்டம், யுத்தகாண்டம் என்னும் ஆறுபெருங் காண்டங்களில் ஆரண்ய காண்டத்தில் கம்பர் காட்சிப்படுத்தும்; இராமனின் மானடப் பண்புகளை ஆராயலாம்.

**மானுட விளக்கம்**

ஐந்தறிவைப் பெற்றுள்ள மாக்களிலிருந்து வேறுபட்டு, ஆறாவது அறிவாகிய சிந்தனை அறிவின்வழி அல்லனவற்றைத் தவிர்த்து நல்லனவற்றைச் செய்வது மானுடப் பண்பு எனலாம். நிலையில்லாத இவ்வுலகில் அறவாழ்வு வாழ்ந்து நிலைபேறு பெறுவது மானுட மகிமை. இன்பத்தை மட்டுமே விரும்புவதும் ஏற்றுக்கொள்வதும் மனித மனத்தின்

**ISBN NUMBER: 978-93-91115-78-4**

விருப்பமாக இருந்தபோதும் வாழ்க்கையெனும் நாணயத்தின் இருப்பக்கங்களைப் போல இன்பமும் துன்பமும் இணைந்திருப்பதால், இன்பம் கண்டபோது மகிழ்வதும், துன்பம் கண்டவிடத்துத் துடித்துப் புலம்புவது மனிதனின் இயல்பாகிவிட்டது. மகாகவி பாரதி கம்பன் என்றொரு மானுடன் வாழ்ந்தது இந்நாடு என்று பாடுமிடத்தில் கம்பனின் மானுட இதயம், அவன் படைத்த காவியத்தின் அனைத்து சொற்களிலும் மிளிர்வதை உணர்த்துகின்றார்.

இராமனைக் குணங்காளல் உயர்ந்த செம்மல் என்று காவியம் முழுவதும் வலியுறுத்திச் சொல்லும் கம்பர் சிலவிடங்களில் மானுடம் இடர்ப்படுவதைக் காட்டுகின்றார். இராமனைக் காண வந்து சுக்கிரீவன் வணங்க நம்பியும் தம்பியும் அவன் உள்ளத்தில் குடிபுகுந்து விடுவதாகக் காட்டி,

**"தேறினன் - அமரர்க்கு எல்லாம் தேவர்ஆம் தேவர் அன்றே**

**மாறி இப்பிறப்பில் வந்தார் மானிடர் ஆகி மன்னோ;**

**ஆறு கொள் சடிலத்தானும், அயனுமம், என்று இவர்கள் ஆதி**

**வேறுஉள குழுவை எல்லாம் மானுடம் வென்றது அன்றே" (நட்புக் கோட் படலம் : பா.3804)**

என்று வியப்படைவதாகக் காட்டுகின்றார். இப்பாடலில் கம்பன் இராமபிரானை மானுடம் என்ற சொல்லால் சுட்டுகின்றார். உடைந்தவர்க்கு உதவுதலே ஆண்மை நோக்கில் அகலிகையின் வரலாற்றில் கம்பர் மனிதன் பாடியுள்ளார். தவறுகளை மன்னிக்கின்ற குணம் மனிதப்பண்புகளில் தலையானது. பிழை செய்தவர்களும் உய்வு பெறவேண்டும்; எதற்கும் கழுவாய் உண்டு என்னும் இப்புண்பு இராமபிரானிடம் நிறைந்திருந்தது.

இராமபிரான் சிறுபிள்ளைப் பிராயத்தில் கூனியின் முதுகில் உண்டை வில் தெறித்த செயலை நினைத்து, கூனியால் வீழ்ந்தேன் என்று கூறுகின்றார். இவ்வுலக மக்கள் தவறான வழியில் செல்லாமல் வள்ளுவரின் அறத்தின்வழியாக – மாமனிதர்களாக வாழவேண்டும் என்பதும், பண்புடையார் பண்டுண்டுலகம் என்னும் அறத்தை வலியுறுத்துவதும் இராமாவதாரத்தின் குறிக்கோள். இதற்காகவே பரம்பொருளாகிய திருமால் இம்மண்ணில் மனிதனாகப் பிறந்து நடந்த சரிதத்தைப் படைத்து, அவனை நடையில் நின்றுயர் நாயகனாகக் காட்டி, அவனிடம் ஒளிவீசும் மனிதம் என்னும் அழகைப் பல கோணங்களில் காட்டுகின்றார் கம்பர்.

**தந்தையும் மகனும்**

மகன் தந்தைக்காற்றும் நன்றி இவன்தந்தை எந்நோற்றான்கொல் எனும் சொல் என்னும் வாக்கிற்கேற்ப தந்தைக்குப் பெரும்பேற்றினைத் தேடித் தருபவனாக இராமன் காட்சி தருகின்றான். சாடாயுகாண் படலத்தில் சடாயு இராமனைப் போற்றுமிடத்தில்,

**ISBN NUMBER: 978-93-91115-78-4**

**"உந்தை உண்மையன் ஆக்கி, உன் சிற்றவை**

**தந்த சொல்லைத் தலைக் கொண்டு, தாரணி,**

**வந்த தம்பிக்கு உதவிய வள்ளலே!**

**எந்தை வல்லது யாவர் வல்லார்? எனா" (சடாயுகாண் படலம் : பா.2723)**

என்ற பாடலில் உன் தந்தையாம் தயரதனை வாய்மையாளன் என்று நிலைநாட்டி, உன் சிறிய தாயாராகிய கைகேயி இட்ட கட்டளையை சிரமேற்கொண்டு, உனக்கு உன் தந்தை அளித்த அரசுச் செல்வத்தை உன்பின் பிறந்த தம்பியாம் பரதனுக்குக் கொடுத்த கொடை வள்ளலே, என் தந்தை போன்றவனே நீ செய்ததைப் போல் உலகில் செய்யும் திறமை கொண்டவர் எவருமில்லை என்று சடாயு போற்றுகின்றார். இராமனைத் தந்தை போன்றவன் என்றும், ஒரு தந்தை தன் மகனுக்குச் செய்யும் கடமைகளை இராமன் எனக்குச் செய்தான் என்றும் குறிப்பிடும் இடத்தில் புறநானூறு பாடலை நினைவூட்டுவது சிறப்பு

**"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே**

**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே**

**வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே**

**நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே**

**ஒளிறவாள் அருஞ்சமம் முருக்கிக்**

**களிறுஎறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே" (புறம் : 312)**

மேலும் சடாயு இராமனை மகனே என விளித்து, என்னையும் தயரதச் சக்கரவர்த்தியையும் அளவில்லாத பெரிய புகழ் அடையச் செய்தவனே நீயே வல்லவன் என்று போற்றிமிடத்து மன்னனையும் என்னையும் என்றதால் தயரதனையும் தம்மையும் ஒருவராகவே கருதியதும், அவன் புகழ் தம் புகழாக, அவன் பிள்ளை தன் பிள்ளையாகக் கொண்டதும் வெளிப்படகின்றது.

**பெண்ணிடம் மயங்கும் மனிதப்பண்பு**

சூர்ப்பணகைப் படலத்தில் இராமனும் சீதையும் இயற்கை அழகை ரசித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களைக் கண்ட சூர்ப்பணகை இராமனின் அழகில் மயங்கி அறிவிழந்து உணர்வு பொங்கக் கதிரவனைப் பழிக்கின்றாள். தன் அரக்கக் கோலத்தை மாற்றி திங்களின் சிறந்த ஒளிர் முகத்தள் செவ்வியள் பொங்கு ஒளி விசும்பினில் பொலியத் தோன்றினாள். தாமரைப் பாதம் இளமயில் நடை, வஞ்சிக்கொடியெனத் தோற்றம் கொண்ட சூர்ப்பணகையைக் கண்ட இராமன்,

**"பேர் உழைய நாகர் - உலகில், பிறிது வானில்,**

**பாருடையின், இல்லது ஒரு மெல் உருபு பாரா,**

**ஆருழை அடங்கும்? அழகிற்கு அவதி உண்டோ?**

**நேரிழையர் யாவர், இவர் நேர்? என நினைத்தான்" (சூர்ப்பணகைப் படலம் : பா.2767)**

என்ற பாடலில், நாகலோகம், சொர்க்கலோகம், நிலவுலகம் ஆகிய மூவுலகங்களிலும் காணமுடியாத பெண் வடிவாகவுள்ள அவளைப் பார்த்து, இவள் அழகு யாரிடத்து அமையும்? இவள் அழகிற்கு எல்லை உள்ளதோ? மகளிர் இவளுக்கு ஒப்பானவள் யார் உள்ளார்? என்று வியந்து பாராட்டுகின்றான். ஏற்கனவே திருமகளைப் போன்ற வடிவம் கொண்ட சீதாப்பிராட்டியை மணந்து இல்லறம் நடத்திக் கொண்டிருக்கும் இராமன், மீண்டும் ஒரு பெண்ணைப் பார்த்தவுடன் அவள் அழகில் மயங்கிப் பேசுதல் என்பது சாதாரண மனிதனுக்கு இயல்பாக அமையுமே தவிர இறைவனுக்குப் பொருந்தாது என்பதுதான் நிதர்சனமான உண்மை. இதற்கும்மேல் ஒருபடி சென்று, தன்னை மணந்து கொள்ளுமாறு சூர்ப்பணகை வேண்டியவுடன்,

**"ஒருவனே உலகம் மூன்றிற்கு ஓங்கு ஒரு தலைவன், ஊங்கில்**

**ஒருவனோ குபேரன், நின்னோடு உடன்பிறந்தவர்கள்; அன்னார்**

**தருவரேல், கொள்வேன்; அன்றேல், தமியை வேறு இடத்துச்சார**

**வெருவுவென் - நங்கை என்றான்; மீட்டு அவள் இனைய சொன்னாள்"**

**(சூர்ப்பணகைப் படலம் : பா.2784)**

என்று கூறுகின்றான். உன் சகோதரர்களாகிய மூன்று உலகங்களுக்கும் சிறப்பில் ஒப்பில்லாத தலைவனாம் இராவணனும், செல்வத்தில் ஒப்பில்லாதவனாம் குபேரனும் உன்னைக் கொடுப்பார் எனில் ஏற்றுக் கொள்வேன் என்று கூறுகின்றான். அழகு என்பது அனைவரையும் மயக்கும் தன்மை கொண்டதாக இருப்பினும் இல்லறத்தில் இருப்பவன் மற்றொரு மங்கையை மணக்கத் துணிதல் என்பது சாதாரண செயல் அல்லவே? சபலபுத்தி கொண்டவர்கள் ஆண்வர்க்கம் என்பதற்கு இதுவே சான்று. அதுவும் அன்பில் ஊறித்திளைத்த சீதை - இராமனின் இல்லற வாழ்வினைச் சிறிதும் கூட எண்ணிப் பார்க்காது, சூர்ப்பணகையை மணம் செய்ய எண்ணும் இராமன் ஒரு மானுடனே. தான் செய்வது தவறா? சரியா? என்று ஆய்ந்தறியாமல் செயல்படுவது மனிதக்குணமே தவிர அக்குணம் எவ்விடத்தும் தெய்வத்திற்குப் பொருந்தி வராது. ஒரு அழகிய பெண்ணோடு சேரும் பாக்கியம் கிடைக்கப்பெற்றதை எண்ணி, ஒரு அருஞ் செல்வத்து யாண்டும் உரையவும் பெற்றேன் என்று அவளை, அனைத்துச் செல்வங்களாகவே உணர்கின்ற மனநிிலை, கிடைத்தற்கரிய பொருளாகப் பெண்ணைக் கருதும் இயல்புநிலை கொண்டவனாக இராமன் திகழ்கின்றான்.

**ISBN NUMBER: 978-93-91115-78-4**

**“செங்கயல் போல் கருநெடுங் கண் தேமரு**

**தாமரை உரையும் நங்கை இவர்" (சூர்ப்பணகைப் படலம் : பா.2850)**

என்ற வரிகளில் இராமன், இவள் அழகி; இவள் அதைவிட அழகி என்று ஒப்பிட்டுப் பார்க்கின்ற மனிதமனம் கொண்டவனாகக் காணப்படுகின்றான். சூர்ப்பணகையைக் கடிந்து கொள்ளும் சீதையிடமும், சூர்ப்பணகை செய்த பிழை என்ன? என்று வினவும் இராமன் அவளின் வஞ்சக எண்ணத்தை அறிய முடியாதவனாகவும், இயல்பான மனிதனாகவும் தெரிகின்றான்.

**மானுடப் பண்பும் அழகுவயப்படுதலும்**

மாரீசன் வதைப்படலத்தில், நிகரில்லாத ஒளிபொருந்திய மின்னுகின்ற தங்கவடிவம் கொண்ட மானுருவில் வரும் மாரீசனைக் கண்ட சீதை அதன் அழகில் மயங்கி,

**“இம் மான் இந் நிலத்தினில் இல்லை எனா,**

**எம்மான் இதனைச் சிறிது எண்ணல் செயான்;**

**செம் மானவள் சொல்கொடு, தே மலரோன்;**

**அம்மானும் அருத்தியன் ஆயினனால்" (மாரீசன் வதைப்படலம் : பா.3286)**

என்று கூறியவுடன் சற்றும் சிந்தியாதவனாய் மான் போன்ற சீதையின் சொற்களை ஏற்றுத் தானும் மானின்மேல் விருப்பம் கொண்டவனாகின்றான். பெண்ணின் விருப்பத்தை நிறைவேற்றி வைப்பது ஒரு ஆண்மகனின் கடமை என்பதை மட்டுமே எண்ணிக் கொண்ட இராமன், பொய்மான் என்று இலக்குவன் சொல்லியும் கேட்காமல் அதைப் பின்தொடர்கின்றான். இம்மாயமான் போன்றதொரு படைப்பு இயற்கையில் இல்லை என்னும் ஆராய்ச்சி எண்ணம் தோன்றாத மானுட இயல்பினை உடையவனாகின்றான். மேலும் ஒரு சாராசரி மனிதனைப் போலவே அவசரப்பட்டுச் செயல்படும் பாத்திரமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளான். இராமன் இலக்குவனை நோக்கிப் பேசும் பாடல்

**“நில்லா உலகின் நிலை, நேர்மையினால்**

**வல்லாரும் உணர்ந்திலர்; மன் உயிர்தாம்**

**பல் ஆயிரம்கோடி பரந்துளதால்;**

**இல்லாதன இல்லை - இளங்குமரா!" (மாரீசன் வதைப் படலம் : பா.3289)**

என்பதாகும். உலகின் இயற்கை முழுவதையும் யாரும் கணித்து அறிந்ததில்லை. அதிலும் நீயோ இளங்குமரன் ஆனபடியால் புதிய ஒன்றை இல்லையென மறுத்தல் பொருந்தாது என்று சொல்லி இலக்குவனைத் திசைதிருப்பும் அவசர எண்ணம் கொண்ட மானுட இராமனுக்கு, விதி தவறாமல் பயணிக்கும் என்ற கம்பர் வாக்கும் மனிதனாகவே சுட்டுகின்றது.

ISBN NUMBER: 978-93-91115-78-4

**“பொய்மானாகிய மாரீசனைக் கண்டு மயங்கிய இராமன்,**

**'என் ஒக்கும் என்னல் ஆகும்? இளையவ! இதனை நோக்காய்;**

**தன் ஒக்கும் உவமை அல்லால், தனை ஒக்கும் உவமை உண்டோ?**

**பல், நக்க தரளம் ஒக்கும்; பசும் புல்மேல் படரும் மெல் நா**

**மின் ஒக்கும் செம்பொன் மேனி வெள்ளியின் விளங்கும் புள்ளி" (மாரீசன் வதைப் படலம் : பா.3294)**

என்ற பாடலின்வழி மானின் தோற்றத்தைப் பாராட்டுகின்றார். இதனைப் போன்ற ஒன்று என்று வேறுபொருள் உலகில் ஏது? முத்துப்போன்ற பற்கள்; பச்சைப் புற்களின் மீது செல்லும் இதன் மெல்லிய நாக்கு; மின்னலைப் போன்ற சிவந்த மேனி; உடலில் உள்ள புள்ளிகளோ வெள்ளி போன்றுள்ளது என்று பலவாறு உரைக்கின்றான். அம்மான் மேல் இராமன் கொண்டுள்ள மாயையிலிருந்து விடுபட வேண்டும் என்பதற்காக காரியம் என்னை ஈண்டுக் கண்டது கனக மானேல்? எனக் கேட்ட இலக்குவனை நோக்கி, வனவாசம் முடிந்து அயோத்தியில் செல்லு:ம் போது சீதைக்கு விளையாட்டு துணையாக இருக்கும் என்று பதிலுரைக்கின்றாள். இம்மாய மானினால் ஏற்படப் போகும் துன்பங்களை உணராத மனிதன் இராமன் எனலாம்.

**“முன் நின்ற முறையின் நின்றார் முனிந்துள வேட்டம் முற்றல்**

**பொன் நின்ற வயிரத் தோளாய் புகழ் உடைத்தாம் அன்று" (மாரீசன் வதைப் படலம் : பா.3300)**

என்று கூறி இலக்குவன் இராமனின் எண்ணத்தை மாற்றுவதற்கு முயற்சி செய்கின்றான். ஆனால் இராமன் அரக்கர்களை அழப்பதாக நாம் மேற்கொண்டுள்ள விரதத்தினின்றும் மாறிநிற்றல் ஆகாது என்று மறுத்துரைக்கும் பிடிவாதகுணம் கொண்டவனாகத் தோன்றுகின்றான். இலக்குவன் எவ்வளவோ எடுத்துக்கூறியும், வந்திருப்பது ஒருவேளை தப்பிச் சென்ற மாரீசனாகக்கூட இருக்கலாம் என்று இலக்குவன் எடுத்துரைத்தும் கேட்காத இராமன் சீதையின் ஊடலைத் தீர்ப்பதையே நோக்கமாக எண்ணி மானைத் தொடர்ந்து செல்கின்றான். எதையும் எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருளின் மெய்த்தன்மையை ஆராய்ந்து பெறும் அறிவு பெறாதவனாகக் காட்டப் படுகின்றான்.

**“காயம் வேறு ஆகி, செய்யும் கருமம் வேறு ஆகிற்று ஆன்றே?**

**ஏயுமே; என்னின் முன்னம் எண்ணமே இளவற்கு உண்டே;**

**ஆயுமேல் உறுதல் செல்லாம்; ஆதலால், அரக்கர் செய்த**

**மாயமே ஆயதே; நான் வருந்தியது என்றான் வள்ளல்" (மாரீசன் வதைப் படலம் : பா.3310)**

என்ற பாடலில் வடிவம் மானாக இருந்தும்கூட இதன் செயல்கள் இயல்பானதாக இல்லையே. தம்பி இலக்குவனுக்கு இது குறித் சிந்தனை தோன்றியதில் நியாயம் உண்டு. நான் நன்றாக ஆராய்ந்திருந்தால் இங்கு வந்திருக்கமாட்டேன். ஆனால் இப்போது நான் வருந்தி யாது பயன்? என்று வந்தபின் வருந்துகின்ற மனிதனாகின்றான். மானின் ஓட்டத்திற்கு ஈடுகொடுக்க இயலாமையை அடையும் இயல்புப் பாத்திரமாகவும், பட்டபின்பு புத்தி வந்தது என்பது போல நடந்து முடிந்துபோன செயல்களுக்காக வருந்துகின்ற பாத்திரமாகவும் இராமனைச் சந்திக்கின்றோம். மாயமானாகக் காட்சி தந்து இராமனின் அம்புக்குப்பலியான மாரீசனைக் கண்டு வருந்திய இராமன் சீதைக்கு என்னவாயிற்றோ? என்றெண்ணிப் பர்ணசாலைக்கு விரைகின்றான். அவளைக் காணாது, உடலை விட்டுப் போயிருந்த உயிர் திரும்பி வந்து தன்னுடலைக் காணாமல் திகைப்பது போலத் திகைத்து நின்றான். வாழ்வதற்கு ஒரு பொருளும் இல்லாதவன் போலும், செல்வத்தையெல்லாம் இழந்தவன் போலும் திகைத்து நின்றதாகக் கம்பர் காட்டுகின்றார்.

**“தேரின் ஆழியும் தெரிந்தனம்; தீண்டுதல் அஞ்சிப்**

**பாரினோடு கொண்டு அகழ்ந்ததும் பார்த்தனம்" (சடாயு உயிர்நீத்த படலம் : ப.3478)**

என்றவாறு தேரின் சுவடுகளைத் தேடுகின்றான். தேரின் சுவடு மண்ணில் மறைந்து போனதைக் கண்டவன் மெய்உற வெந்த புண்ணினூடு உறுவேல் என மனம் மிகப் புழுங்கி இனிநாம் எண்ணி என் செய்வது என்று இலக்குவனிடம் கூறி புலம்புகின்றான். ஒரு துன்பம் வந்தவிடத்து, அத்துன்பத்தைத் தீர்த்தற்பொருட்டு, நன்கு ஆய்ந்து ஒரு முடிவினை எடுத்துச் செயல்படுகின்ற தன்மையற்ற மானுடனாகவே இப்படலத்தில் கம்பர் இராமனைச் சித்தரித்துக் காட்டுகின்றார்.

**இலக்குவனின் பண்புநலன்கள்**

'கம்பநாடன் கவிதையிற்போல் கற்றோர்க்கு இதயம் களியாதே" என்னும் வாக்கிற்கேற்ப குறையாத கவிதையூற்று கம்பராமாயணம். ஆறுபெருங் காண்டங்களும் ஆறுமுகங்களாக ஒளிவீசிப் படைப்பின் நோக்கத்தைப் பறைசாற்றுகின்றன. இராமகாதையில் மூன்றாவதாக இடம்பெற்றுள்ள ஆரண்ய காண்டத்தில் காப்பிய வளர்ச்சியில் இரண்டாவது திருப்புமுனையாக அமையும் வகையில், அறம்தலை நிறுத்தி, தியோர் இறந்து உகநூறி தூயவர் துயர்துடைத்து நிலைபெறுத்தல் எடுத்துரைக்கப் பட்டுள்ளது. இக்காண்டத்தின் 13 படலங்களில் ஈடில்லாப் பேரருளாளனாகத் திகழும் இராமபிரானுக்கு கண்களாகத் திகழ்ந்து காட்சியளிப்பவன் இளையவனாகிய இலக்குவன். ஆரண்ய காண்டம் காட்டும் இலக்குவனின் பண்புநலன்களையும் புகலரிய பேராற்றலையும் விளக்கிக்காட்டுகின்றன.

ISBN NUMBER: 978-93-91115-78-4

**பண்பாட்டின் சிகரம் இலக்குவன்**

தனக்கு மூத்த உடன்பறப்பாகிய இராமனுக்காகத் தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்த ஓர் கர்மவீரனாகத் திகழ்பவன் இலக்குவன். அயோமுகிப் படலத்தில் அயோமுகியால் கவர்ந்து செல்லப்பட்ட இலக்குவன், அவளது அங்கங்களைக் குறைவபடுத்தி விட்டுத் திரும்பி வந்து இராமபிரானின் திருவடிகளை வணங்கி நிற்கின்றான். 'புன்தொழில் அனையவள் புகன்ற சீற்றத்தால் கொன்றிலை போதுமால்? கூறுவாய்" என்று கேட்ட இராமபிரானை நோக்கி,

**"துளைபடு மூக்கொடு செவி துமித்து உக**
**வளை எயிறு இதழொடு அரிந்து மாற்றிய**
**அளவையில் பூசலிட்டு அரற்றினாள் என" (அயோமுகிப் படல் : பா.3631)**

என்று இளையவன் விளம்பி நின்றான். அரக்கியின் மூக்கு முதலியவற்றை அரிந்ததனால் அவள் எழுப்பிய அவலப் பேரொலி கேட்டு இரக்கம் கொண்டு இலக்குவன் உயிர் போக்காது விடுத்தனன் எனலாம். ஒரு பெண் தவறிழைத்த போதும்கூட தண்டித்ததை அறிந்த இராமன், 'மனு முதல் மரபினோய் வல்லை" என்று பாராட்டுகின்றான். சீரொழுகு சான்றோர் சினம் நெறிமுறை பிறழாது என்பதை உணர்த்தவே மனுநெறி உணர்ந்தவன் என்னும் சொல் கையாளப்பட்டுள்ளது. பெண் என நினைத்த காரணத்தால், சினமடங்கல் பற்றிக் கூறியவை இலக்குவன் தன் செயலில் நெறிமுறை பேணுதலால் பண்பாட்டின் சிகரமாகவும் நெறிமுறைகளை உணர்ந்த உத்தமனாகவும் காட்டப்படுகின்றான்.

**நுண்மான் நுழைபுலன் மிக்கவன்**

மாயப் பொன்மானாய் மாரீசன் தோன்றிய நிலையில் அம்மாயமானைக் கண்டு சீதை மயங்குகின்றாள். சீதை அம்மானை விரும்பியதற்குக் காரணம் இராவணன் அழிவும், அறத்தின் புத்துயிர்ப்பும் ஒருசேர நிகழ வேண்டிய காலம் என்பதாலாகும் என்னும் கருத்து இவண் சுட்டத்தக்கது. பின்னர் வரப்போகின்ற துன்பத்தைப் பற்றி முன்னறிவிப்புச் செய்யும் சகுனம் போன்று சீதையின் முன்பு பொன்மான் தோன்றியதாகக் கம்பர் குறிப்பிடுகின்றார். பொன்னாலாகிய பளபளப்புத் தன்மை கொண்டதும், கை கால்கள் மாணிக்கங்களால் ஆகியதுமான அம்மாயமான் தனக்கு வேண்டும் என்பதைக் குறிப்பினால் உணர்த்துகின்றாள் சீதை. சீதையின் சொற்களைக் கேட்ட இராமபிரான், இம்மாயமான் போன்றதொரு படைப்பு இயற்கையில் இல்லை என்ற ஆய்ந்தறியும் நுண்ணறிவைக் கைக்கொள்ளாத எளியவனாய் மானின்மேல் விருப்பம் கொள்கின்றான். அப்போது இலக்குவன்,

**"காயம் கனகம் மணி, கால், செவி, வால்;**

**ISBN NUMBER: 978-93-91115-78-4**

**பாயும் உருவோடு இது பண்பு அலவால்;**

**மாயம் எனல் அன்றி மனக் கொளவே**

**ஏயும்? இறை மெய் அல என்ற அளவே" (மாரீசன் வதைப் படலம் : பா.3288)**

என்றுரைக்கின்றான். இயற்கைப் பண்புகளுக்கு மாறுபட்டதாகவும், மாயை என்னும் தோற்றத்தை உணர்த்துவதாகவும் காட்சி தரும் அந்த மானை எவ்வகையிலும் இது உண்மையாது அல்ல என்று உரைக்கின்றான். எதனையும் நுண்மான் நுழைபுலம் மிக்கவன் இலக்குவன் என்பது இங்கு பெறப்படுகின்றது. ஆனால் இங்கு மறுமொழியாக இராமன், 'மன் உயிர்தாம் பல் ஆயிரங்கோடி பரந்துளதால் இல்லாதன இல்லை இளங்குமரா" என்று பதில் கூறுகின்றான். மேலும் மானின் தோற்றத்தைக் குறிப்படும் இராமன், தனக்குத் தானே ஒப்பாக உவமை கூறத்தக்கதே அல்லாமல் இதனைப் போன்ற ஒன்று உலகில் ஏது? முத்துப்பற்கள்; மின்னல் நாக்கு; பொன்னுடல் வெள்ளிப் புள்ளிகள்; கொண்ட இவ்விலங்கு காண்பதற்கரியது என்கின்றான். இவ்வுரையைக் கேட்ட இலக்குவன் அம்மானை உற்று நோக்கித் தன் மனதில் இது இயற்கையன்று என உறுதிகொள்கின்றான். இங்குக் காணப்பெறும் பொன்மானாகிய இதனால் நமக்கு என்ன பயன்? என்று கேட்டு இராமனை மாயையிலிருந்து மீட்டுவிட வேண்டும் என்ற ஆதங்கத்தில் பேசுமிடத்தில் இலக்குவனின் அறிவுத்திறம் மேலும் புலப்படுத்தப்பட்டுள்ளது.

**"வெய்ய வல் அரக்கர் வஞ்சம் விரும்பினார் வினையின் செய்த**

**கைதவ மான் என்று, அண்ணல் காணதி கடையின்" (மாரீசன் வதைப் படலம் : பா.3298)**

என்றவாறு அரக்கர்களின் தந்திரத்தாலும் வஞ்சனையாலும் உருவாக்கப்பட்டது என்பதை இறுதியில் உணர்வாய் என்று குறிப்பிடுகின்றார். இந்நிகழ்வினைப் பின்னால் நினைத்து இராமன் வருந்துகின்றான் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு இலக்குவனின் விடாப்பிடியான அறிவுக்கூர்மையும் கடமை உணர்வும் கம்பரால் முன்னிறுத்தப்பட்டுள்ளன.

பல்வேறு காரணங்களை முன்னிறுத்திப் பேசிய போதும் இராமன் மாயையிலிருந்து விடுபடாதது கண்ட இலக்குவன் முன்னோர் வெறுத்த வேட்டைத் தொழில் வேண்டாம் என்று புதிய உத்தியைக் கையாளுகின்றான். சாதுவான விலங்குகளை வேட்டையாடும் செயல் பெரியோர்களால் விலக்கப் பட்டதாகையால் இளங்கன்றாகிய அம்மானைப் பிடித்துத் துன்பறுத்த வேணடாம் என்று கூறுகின்றான். இராமனும் தன் கொள்கையில்; சிறிதும் தளராமல் இலக்குவனிடம் அரக்கர்களை ஒழிக்கும் செயலாகிய நம் விரதத்தை விட்டுவிடல் என்பது நகைப்பிற்குரிய செயலாகும் என்று மறுமொழி உரைக்க,

**"அடுத்தவும் எண்ணிச் செய்தல் அண்ணலே! அமைதி அன்றோ?**

**விடுத்து, இதன் பின் நின்றார்கள் பலர் உளர் எனினும் வில்லால்**

**தொடுத்த வெம் பகழி தூவித் தொடர்ந்தனென் விரைந்து சென்று**

**படுக்குவென் : அது அன்று ஆயின், பற்றினென் கொணர்வென்" (மாரீசன் வதைப் படலம் : பா.3302)**

என்று கூறித் தானே முன்வந்து செயலாற்றத் துடிக்கின்றான். இதனால் சீதை ஊடல்கொள்வான் என்பதை உணர்ந்த இராமன் இளையவனை சீதையைப் பாதுகாக்குமாறு பணித்து நிறுத்திவிட்டு மானைத் தொடர்ந்து செல்கின்றான். சிலம்பில் கோப்பெருந்தேவி ஊடல் கொள்வதைப் போன்று, இங்கு சீதை ஊடல் கொள்கின்றாள். பாண்டிமாதேவியின் ஊடல் பாண்டியனுக்கும் கண்ணகிக்கும் அவலத்தைத் தோற்றுவித்தது போல, சீதையின் ஊடல் இராமனுக்கும் சீதைக்கும் அவலத்தைத் தோற்றுவிப்பதற்குக் காரணமாகியது.

**இலக்குவன் அறிவுரை பகர்தல்**

மாயமானைப் பிடிக்கத் தானே முன்செல்வேன் எனப் புறப்படும் இராமனை நோக்கி இளையவனாகிய இலக்குவன், விசுவாமித்திர முனிவரின் யாகத்தினை அழிப்பதற்காக வந்த மூன்று அரக்கர்களில் ஒருவனாகிய மாரீசன் தப்பிப் போனான். அவன்தான் இந்த மானின் வடிவில் வந்துள்ளான் என்று ஐயம் கொள்கின்றேன். எதற்கும் கவனத்துடன் செயல்படுமாறு அறிவுறுத்துகின்றான். "வாழி! ஏகு!" என்றுரைத்து நிற்கும் கூறிய அறிவு மிக்க இலக்குவன் தான் சகோதரனுக்குக் கடைசிக் கணத்திலும் அறிவுரை கூறித் தெருட்டும் நுட்பம் வியப்பிற்குரிய செயலாகக் காட்டப் படுகின்றது.

**"கல் அகல் வெள்ளிடை கானின் நுண் மணல்**

**பல்லவம், மலர், கொடு படுத்த பாயலின்,**

**எல்லை இல் துயரினோடு இருந்து சாய்ந்தனன்**

**மெல் அடி இளையவன் வருட வீரனே" (அயோமுகிப் படலம் : பா.3634)**

என்ற பாடலில் கம்பர் சகோதரப் பாசத்தின் வலிமையையும், இலக்குவனின் கடமையுணர்வையும் வெளிப்படுத்திக் காட்டுகின்றார். மணல், தளிர்கள், மலர்கள் போன்றவற்றைக் கொண்டு படுக்கையை உருவாக்கி இராமனை துயில் கொள்ளச் செய்ததோடு, அவனுடைய திருவடிகளை மெதுவாகத் தடவி விட்டுத் துயர் நீக்கினான் என்றவிடத்து உடன்பிறப்புப் பாசத்தின் இலக்கணமாக ஒளி வீசுகின்றான் இலக்குவன்.

**இலக்குவனின் அறிவுக்கூர்மை**

மாரீசனாகிய மாயமானின் வேகத்தைத் தொடர்ந்து சென்ற இராமன் இறுதியில் தனது இராமபாணத்தை ஏவி மானை வீழ்த்தினான். வஞ்ச நெஞ்சமுடைய மாரீசன்

அக்கணமே விளவுபட்ட வாயினால் எட்டுத் திசைகளிலும் கேட்கும்படி 'சீதா இலட்சுமணா'' என்று இராமனின் குரலில் கூவி மலை விழுவது போன்று விழுந்தான். தன் குரலை மாற்றி இராமனின் குரலால் மடிந்துபோகும் வேளையிலும்கூட வஞ்சனை செய்யும் நோக்கில் 'சீதா லட்சுமணா'' என்று குரல் கொடுத்தான். மாரீசன் வீழ்ந்ததைக் கண்ட இராமனின் நிலையை,

**“வெய்யவன், தன் உருவொடு வீழ்தலும்,**
**செய்யது அன்று எனச் செப்பிய தம்பியை,**
**ஐயம் வல்லன்; என் ஆர் உயிர் வல்லன்; நான்**
**உய்ய வந்தவன் வல்லன் என்று உன்னினான்'' (மாரீசன் வதைப் படலம் : பா.3314)**

என்று காட்சிப்படுத்துகின்றார் கம்பர். என் தம்பி இளையவன் திறமையானவன்; வல்லமையுடையவன்; என்னைக்காக்க வந்த பேரறிவாளன்; என்று இராமபிரான் போற்றுகின்றான். 'ஆற்றல்தேரும் அறிவினன்; ஆதலால் தேற்றுமால் இளையவன்'' (3317) எனத் தனக்குத்தானே ஆறுதல் தேடிக்கொள்ளும் இராமபிரான், தம்பியின் அறிவுத்திறத்தையும் ஆறுதல் தரும் மாட்சிமையையும் எண்ணி மகிழ்கின்றான்.

மாரீசனின் அபயக்குரலைக் கேட்ட சீதை இராமனுக்குப் பெருந்தீங்கு நிகழ்ந்ததாக அஞ்சி, அழுது புலம்பி இளையவனைப் புறப்பட்டுச் சென்ற காக்குமாறு பணிக்கின்றாள். சீதையைத் தனியே விட்டுப் போவதற்கு எண்ணமில்லாதவனாகிய இலக்குவன் உண்மை நிலையை எடுத்துரைக்கின்றான். இராமன் அண்டங்கள் அனைத்திலும் வாழும் உயிரினங்களின் துணையிலலாமலேயே வெல்லும் ஆற்றல் கொண்டவன் என்பதையும், பஞ்சபூதங்களை அடக்கியாளும் திறனுடையவன் என்பதையும் கூறுகின்றான். 'கமலக் கண்ணனெக் கையினால் காட்டினாள்'' (2889) என்று கரன்வதைப்படலத்தில் குறிப்பிடப்படுவதையும், மந்திரப்படலத்தில் 'புண்டரீகக் கண் புரலவன்'' எனக் குறிப்பிடப்படுவதையும் கொண்டு இராமனின் அவதாரச் சிறப்பினை இரகசியத்தை எடுத்துரைக்கும் வலிமை கொண்டவனாக இலக்குவனை அறியமுடிகின்றது. இவ்வாறு இலக்குவன் உரைத்த மொழிகளைக் காதில் ஏற்காத சீதை,

**“ஒருபகல் பழகினார் உயிரை ஈவரால்;**
**பெருமகன் உலைவுறு பெற்றி கேட்டும், நீ**
**வெருவலை நின்றனை; வேறு என் யான், இனி**
**எரியிடைக் கடிது வீழ்ந்து இறப்பென், ஈண்டு'' (இராவணன் சூழ்ச்சிப் படலம் :**
**பா.3381)**

என்று கூறி இறப்பதற்குத் துணிகின்றாள். சீதையைத் தடுத்து நிறத்திப் பேசும் இலக்குவனின் உரையிலிருந்து ஊழ்வினையில் வலிமை புலப்படுத்தப் படுகின்றது. 'நின்ற

ISBN NUMBER: 978-93-91115-78-4

நின்நிலை இது நெறியிற்று அன்று" (3330) என்று சீதை கூறிய சுடுசொற்களால் வேடுகின்ற சிந்தை அடைந்தான் இலக்குவன் என்கின்றார் கம்பர். இங்கு அறத்தின் காவலும், விதியின் வலிமையும் ஒருங்கே இலக்குவனின் எண்ணத்தில் வெளிப்படுகின்றது.

சீதையைத் தேடிச் செல்லும் வழியில் பல தோளணிகளும் பல மகுடங்களும் கிடப்பதால், பலதோள்களும், பல தலைகளும் உடைய இராவணன் ஒருவனே சடாயுவொடு போர் செய்து சீதையைக் கவர்ந்து சென்றிருக்க வேண்டும் என்கின்றான் ஆனால் இராமன் சீதையைப் பிரிந்து மனக்கலக்கம் கொண்டிருப்பதனால் அவனால் ஊகிக்க இயலவில்லை என்றும் இலக்குவன் தனது அறிவுக்கூர்மையையும், கலங்காத மனம் உடையவனாய் இருந்ததால் இவ்வாறு சரியாக ஊகித்து உணர்ந்து கொண்டான் என்று கம்பநாடன் இலக்குவனின் அறிவுக்கூர்மையை உணர்த்துகின்றார்.

**துணிவு கூறும் தூய்மையோன்**

இராவணன் சீதையைக் கவர்ந்து சென்ற பாதையில் அவனது தேரின் சுவடுகள் தெரிவதையும், நிலத்தொடு பெயர்த்துக் கொண்டு போனதையும் உணர்ந்து கொண்ட இலக்குவன், இது யாரால் நடந்தது என்று வலிமை இல்லாதவர் போல் எண்ணிக்கொண்டிருப்பதைவிட அவனைத் தொடர்ந்து போதலே தக்கசெயல் என்று இராமனுக்கு அறிவுறுத்துகின்றான். சீதையைக் கவர்ந்து சென்றவனைத் தேர்ச்சக்கரப் பதிவுகள் ஓரிடத்தில் மறைந்து தேர் வானத்தை நோக்கி மேலெழுந்து போவதைப் போல் இருந்த நிலையக் கண்ட இராமன், வெந்தபுண்ணில் வேல் பாய்ந்தது போல் பாய்ந்தது எனத் துயருற்று, 'நாம் இனிச் செய்வது என்? இளவலே?" என்று கூறித் துவண்டு போகின்றான். அப்போதும் திடமான மனங்கொண்ட இலக்குவன் தேர் தென்திசையை நோக்கிச் சென்றுவிட்ட உண்மையை உணர்ந்து, வில்லில் இருந்து எழும் அம்புக்கு வானம் நீண்டது அல்ல : ஆதலால் கலக்கம் ஒழிக என்று ஆறுதல்படுத்தி செயலாற்றத் தூண்டுகின்றான். எத்துயரங்கள் வந்தாலும் அவற்றைக் கண்டு கலங்கிக் கண்ணீர் வடித்து நிற்பதால் பயன் ஒன்றும் இல்லை. அத்துன்பங்களைக் களைவதற்கான வழிகளை ஆராய்ந்து விரைவில் செயல்படவேண்டும் என்னும் கருத்தில் இலக்குவன் பேசுகின்றான். இராமபிரான் துன்பம் அடைந்து துவண்டுபோகும் இடங்களிலெல்லாம் அவனுக்கு ஆறுதல் மொழிகளைக் கூறி, உண்மைநிலையைத் தெளிவித்து, புத்துணர்வினை ஊட்டி, அவனைச் செயற்படுத்தும் ஊக்கியாகத் திகழ்கின்றான் இளையவன். மேலும் காலமறிந்து செயலாற்றல் என்னும் தன்மையை அறிந்து 'நின்ற தாழ்த்து ஒரு பயன் இலை" என்றுரைத்து வேகத்தைத் தூண்டி அல்லவை நீங்குவதற்கும், நல்லன நிகழ்வதற்கும் கருவியாகச் செயல்படுவதை அறியமுடிகின்றது.

**ISBN NUMBER: 978-93-91115-78-4**

சடாயு உயிர் நீத்த படலத்தில், சடாயுவின் இறப்பிற்கு அழுது தளரும் இராமனின் சொரூபமாக உள்ள அனைத்தும் கரைந்து தளர்ந்து போகின்றன.

**“அறம்தலை நின்றிலாத அரக்கனின் ஆண்மை தீர்ந்தேன்;**

**துறந்தனென், தவம் செய்கேனோ? துறப்பெனோ உயிரை? சொல்லாய்;**

**பிறந்தனென் பெற்று நின்ற பெற்றியால் பெற்ற தாதை**

**இறந்தனன்; இருந்துளேன் யான்; என் செய்கேன்? இளவல்! என்றான்" (சடாயு உயிர் நீத்த படலம் : பா.3532)**

என்ற பாடலில் இராமனின் தடுமாற்றமடைந்துள்ள மனநிலையைக் காட்டுகின்றார் கம்பர். 'விதியின் தன்மை பழியல விளைந்தது ஒன்றோ? நின்று இனி நினைவது என்னே? நெருக்கி அவ் அரக்கர் தம்மைக் கொன்றபின் அன்றோ? வெய்ய கொடுந்துயர் குளிப்பது?" என்று ஊழ்வினையால் மட்டுமே வருகின்ற தீங்கைத் தடுத்து நிறுத்த எவராலும் இயலாது என்பதையும், அதற்காக வேதனைப்பட்டுப் பயனிலை என்பதையும், அக்கொடியவர்களை அழித்தலே அறம் என்பதையும் இராமனுக்கு தெளிவாக எடுத்துரைக்கின்றான் இலக்குவன். மேலும், மனம் கலங்கிய இராமபிரானால் அறிய முடியாத ஊழ்வினையின் வலிமையைத் தான் அறிந்து உணர்த்தும் பண்புடையவாகக் காட்சி அளிக்கின்றான்.

**துரிசிலாத் திருமனத்தான் பரதன்**

அயோத்தியா காண்டத்தில் இடம்பெற்றுள்ள பாத்திரங்களில் பரதன் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளான். மந்தரை சூழ்ச்சிப் படலத்தில் கூனியின் வாயிலாக பரதன் காட்டப்படுகின்றான். வயதில் மூத்தவனுக்கு அரசுரிமை என்பதனை வைத்து, 'தயரதன் இருக்கும்பொழுதே அவனை விட இளையவனான இராமனுக்கு மணிமுடி சூட்டிவைக்கப்படும் என்ற போது, இராமனைவிட இளையவனான பரதனுக்கு ஏன் மணிமகுடம் அளிக்கப்படக்கூடாது" என்று கூனி வினவுமிடத்துப் பரதன் சுட்டப்படுகின்றான். மணிமகுடம் தரித்து அரசாள்வதற்குத் தகுதி பெற்றிருந்தாலும், அரசின் மீது கடுகளவும் பற்று வைக்காதவன் பரதன். இதுவே பரதனுக்குப் பெருஞ்சிறப்பாகக் கூறப்படுகிறது.

'பள்ளிப்படைப் படலத்தில்" தூதுவர் சென்று பரதனைச் சந்திக்கின்றனர். அப்போது தன் தந்தை திருமுடியோனின் நலத்தை வினவிப் பின் இராமபிரான், இலக்குவன் ஆகியோரின் சுகத்தை வினவ, அவர்களும் நலம்தான் என்ற உரையைக் கேட்டவுடனே தாழ்தடக் கைகளைத் தூக்கித் தன் தலைமேல் வைத்து இராமலக்குவர்கள் உள்ள திசையை நோக்கி வணங்கினான் என்கிறார் கவிச்சக்கரவர்த்தி. 'தலையின் ஏந்தினன் தாழ்தடக் கைகளே" என்று சுட்டுமிடத்து இராம அருள் உள்ளமும், பொன்திணிந்த தடக்கையால்

ISBN NUMBER: 978-93-91115-78-4

திருமுகத்தை தன் தலைமேற்கொண்டு போற்றும் நிலையில் பரதனின் அன்புள்ளமும், மன்னன் சார்பாக வந்து சேர்ந்த திருமுகத்தின்பால் காட்டும் மதிப்பைத் தெளிவாக்கும் மதிப்புறு உள்ளமும் தெளிவாகப் பட்டுள்ளது.

**அந்தமில் பெருங்குணத்தான்**

பரதன், தந்தை தயரதனை அரண்மனையில் தேடுகையில், கைகேயி அழைக்க, தன் தாயைச் சென்று வணங்கினான். தன் தந்தை தயரதன் எங்கே? என்று கேட்க நடந்தவற்றை எடுத்துரைக்கும் கைகேயி 'அவர் பரமபதத்தை அடைந்துவிட்டார்" என்று சொல்லமுடிக்க 'ஐயோ நான் செத்தேன்" என்று அலறிக் கைகளை விரித்துக் கொண்டு கீழே விழுகின்ற காட்சியின் பரதனின் கள்ளங்கபடமற்ற வெள்ளை உள்ளம் கவிச் சக்கரவர்த்தியால் காட்டப்பட்டுள்ளது. துயரம் மிகைப்பட்ட பரதன்,

**“எந்தையும், யாயும், எம் பிரானும் எம் முனும்**

**அந்தம் இல் பெருங் குணத்து இராமன்; ஆதலால்**

**வந்தனை அவன் கழல் வைத்தபோது அலால்,**

**சிந்தை வெங் கொடுந் துயர் தீர்கலாது என்றான்" (பள்ளிபடைப் படலம் : பா.2159)**

என்று தன் துன்பம் தீர்வதற்கு இராமபிரானின் திருவடிகளை 'அந்தம் இல் பெருங்குணமுடைய திருவடிகளை" வணங்குவதுதான் வழி என்று சுட்டுகின்ற இடத்தில், தன்னை இராமனுக்காக மகன் - அடியான் - தம்பி ஆகிய மூன்று நிலைகளில் ஆட்படுத்திக் கொள்கின்ற அன்பு சான்ற 'அந்தமில் பெருங்குணத்தான்" ஆகப் பரதன் காட்சியளிக்கின்றான். வள்ளுவரின்,

**“தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்**

**மனக்கவலை மாற்றல் அரிது"**

என்ற வரிக்கினை இங்கு ஒப்புநோக்குவது சிறப்பு.

**“வாக்கினால் வரம் தரக் கொண்டு மைந்தனைப்**

**போக்கினேன்; வனத்திடை ; போக்கி பார் உனக்கு**

**ஆக்கினேன்; அவன் அது பொறுக்கலாமையால்**

**நீக்கினான் தன் உயிர், நேமி வேந்து" (பள்ளிபடைப் படலம் : பா.2166)**

என்று தான் முன்பு தயரதனிடம் பெற்றிருந்த இருவரங்களில், மைந்தனை வனத்திற்குச் செல்லச் செய்தேன்; மற்றொன்று பரதனாகிய உனக்கு உலக ஆட்சியைச் செய்து வைத்தேன் என்கிறாள் கைகேயி. இவற்றைக் கேட்ட பரதன் மிகுந்த சினம் அடைந்ததும் வானவர்கள் அஞ்சினர்; அவுணர்கள் துஞ்சினர்; சூரியன் மறைந்தான்; கூற்றவனுமம் அஞ்சி தன் கண்ணை மூடினான்.

ISBN NUMBER: 978-93-91115-78-4

**“துடித்தன கபோலங்கள்; சுற்றும் தீச் சுடர்**

**பொடித்தன மயிர்த் தொளை; புகையும் போர்த்தது;**

**மடித்தது வாய்; நெடுக மழைக் கை மண் பக**

**அடித்தன, ஒன்றொடு ஒன்று அசனி அஞ்சவே" (பள்ளிபடைப் படலம் : பா.2168)**

என்றவாறு, சினத்தின் அறிகுறிகளாகிய எழும் பரதனின் மெய்யில் தோன்றியதாம். தனக்காகத் தன் தாய் செய்த இச்சூழ்ச்சியை எண்ணி எண்ணித் தவித்த பரதன், அவளைக் கடிந்து இராமனுக்கு அஞ்சித்தான் தன் தாயைக் கொல்லாமல் விட்டான் என்பதை,

**“கொடிய வெங் கோயத்தால் கொதித்த கோளரி**

**கடியவள் தாய் எனக் கருதுகின்றிலன்**

**நெடியவன் முனியும் என்று அஞ்சி நின்றனன்**

**இடிவரும் அனைய வெம் மொழி இயம்புவான்" (பள்ளிபடைப் படலம் : பா.2171)**

என்ற வரிகளில் குறிப்பிடுகின்றான் கம்பநாடன்.

கையேயியைக் கொல்லாமல் விட்டதற்கு இராமனின் மேல் பரதன் வைத்திருந்த பக்தியும் அன்பும் காரணமாகின்றன, கைகேயியை 'அரவு", 'அறநெறிக்குக் கோள்", 'மாயீர்",'பேயீர்", 'கணவன் உயிர் உண்டீர்", 'கன்றும் தாயும் போல்வன கண்டும் கழியீர்" என்று பலவாறு இகழ்ந்தும் தாயின் கொடுமை மிகுதியினைச் னுட்டிம் பழித்தான். பரதன் பழிக்கு அஞ்சும் பண்பு உள்ளம் கொண்டவனாகவும், இராமனின்பால் அன்பிரக்கம் கொண்டவனாகவும் விளங்குகின்றான். கைகேயி செய்த பழிக்கு, 'நின்பிழை உண்டோ? பழி உண்டோ? என்றேனும் தான் என்பழி மாயும் இடம் உண்டோ? என்று வருந்திப் பழிக்கு அஞ்சும் பண்பாளனாகக் காட்டப்படுகின்றான். கைகேயி செய்தவை அனைத்தும் தான் செய்ததாக, அரசை ஏற்க மறுத்து இருப்பவனாகவும் இவ்வுலகம் தூற்றும் என்று எண்ணும் பாத்திரமாகவும் ஒரு பரிசுத்த விக்கிரகம் போன்றும் படைக்கப்பட்டுள்ளான்.

அறிவிற் சிறந்தார் சொல்லும் நல்லுரைகளை எடுத்துரைத்து மறந்தாய் செய்தாய் ஆகுதி என்று தான் அறியாமல் செய்துவிட்டதாக எண்ணுவாய் என்று அறிவுறுத்தும் பரதன், தனக்குப் பழியைத் தேடிக் கொடுத்த தாயைத் திருத்த ஒரு வழிகாட்டும் விளக்காகவும், தனக்கு ஏற்பட்டுள்ள பழிக்குப் பிராயச்சித்தம்; தேடிப் பெருந்தவம் புரியும் உள்ளமாகவும் காட்சி தருகின்றான். தன்னை ஈன்ற தாய் செய்த சூழ்ச்சியின் பயனாக நீங்காத பெரும் பாவத்தைப் பெற்ற பரதன், தன்னிடம் அன்பாக இருந்த கோசலை, 'கேகயர் கோமகன் இழைத்த அஞ்சனையை முன்னமே அறிந்திலை போலும்" என்று கேட்டது மட்டுமின்றி 'மன்னர் மன்னவா" என்று விளிக்கின்ற நிலையில், குற்றமற்ற பரதனுக்கு அச்சொற்கள் நரக வேதனையைக் கொடுத்தது.

"தீய செயல்களைச் செய்த தீயவர்கள் செல்லும் நரக கதிக்குத் தானும் செல்வேன் ஆகுக" என்கின்றான். தீயவர்கள் செயல்களைச் சொல்லும் பரதன், தன்னையே அச்சூழ்நிலைக்கு ஆளாக்கிச் சூளுரைக்கின்றான்.

**"கன்று உயிர் ஓய்ந்து உகக் கநற்து பால் உண்டோன்,**

**மன்றிடைப் பிறர் பொருள் மறைத்து வவ்வினோன்,**

**நன்றியை மறந்திடும் நயம் இல் நாவினோன்,**

**என்ற இவர் உறு நரகு என்னது ஆகவே" (பள்ளிபடைப் படலம் பா.2206)**

என்றும், 'தீயன கொடியவள் செய்த செய்கையை நாயினேன் உணர்ந்து அதற்கு உடன்பட்டு வரம் பெறுதலும், இராமன் காட்டுக்குச் செல்லுதலும் நடந்திருக்குமாயின் இத்தன்மைகளை யான் அடைவேனாக" என்றும் பரதன் சூளுரைப்பதிலிருந்து நல்லறங்கள் பலவற்றை எடுத்துரைக்கின்றார் கம்பர். அந்த நல்லறங்களைக் காட்டும் நல்லறமூர்த்தியாகத் திகழ்கின்றான் பரதன்.

**புலன்களை வென்றவன்**

தன் கண்முன்னால் பொருளை வைத்துக்கொண்ட எவன் அதன் மேல் ஈர்ப்பு இல்லாமல் புலன் அடக்கம் செய்து விடுகின்றானோ, அவன் மனிதருள் தலைவனாக விளங்கக் கடவன். பரதனுக்கு எதிரில் சீர்கொண்ட அரசியல் செல்வம் இருக்கின்றது; மனைவி எதிரே இருக்கின்றாள்; எல்லாவிதமான சுகபோகங்களும் நிறைந்துள்ளன. ஆனால் பரதனோ, 'என்னுடைய அண்ணன் அங்கே அடகு, கனி முதலியவற்றை உண்டு காட்டில் வாழ, யான் மட்டுமு; வெண்சோறு உண்பேனோ?" என்று எண்ணுகின்றான். அதாவது உண்மையான புலனடக்கத்தைக் கைக்கொண்டவன் பரதன். ஒன்றும் கிடைக்காத காட்டில் வாழந்த இலக்குவனுடைய புலனடக்கத்தைக் காட்டிலும், அனைத்தையும் கண்எதிரே வைத்துக் கொண்டு அவற்றைத் தொடமாட்டேன் என்ற மனஉறுதியுடன் வாழ்கின்ற பரதனின் புலனடக்கத்தைக் உயர்த்திக் காட்டுகின்றார் கம்பர். பரதனை அழித்துவிடுகவதாக சூளுரைத்து இந்திரசித்தன் புறப்பட்டவிடத்து இராமன் பரதனை எண்ணி ஐயப்பட இலக்குவன்வழி பரதனின் ஆளுமையை, ஆற்றலமிக்க பரதன், தவவலிமையும் பெற்றிருப்பதால்; அவனை வெல்ல இந்திரசித்தனால் முடியாது என்று இளையவன் எடுத்துரைக்கக் காட்டுகின்றார் கம்பர்.

**மன்னர் மன்னவன்**

பரதனின் களங்கமற்ற உள்ளத்தை உணர்ந்த கோசலை அவனை ஆரத்தழுவிய காட்சியகை; கம்பர் அழகாக வடிக்கிறார்.

**"தூய வாசகம் சொன்ன தோன்றலை**

**தீய கானகம் திருவின் நீங்கி முன்**

**போயினான் வரக் கண்ட பொம்மலாள்**

**ஆய காதலால், அழுது புல்லினாள்" (பள்ளிபடைப் படலம் : பா.2218)**

என்ற வரிகளில் அரசைத் துறந்து கானகம் சென்ற இராமனே திரும்பி வந்து கோசலையைத் தழுவிக் கொள்வதாகவே எண்ணி, ஆனந்தக் கண்ணீர் சொரிய அனைத்துக் கொண்டாள் கோசலை. குணங்களால் இராமனுக்கும் பரதனுக்கும் வேற்றுமை இல்லை என்பதை உணர்ந்தாள். இவ்விடத்தில் அவள் பரதனை,

**"முன்னை நும் குல முதலுளோர்கள்தாம்**

**நின்னை யாவரே நிகர்க்கும் நீர்மையார்?**

**மன்னர் மன்னவா! என்று வாழ்த்தினாள் -**

**உன்ன உன்ன நைந்து உருகி விம்முவாள்" (பள்ளிடைப் படலம் : பா.2220)**

என்று முன்னோர்களது அரச வாழ்வைச் சுட்டிக்காட்டி அரசை ஏற்கத் தூண்டுகையில் கம்பர் கோசிலையை நற்பண்புகளில் உறைவிடமாகவே காட்சிப்படுத்துகின்றார். பரதன் கோசலையினாலேயே "மன்னர் மன்னவா" என்று அழைக்கப்படுகின்றான்.

தன் உயிரையே அர்ப்பணித்துத் தருமத்தைக் காத்த தயரதனின் பழமையான அறத்திருவுருவத்தைக் கண்ட பரதனின் நிலையை,

**"மண்ணின்மேல் விழுந்து அலறி மாழ்குவான்**

**அண்ணல் அழியான் அவனி காவலான்**

**எண்ணெய் உண்ட பொன் எழில் கொள்மேனியை**

**கண்ண நீரினால் கழுவி ஆட்டினான்" (பள்ளிபடைப் படலம் : பா.2225)**

என்கிறார் கம்பர். தைலத்தில் கிடந்த தந்தையின் பொன்னுடலை, தன் கண்களிலிருந்து திரண்டுவரும் கண்ணீரினால் கழுவித் தூய்மை செய்து மூழ்கச் செய்த காட்சியில் தந்தையின் பிரிவுத்துயரில் பரதனின் துயரம் சுட்டப்பட்டுள்ளதுடன், தயரதன் தன்னை மகனல்லன் என்று உறைத்த செய்தியைக் கேட்டபோது பரதன் இறந்து போயினான் என்றவிடத்தும் பரதனின் துயரம் ஆறாகப் பெருக்கெடுக்கின்றது.

'அன்னை தன் வரத்தில் பெற்ற அரசினை ஏற்று நடத்துக' என்று வசிட்ட மாமுனி சொன்னதைக் கேட்டு அஞ்சினான் பரதன். 'ஒடுங்கிய உயிர் உடையவனான் மூவுலகருக்கும் ஓர் முதல்வன் இருக்க யான் மகுடம் சூடி அரசனாக வாழ மாட்டேன்' என்று மறுத்தான். அறத்தை வலியுறுத்தும் பாத்திரமாக விளங்குகின்ற பரதன், மூத்தவன் இருக்க இளையவன் அரசு புரிவது அறமாவது என்று துணிகின்றான். இவ்விடத்தில் அரசவையோர் பரதனைப் புகழும்போது,

**ISBN NUMBER: 978-93-91115-78-4**

**"ஆன்ற பேர் அரசனும் இருப்ப, ஐயனும்**
**ஏன்றனன் மணிமுடி ஏந்த; ஏந்தல் நீ**
**வான் தொடர் திருவினை மறுத்தி! மன் இளந்**
**தோன்றல்கள் யார் உளர் நின்னின் தோன்றினார்?" (ஆறுசெல் படலம் : பா.2262)**

என்று பாராட்டுகின்றனர். பெருமைசான்ற தயரதன் வாழ்நாளில் இருக்கின்றபோதே இராமன் முடிசூட்டிக் கொள்ள ஒப்புக் கொண்டான். ஆனால் பெருமைமிக்க பரதன் அரசச் செல்வத்தை ஏற்க மறுத்த நிலையை மன்னவன் இல்லாத போதும் அவன் ஆணையாலும் அரசை ஏற்க உடன்படாத பரதனைப் போல் உலகில் எவரும் தோன்றவில்லை என்று இராமனையும் பரதனையும் ஒப்பிட்டுக் காட்டுகின்றார் கம்பர்.

**முடிவுரை**

தெள்ளுதமிழ்த் தீஞ்சுவை கூட்டி, தேன்கலந்து பால்கலந்து தந்ததுபோல் ஒன்பான்சுவைகளையும், ஒரு சேரச் சேர்ந்தளிப்பது கம்பராமாயணம் இறைவனின் அவதாரத் தன்மையில் ஒன்றாக இராமவதாரத்தில் இறைவனாகிய இராமன் தலைமைப் பாத்திரமாயினும் இறைநிலையிலிருந்து தனித்துவப் படுத்தி இம்மண்ணில் மனிதனாகப் பிறந்து, பல துன்பங்களைக் கடந்து அழுது புலம்பி, இன்பங்களைத் துய்ந்து, மகிழ்ந்து மனநிறைவு பெறும் சாதாரண மனிதனாக இராமன் காட்சியளிக்கின்றான். கம்பன் பரதனின் பாத்திரப்படைப்பு இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளது. உடன்பிறப்பாகிய இராமனுக்காகத் தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்த ஓர் கர்மவீரனாகவும், பண்பாட்டின் சிகரமாகவும் இலக்குவன் திகழ்கிறான் என்று கம்பன் கூறுகிறார். அறத்தின் நாயகனாவும், அந்தமில் பெருங்குணம் படைத்தவனாகவும், புலன்களை வென்றவனாகவும் இராமனுக்கு நிகர்ந்த தமையனாகவும், தயரதனுக்கு பெருமகனாவும் விளங்கிய பரதனை பெருமையாகவும், சிறப்பாகவும் எடுத்துரைக்கிறார் கம்பர். கம்பரின் கவித்திறமையாகட்டும், அகப்பொருட் கூறுகளாகட்டும் உவமைச்சித்திரமாகட்டும் அறநெறிகருத்துகளாகட்டும், கற்பனை திறனாகட்டும் என தன்காவியத்தில் தான் படைத்த கதாபாத்திரங்களின் வழியாக ஒவ்வொருவரின் மேன்மை பொருந்திய குணநலன்களை உலகுக்கு தான் படைத்த காப்பியத்தின் மூலம் வெளிப்படுத்துகிறார். தமிழ்மொழியையும், தமிழ்மரபையும், தமிழ்ப்பண்பாட்டையும் தன் காவியத்துக்குள் கொண்டுவந்து தமிழ்மொழியை வளரக்கச் செய்தார் தமிழ்க் கம்பன். இதனால்தான் இளங்கோவடிகள் யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் என்று உயர்வுபடுத்தி கூறுகிறார். தமிழ்மொழி உள்ளவரை கம்பனியம் இருக்கும் என்றும் கம்பன் படைத்த கவின்மிகு பாத்திரங்கள் காலத்தால் அழியாத சொல்லோவியமாக திகழ்கிறது.

**ISBN NUMBER: 978-93-91115-78-4**

**துணைநூற்பட்டியல்**

[1] கோபாலக்கிருஷ்ணமாசாயர்.வை.மு. (உரையாசிரியர்) *கம்பராமாயணத் தொகுதிகள்*, சென்னை.

[2] சாமிநாதையர், உ.வே. (உரையாசிரியர்). *கம்பராமாயணத் தொகுதிகள்* (அனைத்துப் பதிப்புகளும்), டாக்டர். உ.வே.சா. நூல் நிலையம் வெளியீடு, சென்னை – 41

**References**

[1] Gopalakrishnamasaya.Y.M. (Commentator). *Kambaramayana Volumes*, Chennai.

[2] Saminathaiah, U.Ve. (Commentator *Kambaramayana Volumes* (All Versions), Dr. U.Ve Sa. Library Publishing, Chennai – 41.

2

# கம்பராமாயணத்தில் ரகு வம்சமும் நிமி வம்சமும்

## Raghu Dynasty and Nimi Dynasty in *Kambaramayana*

**முனைவர் சே.பிரேமா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

பூசாகோ அர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோவை-04.

**Dr S.Prema,** Assistant Professor, Department of Tamil,
PSGR Krishnammal College For Women, Coimbatore-04.
**ORCiD:** https://orcid.org/0000-0002-3550-2380
**DOI: 10.5281/zenodo.6967039**

### Abstract

*"Kambaramayana" is one of the most revered epic myths ever since which can be set to show the norm for human moral power. It has the power to regulate the people who have lived without realizing the doctrine of royal dynasties. The king who lives a life of undiminished heroism, with good governance and good deeds are portrayed with magnanimous verve. The dynasties of Raku and Nimi, which stood in the way of honor and has possessed powerful royal qualities that have been recorded by the way of this study. The qualities and characteristics of the royal dynasties of "Kambaramayana" are greatly discussed in this chapter.*

**Keywords:** *Kambaramayana*, Ayothya, Mithilai, Royal Dynasties in Kambaraamaayana.

### ஆய்வுச்சுருக்கம்

*கம்பராமாயணம் அன்று முதல் இன்றுவரை மிகவும் போற்றப்படும் இதிகாச புராணங்களில் ஒன்றாகும். மனித வாழ்வியலுக்கான விளக்கங்களைச் சுட்டிக் காட்டுவதற்குரிய நூலாகும். நாட்டை ஆளும் அரசன் தன் கோட்பாட்டை உணர்ந்து தனது மக்களை ஒழுங்குபடுத்தும் திறத்துடன் மற்றும் நல்லதொரு எடுத்துக்காட்டாக விளங்கும் பான்மையில் இராமாயணம் அமையப்பெற்றுள்ளது. தாயின் கூற்றிற்கு கட்டுப்படுதல், தியாகம், குறையாத நல்லாட்சி, வீரம், சகோதர ஒற்றுமை, இல்லற வாழ்வியல் தத்துவம் என்கிற நற்குணங்கள் கொண்டு வாழும் இரகு வம்ச மன்னனும், அத்தகு சிறப்பிற்கு ஏற்ற அவரது சகோதரர்களும் அவர்களின் சிறப்புகளும் இப்புராணத்தில் அழகுபட காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இரகு வம்சங்களின் வாழ்விற்கு துணையாக வந்த நிமி*

*வம்சங்களின் சிறப்புகளும் அவர்களின் குணங்களும் சேர்த்து இவ்வாய்வில் பதிவுசெய்யப்பட்டுள்ளன.*

**கலைச்சொற்கள்:** ‘‘கம்பராமாயணம்’’, அயோத்யா, மிதிலை, கம்பராமாயணத்தில் அரச வம்சங்கள்.

**முன்னுரை**

இதிகாச புராணங்களில் முதன்மையாக அன்று முதல் இன்றளவிலும் மக்களால் பெரிதும் போற்றப்படுவது கம்பராமாயணம். மனித வாழ்வியலுக்கான நெறியினைச் சுட்டுவதாக அமையக்கூடியதாகும். அரச வம்சங்களுக்குரிய கோட்பாட்டினை உணர்த்துவதோடல்லாமல் வாழ்ந்துகாட்டிய மக்களை நெறிப்படுத்தக்கூடிய வல்லமை கொண்டதாகும். இறைவனின் அவதார நோக்கம், முற்பிறவியின் தொடர்பு, வரத்தின் தன்மை, சத்ரியருக்குரிய குணங்கள், உயர்ந்த மாண்பு, மாண்பு மிகு அரசரின் குணநலங்கள் முறையே தனித்தனியான பாடுபொருள்களில் முக்கியத்துவம் பெற்றது கம்பராமாயணம். இத்தகைய கமபராமாயணத்தில் தசரதரின் ரகு வம்சங்கள் குறித்தும், ஜனகரின் நிமி வம்சங்கள் குறித்தும், ஆய்வுகள் தொடரப்பட்டு பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

**கம்பராமாயணம்**

கம்பராமாயணம் எனும் நூலானது குலோத்துங்க சோழ மன்னனின் ஆணைப்படி கம்பரால் இயற்றப்பட்ட தமிழ் நூலாகும். இராமரது வரலாற்றைக் கூறும் நூலாதலால் இராமாயணம் எனப்பட்டது. அயணம் என்பது வழிநடந்த பாதை எனப் பொருள்படும். இராமர் குறித்து வழிநடந்த கதைகளையும், கருத்துகளையும் வெளிப்படுத்தும் நூல் என்பதாகும். வடமொழியில் வால்மீகி இயற்றிய இராமாயணத்தினைத் தழுவி கம்பரால் இயற்றப்பட்ட கம்பராமாயணம் ஒரு வழி நூலாகும். இது ஒரு வழி நூலாகவே இருந்தாலும் கம்பர் தனக்கே உரித்தான வகைமையில் கருப்பொருள் சிதையாமல் தமிழ் மொழியில் இயற்றியுள்ளார். வடமொழி கலவாத தூய தமிழ்ச்சொற்களைத் தனது நூலில் கையாண்டதால் கம்பர், தொல்காப்பிய நெறிவழி நின்றவர் என்று புகழப்படுகிறார்.

**“வடசொல் கிளவி வடஎழுத் தொரீ**

**எழுத்தொடு புணர்ந்த சொல்லாகுமே” (தொல்காப்பியம் – எச்சவியல் – 5)**

கம்பரின் இராமாயணத்தைக் கம்பநாடகம் எனவும் கம்பச்சித்திரம் என்றும் அறிஞர்கள் அழைப்பர்.

**கம்பராமாயனம் உட்பிரிவு**

கம்பராமாயணம் பாலகாண்டம் 24 படலங்களும், அயோத்யா காண்டம் 13

**ISBN NUMBER: 978-93-91115-78-4**

படலங்களும், ஆரண்ய காண்டம் 13 படலங்களும், கிட்கிந்தா காண்டம் 17 படலங்களும், சுந்தர காண்டம் 14 படலங்களும், யுத்த காண்டம் 42 படலங்களும் என ஆறு காண்டங்களையும், மொத்தம் 123 படலங்களையும் கொண்டு, 10,500 பாடல்களுடன் அமையப்பெற்றுள்ளது. காண்டம் என்பது பெரும்பிரிவினையும் படலம் என்பது அதன் உட்பிரிவினையும் குறிக்கும்.

**அயோத்யா**

உத்திரப்பிரதேச மாநிலம் லக்னோவிலிருந்து கோரக்பூர் செல்லும் வழியில் அயோத்தியா அமைந்துள்ளது. இதன் அருகில் பெய்சாபாத் எனும் நகரமும் அமைந்துள்ளது. 136 கிமீ தொலைவில் அமைந்துள்ள அயோத்யா இன்றளவும் மிகவும் புனிதமான தலமாக இந்து மதத்தவர்களால் நம்பப்படுகிறது. அயோத்தி நகரில் சரயு நதி ஓடியதால், எங்கு சென்றாலுமே இந்த நதியைக் கடந்து தான் செல்லவேண்டும். அதுதான் ராமாயணத்திலும் சரயு நதியைக் கடந்து ராமரும், சீதையும் சென்றார்கள் என்று குறிப்பிடப்படுகிறது. வைகுண்டம் (சொர்க்கம்) பகவான் மகாவிஷ்ணுவின் இருப்பிடம் என்பதுபோல் பூலோகத்திலும் ஒரு சொர்க்கம் இருக்கிறது . அந்த வைகுண்டத்தின் ஒரு பகுதியே அயோத்தி. சூரிய குலத் தோன்றலின் ஐந்தாம் பரம்பரையில் வந்த வைவஸ்வத மனு என்பவரால் பூலோகம் கொண்டு வரப்பட்டு, சரையூ நதியின் தென் கரையில் நிறுவியதாகவும், இது பின்னாளில் ராமரின் பூமியாக மாறியதாகவும் புராணங்கள் மூலமாக தெரிந்துகொள்ள முடிகிறது.

**மிதிலை**

மிதிலைப்பிரதேசம் அல்லது மிதிலாஞ்சல் என்பது தெற்கு ஆசியாவின் , அதாவது தற்கால நேபாளத்தின் தென்கிழக்குப்பகுதி, இந்தியாவின் பீகார் மாநிலத்தின் கிழக்குப்பகுதி மற்றும் ஜார்கண்ட் மாநிலத்தின் வடக்குப்பகுதியில் அமைந்துள்ளது. புவியியல், மொழி மற்றும் பண்பாடு வகையில் ஒத்தப் பிரதேசமாக அமைந்துள்ளது. தொன்மையான இப்பிரதேசத்தில் மைதிலி எனும் மொழி பேசப்படுவதால், இப்பிரதேசத்திற்கு மைதிலி அல்லது மிதிலை எனப் பெயராயிற்று. மிதிலை பிரதேசத்தின் வடக்கில் இமயமலையும், தெற்கு, மேற்கு மற்றும் கிழக்கில் கங்கை, கோசி மற்றும் கண்டக ஆறுகளும், எல்லையாக அமைந்துள்ளன. மிதிலை பிரதேசத்தின் பெரும்பாலான பகுதிகள் தற்கால பீகார் மாநிலத்தில் அமைந்துள்ளது. கங்கைச் சமவெளியில் அமைந்த பண்டைய விதேக நாட்டின் தலைநகரான மிதிலை இன்றைய இந்தியாவின் வடக்கு பீகார் வரை விரிவடைந்துள்ளது. மிதிலை இப்பொழுது ஜனக்பூர் என்று அழைக்கப்படுகிறது.

**ISBN NUMBER: 978-93-91115-78-4**

**கம்பராமாயணத்தின் உன்னத நிகழ்வு**

அயோத்தியின் அரச வம்சங்களும், மிதிலை அரச வம்சங்களும் இணையும் சிறப்புமிக்க நிகழ்வே இராமர் சீதை திருக்கல்யாணம். சிவதனுசின் பெருமையறிந்த ஜனகர் அத்தனுசினை நாணேற்றுபவருக்கே சீதையினை மணமுடித்துத்தருவதாக அறிவிக்க, இராமரும் அதில் வெற்றிபெற, அத்தருணம் முதல் இராமர் சீதை மனம் ஒன்றுபட மண நிகழ்வால் இரு தேசத்தினரின் உள்ளங்களும் இன்பத்தில் திகழ்ந்தது.

**சிவதனுசுவின் பெருமை**

தட்ச பிரகஸ்பதியின் யாகத்தில் தன்னை மாய்த்துக்கொண்டாள் சதி தேவி. அதனால் கோபமுற்ற சிவபெருமான் தட்சனின் யாகத்தில் கலந்து கொண்ட அத்தனை தேவர்களையும், அழிப்பதற்காக சிவதனுசினை எடுத்து அம்பினை பூட்டினார். அதற்குள் தேவர்கள் அனைவரும் சிவபெருமானிடம் தங்களைக் காக்க வேண்டினர். அதனால் சிவபெருமான் மனம் மாறி, சிவதனுசினை தேவர்களின் மூத்தவரான தேவராதன் என்பவருக்கு அளித்தார். அந்த சிவதனுசை தேவராதம் வம்சத்தில் பாதுகாத்து வந்தார்கள். தேவராதம் மறையும் போது, அவர் சந்ததிகள் அதனை பாதுகாத்துவந்தார்கள். சிவதனுசின் மேன்மை புரிந்தவர்கள் வம்சத்தில் ஜனகர் தோன்றியதால், அவருக்கு சிவதனுசு கிடைத்தது.

சிவபெருமானின் அருளால் கிடைக்கப்பெற்ற தனுசானது கம்பராமாயணத்தில் சிறப்பிடம் பெருகிறது. ஜனகமன்னர் ஆனையின்படி, ஆழ்ந்த வலிமையுடைய யானையின் திறத்திற்கு ஒத்த வீரர்களும் , மலை போன்று அகண்ட தோள்களையுடையவர்களுமான ஒன்றள்ள, இரண்டள்ள அறுபதினாயிரம் வீரர்கள் ஒன்றுசேர்ந்து, அவ்வில் இருந்த பெட்டியில் தண்டுகளை இட்டு, திரண்ட தோளின்மீது சுமந்து கொண்டு அதற்கென அமைத்த இடத்தில் வைத்தனர். இக்கருத்தினை உணர்த்தும் நூற்பாவின் வரிகள் பின்வருமாறு,

“உறுவலி யானையை ஒத்த மேனியர்
செறிமயிர்க்கல் எனத் திரண்ட தோளினர்
அறுபதினாயிரர் அளவு இல் ஆற்றலர்
தறிமடுத்து இடையிடை தண்டில் தாங்கினர்” **(பாலகாண்டம் – 617)**

எனும் வரிகளின் வழி அறியலாம்.

**தனுசு பற்றி மிதிலை மக்களின் கருத்து**

இதனை வில்லெனக் கூறுவது பொய்யானது. பிரம்மன் இவ்வில்லினைத் தன் தவ வலிமையால் செய்தாரோ? அல்லது பொன்மயமான மேருமலையோ? முற்காலத்தில் பாற்கடலைக் கடைந்த மத்தாகிய மலையோ? இதற்கு முன் கையாண்ட சக்தியுடையவன்

ISBN NUMBER: 978-93-91115-78-4

யாரோ? சங்கையும், சக்கரத்தையும் தாங்கிய ஆண்சிங்கம் போன்ற திருமாலைத் தவிர, இவ்வில்லைத்தொடும் திறம் எவருக்கு உண்டு. திருமாலே மானுட உருவில் வந்து நாணேற்றினால் மட்டுமே மகாலட்சுமி போன்ற சீதையை திருமணம் புரிய இயலும் என்றனர் மக்கள்.

**மணம் பேச மிதிலை செல்லுதல்**

ஜனகர் வைத்த போட்டியில் வெற்றியடைந்ததும் மணமகன் இல்லம் சார்பாக வசிஷ்ட முனிவர், தசரதர் முதலாக அனைவரும் பங்கு கொண்டனர். பொதுவாக மணவிழாவின் முன் இரு இல்லத்தாரும் தங்களது வம்சங்கள் குறித்தும் அவற்றின் சிறப்புகள் குறித்தும் அவ்விடத்தில் பதிவுசெய்வர். அவ்வண்ணமே, அத்தருணத்தில் வசிஷ்ட முனிவர் ஜனகர் முன் உரைத்த ரகுவம்ச பரம்பரை பின்வருமாறு,

**ரகுவம்ச பரம்பரை**

அழிவற்ற நித்யன் விஷ்ணு. அத்தகு இறைவனின் தொப்புள் கொடியிலிருந்து தோன்றிய,

**“ பிரம்மாவின் மகன் மரீசி**

**மரீசியின் மகன் காஸ்யபர்**

**காஸ்யபர் மகன் விவஸ்வான் (சூரியன்)**

**விவஸ்வான் மகன் வைவஸ்வத மனு**

**வைவஸ்வத மனு மகன் இஸ்வாகு (இவர்தான் அயோத்தியை உருவாக்கினார், ரகு வம்சம் என உரைப்பதற்கு முன் இஸ்வாகு வம்சம் என்றே இவர் பெயரில் அழைக்க வேண்டும்).**

**இஸ்வாகு மகன் குக்ஷி (மூவுலகிலும் புகழ் பெற்றவர்)**

**குக்ஷி மகன் விகுக்ஷி**

**விகுக்ஷி மகன் பானன்**

**பானன் மகன் அனரன்யன்**

**அனரன்யன் மகன் பிருது**

**பிருது மகன் திரிசங்கு (இவருக்காகத் தான் விஸ்வாமித்திரர் சொர்க்கம் படைத்தார்)**

**திரிசங்கு மகன் துந்துமாரன்**

**துந்துமாரன் மகன் யுவனஷ்வன்**

**யுவனஷ்வன் மகன் மாந்தாதா**

**மாந்தாதா மகன் சுசந்தி**

**சுசந்தி மகன் துவசந்தி மற்றும் பிரசந்ஜித்**

**ISBN NUMBER: 978-93-91115-78-4**

**துவசந்தி மகன் பரதன்**

**பரதன் மகன் அஸிதன்**

அஸிதன் காலத்தில் அவனை எதிர்த்து பல அரசர்கள் போரிட்டனர். தாள ஜங்கர்கள், சூரர்கள் , சசிபிந்தவர்கள் எனப் பலர் யுத்தம் பூண்டனர். இதி தோற்று ஹிமாசலம் சென்று உடல் நலக்குறைவால் உயிர் நீத்தார்.

அத்தருணம், அவரது இரு மனைவியரும் கர்பமுற்றிருந்தனர். இருவருள் ஒருவள் மற்றவள் மீது பொறாமை கொண்டு, கரம் எனும் விடத்தை காளிந்தீ என்பவள் அறியாது குடித்துவிடுகிறாள். பின்னர் இதனை அறிந்தவுடன் இமய மலையில் வாழும் பார்கவ ஸ்யவனன் என்ற முனிவரைவணங்கி, நடந்ததனை உரைத்தனள். தனக்கு பிறக்கப்போவது மகனாக இருக்க வேண்டும், அவன் தீர்க்க ஆயுளும், கீர்த்தியும், பித்திர சம்பத்து உடையவனாகவும் இருக்க வேண்டும் என்று வேண்டினாள். காளிந்தீ வேண்டிய வரங்கள் கொடுத்து, விடத்தையும் போக்கினார். ஆயினும் விடத்தோடு பிறப்பதால் சகரன் எனப்படுவான் என்றார்.mஇவ்வாறாக,

**அஸிதன் மகன் சகரன்**

**சகரன் மகன் அசமஞ்சன்**

**அசமஞ்சன் மகன் அம்சுமான்**

**அம்சுமான் மகன் திலீபன்**

**திலீபன் மகன் பகீரதன் (கங்கையை வானுலகிலிருந்து பூலோகம் தந்தவன்)**

**பகீரதன் மகன் காகுஸ்தன்**

**காகுஸ்தன் மகன் ரகு**

**ரகு மகன் பிரவர்த்தன்**

**பிரவர்த்தன் மகன் ஷங்கனன்**

**ஷங்கனன் மகன் சுதர்ஷன்**

**சுதர்ஷன் மகன் அக்னிவர்னன்**

**அக்னிவர்னன் மகன் சீக்ரகன்**

**சீக்ரகன் மகன் மேரு**

**மேரு மகன் பிரகஷ்ருகன்**

**பிரகஷ்ருகன் மகன் அம்பரீஷன்**

**அம்பரீஷன் மகன் நகுஷன்**

**நகுஷன் மகன் யயாதி**

**யயாதி மகன் நபாகன்**

**ISBN NUMBER: 978-93-91115-78-4**

**நபாகன் மகன் அஜன்**

**அஜன் மகன் தசரதன்**

**தசரதன் மகன்கள் ராமன், லட்சுமணன், பரதன், சத்ருக்ணன் “**

**(வால்மீகி இராமாயணம் - அயோத்யா காண்டம் சர்கம் - 110 மற்றும் ஸ்ரீ விஷ்ணு புராணம்)**

புனர்பூச நட்சத்திரத்தில் இராமனும், ஆயில்யம் நட்சத்திரத்தில் இலட்சுமணனும், பூச நட்சத்திரத்தில் பரதனும், மகம் நட்சத்திரத்தில் சத்ருக்கணனும் பிறந்தனர். இத்தகைய புதல்வர்கள் தர்மத்தின் வழி நடப்பவர்கள், சத்ரிய அம்சங்களான சத்தியத்தின் உருவமாகவும், நல்லொழுக்கத்தின் நெறிப்படி நடப்பவரும், தேவ அசுர மானிடர்கள் என அனைவரது அஸ்திர வல்லமைகளையும் பெற்று, ஆசைக்கு அடிபணியாமல் தன்புலன்களை கட்டுக்குள் வைக்கும் திறன் பெற்றும், அன்புடன் நாட்டு மக்களை பார்த்துகொள்ளும் பாங்கு பெற்றவர்கள் என்று உளமார முனிவர் ஜனகரிடம் எடுத்துரைத்தார்.

**ஜனகர் கூற்று**

வசிஷ்ட முனிவர் உரைத்த கூற்றில் நெகிழ்ந்த ஜனகர் தனது நிமி (நிமி என்பதற்கு வடமொழியில் இமை என்று பொருள்) வம்சங்கள் குறித்தும் அவற்றின் சிறப்புகள் குறித்தும் எடுத்துரைக்கும் கூற்று பின்வருமாறு,

**நிமி வம்ச பரம்பரை**

தனது செயல்களால் மூவுலகிலும் கீர்த்தி பெற்ற அரசன் நிமி என்பவர். மிகுந்த தர்மவானாக விளங்கியவர்.

**நிமி மகன் மிதி (மிதிலை பெயர்காரணம்)**

**மிதி மகன் ஜனகன் (முதலாவது ஜனகன்)**

**ஜனகன் மகன் உதாவஸு**

**உதாவஸு மகன் தேவராதன் (ராஜ ரிசியாகவும், பலசாலியாகவும் விளங்கியவன், சிவ தனுசைப் பெற்றவன்)**

**தேவராதன் மகன் ப்ருஹத்ரதன்**

**ப்ருஹத்ரதன் மகன் மகாவீரன் (பெயருக்கேற்ற பலசாலி)**

**மகாவீரன் மகன் த்ருதிமான்**

**த்ருதிமான் மகன் சுத்ருதி**

**சுத்ருதி மகன் த்ருஷ்டகேது (ராஜரிசி)**

**த்ருஷ்டகேது மகன் ஹர்யஸ்வன்**

**ஹர்யஸ்வன் மகன் மரு**

ISBN NUMBER: 978-93-91115-78-4

**மரு மகன் ப்ரதீந்தகன்**

**ப்ரதீந்தகன் மகன் கீர்த்திரிதன்**

**கீர்த்திரிதன் மகன் தேவமீடன்**

**தேவமீடன் மகன் விபுதன்**

**விபுதன் மகன் மஹீத்ரகன்**

**மஹீத்ரகன் மகன் கீர்த்திராதன்**

**கீர்த்திராதன் மகன் மகாரோமன்**

**மகாரோமன் மகன் ஸ்வர்ணரோமன் (ராஜரிசி)**

**ஸ்வர்ணரோமன் மகன் ஹ்ரஸ்வரோமன்**

**ஹ்ரஸ்வரோமனுக்கு இரண்டு பிள்ளைகள்**

**அதில் மூத்தவனாக நானும் (ஜனகன்) இளையவன் குசத்வஜன் ஆவர்.**

**(வால்மீகி இராமாயணம் - அயோதியா காண்டம் சர்கம் - 110 மற்றும் ஸ்ரீ விஷ்ணு புராணம்)**

சற்று காலம் முன்பு ஸாங்காசிய மன்னனான ஸீதன்வா மிதிலையை ஆக்ரமித்து, சிவபெருமானின் வில்லையும், சீதையையும் தனக்குத்தர வேண்டினான். இதற்கு தகுதியில்லாத அவனால் இருவருக்கும் சண்டை ஏற்பட்டது. அப்போரில் ஸீதன்வா கொல்லப்பட்டான். அவன் ஆண்டுவந்த ஸாங்காஸ்ய நகருக்கு, என் சகோதரனை அரசனாக அமர்த்தியுள்ளேன்.

**ரகுவம்ச நிமிவம்ச இல்லத்திருமணம்**

ரகுவம்சத்தின் பெருமையும், நிமிவம்சத்தின் சிறப்பும் அத்தருணத்தில் சிறப்புடன் எடுத்தியம்பப்பட்டன. வசிஷ்டர் இவ்விரு குலத்தினையும் வாழ்த்தியபின், தீரமான புகழுடைய ஜனகரே! இராம லட்சுமணருக்கு உந்தன் குமாரிகளைக் கொடுப்பது மிகப்பொருத்தமான ஒன்றே!. சீர்மிகு மிதிலை அரசே! இன்னுமொன்று தங்களிடம் வேண்டுவன உண்டு. நினது தம்பி குசத்வஜனின் குமாரிகள் இருவரையும் தசரதரின் மற்ற புதல்வர்களான பரத சத்ருக்கணனுக்கு மணம் முடித்துத்தர வேண்டுகிறேன் என்றார். ஜனகரும் , குசத்வஜரும் இவ்வேண்டுகோளுக்கு இசைந்தனர்.

பங்குனித்திங்களில் முழுபௌர்ணமியில் வருகின்ற உத்திர நட்சத்திரத்தில் திருமணம் இனிதே நிறைவுற்றது. திருமணத்தின் போது வானிலிருந்து தேவர்கள், மஹரிஷிகள் உளம் மகிழ தேவ வாத்தியங்களும், நடனங்களும், கந்தர்வ கானமும்(பாடல்) முழங்க வானத்திலிருந்து மலர்கள் பொழிந்தது. தசரதர், ஜனகர் முதலாக மக்கள் வரையிலும் ஆழ்ந்த மகிழ்ச்சி அடைந்தனர் (பாலகாண்டம் – 13). இவ்வாறாக, இரு இல்லத்திருமணமும்

ISBN NUMBER: 978-93-91115-78-4

இனிதே நிறைவுற்றபின், அயோத்தியில் மணமக்கள் வருகை, விழாக்கோலம், பின் கைகேயியின் சூழ்ச்சி, இராமர் சீதை மற்றும் இலட்சுமணன் வனம் செல்லுதல், தசரதர் மரணம், அயோத்தியின் நிலை என அனைத்து நிகழ்வுகளும் கம்பரால் பதிவுசெய்யப்பட்ட பாங்கு அனைவரும் அறிந்ததே! இத்தகைய இரகுவம்ச மற்றும் நிமிவம்ச குமார குமாரத்தியர்களின் குணங்களும் செயல்களும் முக்கிய பாடுபொருளாகக் கொண்டு அவர்களின் சிறப்புகள் பின்வருமாறு பதிவுசெய்யப்படவுள்ளன.

**அயோத்தியின் கதைகள்**

இராமர் கானகம் சென்றபின் தசரதரின் மரணத்தைத் தொடர்ந்து அயோத்தியின் நிலையும் வம்சங்களின் நிலையும் அவர்கள் இதுவரையிலும் சந்திக்காத மற்றும் சிந்தித்திருக்காத நிலை என்றே சொல்லவேண்டும். இருப்பினும் இந்நிலையில்தான் அனைவரின் தனிப்பட்ட குணங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

**இராமர் சீதை**

இராவணனை அழிக்க மஹாவிஷ்ணு இராமராகவும், மகாலட்சுமி சீதையாகவும் அவதாரமெடுத்தனர் என்பது நூலின் வழி அனைவரும் அறிந்ததே!. மனிதப்பிறவியில் ஏற்படும் இன்ப துன்ப நிகழ்வுகள் குறித்தும், வாழ்வியல் தன்மை குறித்தும் இவர்களின் வாழ்வு நெறி மக்களுக்குப் பெரிதும் எடுத்தியம்பக்கூடியாதாக உள்ளது.

**இராமர்**

ஈகை, கருணை, நீதி தவறாமை, குடிமக்களைக் காத்தல் என்கிற நான்கு குணமுடைய அரசன் அரசர்களுக்கெல்லாம் ஒளிவிளக்காக விளங்குவான். அத்தகு அரசன் குடிமக்களால் கடவுளாக மதிக்கப்படக் கூடியவன் என்பது வள்ளுவர் வகுத்த கூற்று ஆகும். எளிய தோற்றமும், தன் மக்களிடத்து இனிமையான சொல் உரைப்பவனாகவும் விளங்குபவன் முழுமையான அரசன். இதன் அடிப்படையில் இறைவனே மானுடப்பிறவி எடுத்திருப்பினும் மனிதப் பிறவியின் பாங்கிற்கு ஏற்பவும், தோன்றிய அரச வம்சத்தின் மாண்பிற்கு ஏற்பவும், எடுத்த அவதாரத்தை நிலைநிறுத்தியும் வாழ்ந்து காட்டிய இராமரின் சிறப்பு எண்ணிலடங்காதனவாகும்.

***சீதை***

மகாலட்சுமியின் அவாதாரமாக பூமியிலிருந்து ஜனகரால் கண்டெடுக்கப்பட்டு மகளாக வளர்க்கப்பட்டதால் ஜானகி என்றும், மிதிலை நாட்டு இளவரசியாதலால் மைதிலி எனவும், சீதைக்கு பிற பெயர்கள் உண்டு. ஜனகருக்கு விதேகன் என்ற பெயர் இருந்ததால், சீதைக்கு வைதேகி என்ற பெயரும் உண்டு. பூமியில் இருந்து கிடைத்ததால் பூமிஜா என்ற பெயரும் உண்டு.

ஒருநாள் ஜனகரின் நான்கு மகள்களும் அரண்மனையில் பந்து விளையாடிக் கொண்டிருந்தனர். அவ்வேளையில் சீதா வீசிய பந்து சிவதனுசுவின் கீழ் மாட்டிக்கொண்டது. சீதை தன் தங்கை ஊர்மிளையிடம் பந்தை எடுத்துப்போடச் சொல்கிறாள். பந்து எடுக்கமுடியவில்லை. காரணம் முன்பு அறிந்த ஒன்றே. என்னம்மா ஒரு பந்தை எடுக்க அறுபதினாயிரம் ஆளா? என்றாள். அன்னம்போல் நடந்து இடக்கையில் வில்லை எடுத்து சுவற்றின் மூலையில் சார்த்தி வைத்துவிட்டுப் பந்தை எடுத்துக்கொடுத்தாள்.

மறுநாள் சிவபூசைக்கு வந்த ஜனகர் சிவதனுசுவைப் பற்றி வினவ சீதை நடந்ததனை உரைக்களானாள். அறுபதினாயிரம் ஆட்கள் எடுத்து வைக்கவேண்டிய வில்லானது ஒரு பெண் குழந்தையின் இடக்கையால் எடுத்துவைக்கப்பட்டதென்றால் இக்குழந்தை யாராக இருக்கமுடியும்? யாருக்குத் திருமணம் செய்து கொடுக்கவேண்டும்? என்றெல்லாம் சிந்திக்கவைத்தவள் சீதை.

**இலட்சுமணன்**

கைகேயின் வரத்தால் வனவாசம் செல்லவேண்டிய நிலை இராமருடன் மட்டும் நில்லாது, மனைவி என்பதால் சீதையுடன் தொடர, சகோதரன்பால் கொண்ட பக்தி இலட்சுமணனையும் ஆட்கொண்டது.

**“நீர் உள எனின் உள, மீனும் நீலமும்;**

**பார் உள எனின் உள, யாவும்; பார்புறின்**

**நா உள தனு உளாய்நானும் சீதையும்!**

**ஆர் உளர் எனின் உளம்? அருளுவாய் என்றான்!”**

**(அயோத்தியா காண்டம் – நகர் நீங்கு படலம் – பாடல் – 1757, ப - 273)**

இக்கூற்றிலேயே இட்சுமணன், இராமன் மீது கொண்ட பக்தியை அறியமுடிகிறது.

**ஊர்மிளை**

சீதாதேவி கண்டெடுக்கப்பட்ட ஒரு வருடத்திற்குப்பின் ஜனகர் மற்றும் சுனைனாவிற்கு பிறந்த முதல் மகள் ஊர்மிளை ஆவாள். ஆயினும் மிதிலையின் இளவரசி மைதிலி, விதேக நாட்டின் இளவரசி வைதேகி, ஜனகனின் மகள் ஜானகி என்று தனக்கு வரவேண்டிய பட்டங்கள் அனைத்தும் வளர்ப்புக் குழந்தையான சீதைக்கு விட்டுக்கொடுத்தவள். மிதிலை அரசன் ஜனகனின் மகளும், சீதையின் தங்கையுமான ஊர்மிளா, சீதையை விட்டு பிரிய விரும்பாத காரணத்தால், இராமனின் தம்பி லட்சுமணனை மணமுடித்தவள். இராமனின் பிரிவால் வாடி உயிர் நீத்த தசரதனின் பாசத்தையும், தமையனுக்காக தன் சுகத்தையும் துறந்து ஒரு சேவகனாய் தன்னை அர்ப்பணித்துக்

**ISBN NUMBER: 978-93-91115-78-4**

கொண்ட லக்குமணனின் பெருமையையும், ராமன் இருக்கும் இடமே சீதைக்கு அயோத்தி என, சுகபோகமான அரண்மனை வாழ்வைத் துறந்து தானும் உடன் சென்ற சீதையின் பதிவிரதத்தையும் கடந்து ஊர்மிளையின் சிறப்பும் முக்கியமானது. சீதா தேவி மீது ராமன் கொண்டிருந்த காதல், அன்பு இராமாயணத்தில் பல இடங்களில் பார்க்க முடியும். ஆனால் இலட்சுமணன் ஊர்மிளையின் காதல் கதை பெரியளவில் அறியப்படவில்லை. 14 ஆண்டுக்காலம் வனவாசம் சென்ற போது, இராமாயணப் போரில் ராமன் மற்றும் இட்சுமணன் வெற்றி பெற மிகவும் உறுதுணையாக இருந்ததவர்களில் ஊர்மிளையும் ஒருவராவார்.

இராமரும், சீதையும் வன வாசம் செல்ல வேண்டும் என்று கட்டளை வந்ததும், எதைக் குறித்தும் யோசிக்காத லட்சுமணன் உடனே தானும் உங்களுடன் வருவேன் என ராமனிடம் தெரிவித்தார். வனத்திற்கு செல்வதை மனைவி ஊர்மிளையிடம் கூட கூறவில்லை. அனைவரிடமும் விடைபெற்றுச் செல்லும் போது, ஊர்மிளா இராஜ அலங்காரம் செய்து கொண்டு லட்சுமணன் முன் வந்து நின்றாள். அப்போது லட்சுமணனோ அண்ணனும், அண்ணியும் அதுவும் உன் அக்கா வனவாசம் செல்கிறார்கள், ஆனால் நீயோ, பட்டுடுத்தி, நகைகளை அணிந்து கொண்டும், ராஜ அலங்காரம் செய்து கொண்டு வந்து நிற்கிறாயே!. எந்த ஒரு சிறு வருத்தமும் இல்லாமல் இருக்கின்றாயே!. ராஜ அலங்காரத்தை விரும்பும் உன்னைப் பார்க்கவே பிடிக்கவில்லை. இனி உன் முகத்தில் விழிக்க மாட்டேன் எனக் கூறிவிட்டு கோபத்துடன் சென்றார்.

இலட்சுமணன் அங்கிருந்து சென்றதும், தன் திட்டம் நிறைவேறியதை எண்ணி மனதில் அழுது புலம்பினார் ஊர்மிளா. ஊர்மிளா மீது கோபம் கொண்டு சென்றதால் தான் லட்சுமணன் வனவாசத்தின் போது உறங்காமல், தன் நினைப்பு வராமல், அண்ணன், அண்ணியை காக்க முடியும் என நினைத்து ஊர்மிளா இப்படி செய்தார். கடமையை மறந்து தன் நினைவு வந்துவிட்டால், ராமனைக் காக்கும் பணியில் தடை ஏற்படும். தற்போது தான் ராஜ வாழ்க்கை வாழ்வதாக நினைத்து கோபத்துடன் சென்றுள்ளதால் இனி என்னை ஒரு நொடி பொழுது கூட நினைக்காமல் கடமையில் கண்ணும், கருத்துமாக இருப்பார் என ஊர்மிளா நம்பினார். காதல் நினைவுகள் ஏற்பட்டு, அதனால் அவர் செய்கின்ற பணிக்கு இடையூறு வராமல் இருக்கவேண்டும் என்பதற்காகவே அவள் இப்படியொரு நாடகமாடி, தன் மீது அவருக்கு முழு வெறுப்பு ஏற்படும்படியாகச் செய்துகொண்டு, கணவன் ஏற்றுக்கொண்ட கடமை எனும் யாகத்தீயில் தன்னையே நெய்யாக்கித் தந்தவள் ஊர்மிளை.

**பதினான்கு ஆண்டுகள் உறங்கிய ஊர்மிளா**

இராமர், சீதையின் வனவாசத்தின் போது அவர்களுக்கு பாதுகாப்பு அரணாக

விளங்கியவர் அவரின் தம்பி லட்சுமணன். இதற்கு மிக முக்கியம் லட்சுமணனின் மனைவி ஊர்மிளாவின் பவித்திரமான அன்பு.

ஆம், 14 ஆண்டுகள் ஒரு நொடியும் உறங்காமல் லட்சுமணன் காக்க, தூக்கத்தின் கடவுளான நித்திராதேவியிடம் ஊர்மிளா வேண்டினாள். ஆனால் அதற்கு நித்திராதேவி சம்மதிக்கவில்லை. அப்போது ஊர்மிளா, தன் கணவர் கடமையில் எந்த தடங்களும் வந்துவிடக்கூடாது என்பதற்காக, அவருடைய தூக்கத்தையும் சேர்த்து நானே உறங்குவதற்கான வரத்தை எனக்கு அருளுங்கள் என வரம்பெற்றார். இருப்பினும் 14 ஆண்டு காலம் லட்சுமணனின் தூக்கத்தை சேர்த்து உறங்குவது என்பது சாதாரணமல்ல. அதுவும் உணவின்றி ஆரோக்கியம் மிகவும் பலவீனமடையும் என்பதைக்கூட பொருட்படுத்தாமல் இச்செயலைச் செய்ய துணிந்தவள்.

இராவணனை அழிக்க வேண்டுமானால் அதற்கு முன் அவன் மகன் இந்திரஜித்தை அழிப்பது அவசியம். ஆனால் ராமனால் இந்திரஜித்தை வதைக்க முடியாத நிலை இருந்தது. அதற்கு காரணம் அவன் வாங்கியிருந்த வரம். “எவர் ஒருவன் 14 ஆண்டு காலம் தூங்காமல் இருக்கின்றாரோ அவரின் கையால் தான் தன் மரணம் நிகழ வேண்டும்” என்ற வரத்தை இந்திரஜித் பெற்றிருந்தான். ஆதலால் பதினான்காண்டு காலம் உறங்காமல் இருந்த லட்சுமணன் அவனை வதைத்து இராமனுக்கு மிகவும் பெரிய வெற்றியைப் பெற்று தந்தார். இராமருக்கு லட்சுமணன் இப்பேருதவி செய்வதற்கு அடிப்படை காரணம் ஊர்மிளாவே ஆவார். இராமரோ மகாவிஷ்ணுவின் அவதாரம், சீதாதேவியோ மகாலட்சுமியின் அவதாரம், அதேபோல் லட்சுமணரும் ஆதிசேஷனின் அவதாரம், இவ்வாறு இருக்க மனிதப்பிறவியான ஊர்மிளாவின் இத்தகைய குண நலன்கள் அரச வம்சங்களுக்குறிய உயர்வுமிக்க குணங்களாகும்.

வனவாசம் முடிந்து ராமன் அயோத்தி திரும்பி பட்டாபிஷேகம் செய்துகொண்டான். அப்போதும் லட்சுமணன் ஊர்மிளையை ஏறெடுத்துக்கூடப் பார்க்கவில்லை. இவர்களுக்குள் உள்ள மனபேதத்தை ஊகித்தறிந்த சீதாதேவி, ஒருநாள் ஊர்மிளையை அழைத்துக் காரணம் கேட்டாள். அப்போதும் ஊர்மிளை சொல்ல மறுத்தாள். சீதா மிகவும் வற்புறுத்த தான் செய்த செயலையும் அதற்கான காரணத்தையும் விளக்கினாள் ஊர்மிளை. சீதை பிரமித்து நின்றாள். ஊர்மிளா! ஆயிரம் சீதைகளும் உனக்கு ஈடாக மாட்டார்கள். விரைவிலேயே நான் இலட்சுமணனிடம் நடந்ததையெல்லாம் எடுத்துக்கூறி, உங்கள் இருவரின் பிரிவுத் துயரைத் துடைக்க வழி செய்கிறேன் என்றாள் சீதா. இதற்கான தருணத்தை சீதை எதிர்நோக்கியிருந்தாள். அப்போதுதான் ஶ்ரீராமன் கர்ப்பிணியான சீதையை காட்டுக்கு அழைத்துச் சென்று வால்மீகி ஆஸ்ரமத்தில் விட்டு வருமாறு லட்சுமணனுக்குக்

**ISBN NUMBER: 978-93-91115-78-4**

கட்டளையிட்டான். இந்தத் தகவலை சீதைக்குத் தெரிவிக்காமல் மனதிற்குள் புழுங்கியபடி, கண்ணீரோடு லட்சுமணன் தேரைச் செலுத்திக்கொண்டிருந்த வேளையில்தான் அவனிடம் ஊர்மிளையின் தியாகத்தை எடுத்துக் கூறி அவளை ஏற்றுக் கொள்ளும்படி சொன்னாள் சீதை. ஒரு பக்கம் துயரமும், மறுபக்கம் ஊர்மிளை பற்றிப் பெருமிதமும் கொண்ட லட்சுமணன், அண்ணி! எனக்கொரு நல்ல செய்தியைச் சொன்னீர்கள். அதற்காக நன்றி! ஆனால் இந்தப் பாவி உங்களுக்கொரு அதிர்ச்சியான செய்தியைச் சொல்ல வேண்டிய நிலையில் உள்ளேன். என் அண்ணனின் ஆணைப்படி, தங்களை இந்தக் கானகத்திலேயே விட்டுச் செல்ல வந்திருக்கிறேன். என்னை மன்னியுங்கள்! என்று கூறி கதறி அழுதான். அப்போது சீதை அதிர்ச்சியில் மனமுடைந்து சொன்னாள். லட்சுமணா! ஸ்ரீராமன் எது செய்தாலும் அதில் ஒரு தர்மம் இருக்கும்; ஒரு நியாயம் இருக்கும் அயோத்தியின் ஒரு பிரஜைக்கு நியாயம் வழங்க எனக்கு இந்த இரண்டாவது வனவாசம் தந்திருக்கிறார், பரவாயில்லை, ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் ஒரு வேண்டுகோள். எக்காரணம் கொண்டும் எந்தக் காலத்திலும் உன் மனைவி ஊர்மிளைக்கு இதுபோல் தண்டனை எதுவும் தந்துவிடாதே! தர்மம் அதை ஒருகாலும் தாங்காது! பாவம் லட்சுமணன்! தாங்க முடியாத துயரத்துடன் அயோத்தி வந்தவன். நேராக ஊர்மிளையைச் சந்தித்து, அவள் தன் மனைவி என்றும் பாராமல் அவள் கால்களில் விழுந்து, அவள் பாதங்களைக் கண்ணீரால் கழுவினான்.

இராமன் இருக்குமிடமே அயோத்தி என்ற கணவனின் திருவடிகளைப் பின்பற்றிக் கானகம் சென்று, பல துயரங்களை அனுபவித்து, பின்பு அக்னிப்பிரவேசம் செய்யவும் தயாரான சீதையின் குணங்களும், அரச போகம் அனைத்தையும் துறந்து, அண்ணன் ராமனுக்குச் சேவை செய்ய 14 ஆண்டுகள் இமைக்காமல், கானகத்தில் தொண்டு செய்த லட்சுமணனின் குணங்களும் கடந்து, கணவன் ஏற்றுக்கொண்ட தியாகப் பணி தடையின்றி நடக்க தன்னையே அவன் வெறுத்து ஒதுக்கும் சூழ்நிலையை உருவாக்கி, அந்தத் துயரத்தைத் தன்னுள்ளேயே புதைத்துக்கொண்டு, 14 ஆண்டுகள் உணவு, உறக்கமின்றி அரண்மனைக்குள்ளேயே அக்ஞாதவாசம் செய்து வாழ்ந்த ஊர்மிளையின் சிறப்பும் அரச வம்சங்களின் மதிப்புமிக்க குணங்களாகும்.

**பரதன் - மந்திரை – கைகேயி**

இராமர் வனவாசம் சென்ற போது பரதனும், சத்ருக்கனனும் அவர்களின் தாய்வழி உறவினர் இடத்தில் இருந்தனர். இராமரைத் தனது தாய் வனவாசம் செல்லவேண்டும் என அறிவித்ததை அறிந்தவுடன், பரதன் கைகேயியைத் தன் தாய் என்றும் பாராமல் தாக்க முற்பட்டான். இதனைத் தடுக்க வந்த மந்திரை(கூனி) இராமனின் நலனுக்காகத்தான்

**ISBN NUMBER: 978-93-91115-78-4**

கைகேயி அவ்வாறு செய்தார் என்று கூறியவுடன் பரதனின் கோவம் மந்திரையின் பக்கம் திரும்பியது.

**பரதன் மந்திரையை தாக்குதல்**

மந்திரையை நோக்கி ஆவேசமாக சென்ற பரதனை சத்ருக்கணன் தடுத்தார். பெண்ணைக் கொல்லும் பெரும்பாவத்தில் இருந்து பரதன் சத்ருக்கணனால் தடுக்கப்பட்டார். அதற்குப்பின் பரதன் தாயென்றும் பாராது, கைகேயியை நிராகரித்தான். மந்திரைக்கும், கைகேயிக்கும் சொர்க்கத்திலும், தனது இதயத்திலும் இடம் இல்லாமல் போகட்டும் என்று சாபம் கொடுத்தார். அதற்குப்பின் தனது தாயாக சுமித்ரையையும், கோசாலையையும் மட்டுமே நினைக்க தொடங்கினார்.

**பரதனின் செயல்**

இராமரை அயோத்திக்கு அழைத்து வர நினைத்து, சென்ற பரதன் தோல்வியுடன் அயோத்திக்கு திரும்பி, இராமரின் காலணியை அயோத்தியின் அரியாசானத்தில் வைத்து ராஜ்ஜிய பணிகளை கவனித்தார். மேலும் அரண்மனையின் ஆடம்பரங்களை தவிர்த்து குடிசையில் குடியேறினார். அவரைத் தொடர்ந்து அவரது மனைவி மாண்டவியும் அவருடன் குடிசையில் வாழத் தொடங்கினாள்.

**பரதனும் மாண்டவியும் நந்திகிராமம் புறப்படுதல்**

இராமர் தூங்கிய பூமியின் மட்டத்திலிருந்து ஒரு அடி கீழே தனது சொந்த படுக்கையை பரதன் தோண்டியபோது, தனது கணவருக்கு மரியாதை செலுத்துவதற்காக மண்டவி தனது படுக்கையை கணவரின் படுக்கைக்கு இரண்டு அடி கீழே அமைத்துக் கொண்டார். அவர் அரண்மனையை விட்டு விலகி நந்திகிராமில் குடிசை அமைத்து வசிக்கத் தொடங்கினார். அங்கிருந்தே அயோத்தியின் இராஜபணிகளை செய்து வந்தார். தாய் பெற்றுத்தந்த ராஜ்ஜியத்தைத் துச்சமாக மதித்து, தனயன் திருவடிகளைத் தாங்கும் பாதுகைகளை சிம்மாசனத்தில் வைத்து பூஜித்து, அயோத்தியின் சேவகனாக பதினான்கு ஆண்டுகள் வாழ்ந்த பரதன் மற்றும் மாண்டவியின் குணங்கள் போற்றுதலுக்குரியதாகும்.

**சத்ருக்கணன் - ஸ்ருதிகீர்த்தி**

அரண்மனையில் தனது சகோதரர்கள் யாரும் இல்லாததால், சத்ருக்கணன் தனது மனைவியுடன் தங்கி தனது அம்மாக்களையும், நிர்வாகத்தையும் கவனிக்க முடிவெடுத்தார். இராமர்-சீதை, இலட்சுமணன்-ஊர்மிளா, அல்லது பரதன்-மண்டவி அல்ல, சத்ருக்கணனும் அவரது மனைவி ஸ்ருதகீர்த்தியுமே அயோத்திக்கு அரச பொறுப்பாளர்களாக பதினான்கு ஆண்டுகள் வாழ்ந்தனர்.

**ISBN NUMBER: 978-93-91115-78-4**

**கோசலை சுமித்திரை**

தங்கள் மகன்கள் அரண்மனையை விட்டு வெளியேறியதும் கோசலையும், சுமித்ரையும் மரணப்படுக்கையில் இருந்த தங்கள் கணவர் தசரதனை கவனித்துக் கொண்டனர். தசரதரின் மரணத்திற்கு பிறகு இராமரை சமாதானம் செய்து அழைத்து வரும்படி பரதனை அனுப்பினர். ஆனால் இராமர் அதற்கு மறுக்கவே அரண்மனை ஆடம்பரங்களை தவிர்த்து பதினான்கு ஆண்டுகள் நித்திரையில் வீழ்ந்த தங்கள் மருமகள் ஊர்மிளையை பார்த்துக் கொள்ளும் பொறுப்பை ஏற்றுக்கொண்டனர்.

இவ்வாறாக ரகு மற்றும் நிமி வம்ச பந்தங்களின் சிறப்புமிகு குணங்கள் இப்பதினான்கு ஆண்டுகளில் தெளிவுற அறிய முடிகின்றன. வனவாசம் முடிந்து அயோத்தியில் மீண்டும் கோலோச்சிய வம்சங்களின் பரம்பரையின் பட்டியல் பின்வருமாறு,

**ரகுவம்ச நிமிவம்ச பந்தங்களின் பரம்பரைகள்**

**ராமன் மகன்கள் லவன் மற்றும் குசன்.**

**பரதன் மகன்கள் தஷகன் மற்றும் புஷ்கலன்.**

**லட்சுமணன் மகன்கள் அங்கதன், சந்திரகேது.**

**சத்ருக்கணன் மகன்கள் சுபாகு, சூரசேனன்.**

**குசன் மகன் அதிதி**

**அதிதி மகன் புண்டரீகன்**

**புண்டரீகன் மகன் ஷேமதனுவா**

**இவ்வாறாக, தேவானீகன்**

**அகீனரு**

**குரு**

**பாரியாத்திரன்**

**பலன்**

**சலன்**

**உற்தன்**

**வச்சிரநாபன்**

**சங்கணன்**

**வியுஷிதாசுவன்**

**விசுவயஹன்**

**ஹிரண்யநாபன்**

**தனமன்**

**ISBN NUMBER: 978-93-91115-78-4**

**துருவசந்தி**

**சுதரிசன்**

**அக்னிவர்ணன்**

**சீக்கிரகன்**

**மரு (இவரே அடுத்து வரும் கிருத யுகத்தின் சூரிய வம்சத்தில் முதல் மன்னன் ஆவார்).**

**பிரசுசுரன்**

**சுசந்தி**

**அமர்ஷன்**

**ஸஹஹ்வான்**

**விசுவபம்வன**

**பிரகத்பலன் (இவரே சக்கரவியூகத்தில் அபிமன்யுவை எதிர்த்த 6 மகாரதர்களில் ஒருவராவார்.**

**இன்னும் பல…"**

**(வால்மீகி இராமாயணம், அயோதியா காண்டம் -110 மற்றும் ஸ்ரீ விஷ்ணு புராணம்)**

**முடிவுரை**

கம்பராமாயண காவியத்தைக் கருதும் போது அரசருக்குரிய அம்சங்களான படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் எனும் ஆறு குணங்கள் அமையப்பெற்றும், அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் எனும் பண்புகளில் நீங்காமலும் காலந்தாழ்த்தாமை, கல்வியுடைமை, ஆய்ந்து துணிவான முடிவெடுத்தல் போன்ற மூன்று சிறப்பான ஆட்சிக்குரிய முக்கியத்துவத்தையும் கொண்டு நல்வழி நடந்து கொடியவற்றைக் களைந்து வீரத்தில் குறைவில்லாது வாழும் அரசர், மாண்புகொண்ட வழியில் நின்று வல்லமையான அரச குணங்களைப் பெற்ற வம்சங்கள் இரகு மற்றும் நிமி வம்சங்கள் என்பது ஆய்வின் வழி பதிவுச்செய்யப்பட்டுள்ளன. அவரவர் உறவுமுறைக்குத் தக்க உயர்ந்த குணங்களுடன் காட்சிப்படுத்தப்பட்டு மானுட வாழ்விற்குத் தக்க வழிகாட்டுதலாய் இவ்வம்சங்கள் அமையப்பெற்றுள்ளன என்பதும் ஆய்வில் விளக்கப்பட்டுள்ளன.

**துணைநூற்பட்டியல்**

[1] கோ. செல்வம், கம்ப நாடகம் (துனிஉறுமுனிவன்), பாலகாண்டம், முதற்பதிப்பு, புவனம் பதிப்பகம், சென்னை – 114, ஜூலை-1988.

[2] ச.வே.சுப்பிரமணியன், கம்பன் கற்பனை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,

முதற்பதிப்பு, தமிழ் பதிப்பகம், அடையாறு, சென்னை – 20, 1978.

[3] டாக்டர் ம.பொ. சிவஞானம், கம்பரின் சமயக்கொள்கை, பூங்கொடி பதிப்பகம், முதற்பதிப்பு, குரு அச்சகம், சென்னை – 05, 1983.

[4] டாக்டர். ரா.வே. சேதுப்பிள்ளை, கம்பர் கவி இன்பம், தொகுதி – 2, கிட்கிந்தா-சுந்தர-யுத்த காண்டங்கள், கம்பன் கழகம், முதற்பதிப்பு, இராஜபாளையம்- 626117, 2004

[5] பி.எஸ்.ஆச்சார்யா, வால்மீகி இராமாயணம் (முழுவதும்), புதிய புத்தக உலகம், நர்மதா பதிப்பகம், சென்னை – 17.

[6] புலவர். அ. அருணகிரி, கம்பன் காட்டும் தீராக்காதலன், வானதி பதிப்பகம், தி.நகர், முதற்பதிப்பு ,சென்னை – 17, 1984.

[7] வில்லிவலம் கிருஷ்ணமாச்சார்யஸ்வாமி, ஸ்ரீ விஷ்ணு புராணம் (1), ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ட்ரஸ்ட், இரண்டாம் பதிப்பு, சென்னை – 04, 2003.

[8] வை.மு. கோபால கிருஷ்ணமாச்சிரியர், கம்பராமாயணம், நான்காவது கிட்கிந்தா காண்டம், வை.மு. கோபாலகிருஷ்ணமாச்சிரியர் கம்பெனி, மூன்றாம் பதிப்பு, சென்னை- 05, 1957.

**Reference Books**

[1] BS Acharya, *The Valmiki Ramayana* (Throughout), New Book World, Narmada Publishing, Chennai – 17.

[2] Co. Selvam, *Kamba Natakam* (Tuniurumunivan), Balakandam, First Edition, Bhuvanam Publishing House, Chennai - 114, July – 1988.

[3] Dr. M.P. Sivagnanam, *The Religious Policy of Kambar*, Poongodi Publishing House, First Edition, Guru Press, Chennai - 05, 1983.

[4] Dr. R.W. Sethupillai, *Kambar Kavi Inpam*, Volume - 2, Kitkinda-Sundara-War Contents, Kamban Corporation, First Edition, Rajapalayam- 626117, 2004/

[5] S.V. Subramanian, *Kamban Imagination*, World Tamil Research Company, First Edition, Tamil Publishing, Adyar, Chennai - 20, 1978.

[6] Villivalam Krishnamacharyaswamy, *Sri Vishnu Purana* (1), Sri Nrusimhapriya Trust, Second Edition, Chennai - 04, 2003.

[7] Puzhavar. A. Arunagiri, *The Hero Lover Showed b Kamban*, Vanathi Publishing House, The Nagar, First Edition, Chennai - 17, 1984.

[8] Y.M. Gopala Krishnamacharya, *Kambaramayanam*, Nankavathi Kitkinda Condom, Y.M. Gopalakrishnamacharya Company, Third Edition, Chennai-05, 1957.

# 3

## கம்பன் கண்ட அனுமன்

## Kamban's Hanuman

**திருமதி பெ. பாரதி,** கௌரவ விரிவுரையாளர், முனைவர்பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்),

தமிழ்த்துறை, அரசு மகளிர் கலைக்கல்லூரி, கிருஷ்ணகிரி.

**Mrs.P. Bharathi,** Guest Lecturer, Ph.D Scholar (Part-Time), Department of Tamil,
Govt. Arts College (Women), Krishnagiri.

**ORCiD: https://orcid.org/0000-0002-1099-8607**
**DOI: 10.5281/zenodo.6967062**

## Abstract

*Myths and legends are created to unite people to lead the world in righteousness and to develop among them the attributes of love, grace, devotion and charity. These guide the lives of the people of the world. "Kambaramayanam" is an acclaimed epic in the world literary genre and a literary masterpiece for the unparalleled Tamil language. Kambar was the one who gave the incomparable epic Kambaramayanam to the people of the world like Tirumal who gave nectar to the gods. "Kambaramayanam" excels in storytelling, copywriting, character creation, drama, poetry and imagination. Through the character works of this book, Kambar shows the path to the well-being of the people of the world. In that way, he has made the glory of the incarnation and the glory of the name of Rama known to the world through Hanuman, the form of virtue, the selfless pure character. In particular, he has given a complete form to devotion through the work of Hanuman, the protagonist of the Sundara Kanda, which is considered to be the best of the Kamba Ramayana. This chapter aims to explore how Kambar's poetry is effective in the portrayal of Hanuman.*

**Key words:** Kamban, *Kambaramayanam*, Hanuman.

### முன்னுரை

ஒப்பற்ற காப்பியம், அறத்தை நிலைநாட்டல், கம்பர், சுந்தரகாண்டம், அனுமன், இராமநாமம், கண்டேன் சீதையை, திருவடி தொழுதல், இராவணன், சம்புமாலி, கிங்கரர்கள், பஞ்சசேனாபதிகள், அக்ககுமாரன், இந்திரசித்தன், பிரம்மாஸ்திரம், அரக்கர்கள், தேவர்கள், அசோகவனம், சிறந்த தொண்டன். இந்தியாவின் இருபெரும் இதிகாசங்களுள் ஒன்று இராமாயணம் இது திருமாலின் அவதாரமான இராமனுடைய ஒப்பற்ற கதையைக் கூறும் காப்பியம். தமிழில் இராமகாதை வழங்கியமைக்கான சான்றுகள் சங்ககாலத்திலிருந்து

கிடைத்துள்ளன. ஊன்பொதி பசுங்குடையார் எனும் சங்கப்புலவர் இராவணன் சீதையைக் கவர்ந்த நிகழ்வை குறிப்பிட்டுள்ளார். திருமாலின் பெருமையைப் பாடிப் பரப்பிய ஆழ்வார் பெருமக்களும் பக்தி பரவசத்தோடு இராம அவதாரத்தை சிறப்பித்தப் பாடியுள்ளனர். அந்தவகையில் இராமனின் புகழைப் பாட வேண்டும் என்ற விருப்பத்தோடு தானே விரும்பி எழுதிய காப்பியம் இராமாயணம் என்று கம்பர் குறிப்பிட்டிருக்கிறார். இதனை,

**“ஆசை பற்றி அறையலுற்றேன் – பற்று இக்**

**காசு இல் கொற்றத்து இராமன் கதை அரே!”**

என்ற பாயிர அடிகளால் அறியமுடிகிறது. ரகுவம்சத்தில் தசரத சக்கரவரத்தியின் மகனாக திருமால் எடுத்த இராம அவதாரத்தின் சிறப்பைக் கூறுவது கம்பராமாயணத்தின் முதன்மை நோக்கமாகும். ஆயினும் பாத்திரங்களின் செயல்பாடுகளைக் கொண்டு அறத்தை நிலைநாட்டச் செய்வதும் அக்காப்பியத்தின் தனித்தன்மைகளுள் ஒன்றாகும். கம்பர் மனித நேயமிக்க கதாபாத்திரங்கள் பலவற்றை, பல்வேறு கோணங்களில் படைத்தமையை கம்பராமாயணம் எடுத்துக் காட்டுகிறது. ‘**மண்ணுயிர் மக்களை தன்னுயிராக மதித்த மன்னன் தயரதன். ஒரு வில்; ஒரு சொல்; ஒரு இல் என்று வாழ்ந்து காட்டிய இராமன், கற்புக் கனலியான சீதை, அன்பே உருவான குகன், தன்னலமற்ற இலக்குவன், பிறர் மனை நோக்கிய பேராண்மை மிக்கவர்களான வாலி, இராவணன், சொல்லின் செல்வனான அனுமன்**’ என இன்ன பிற கதாபாத்திரங்களும் கம்பராமாயணத்தில் இடம்பெறுகின்றன. அவ்வகையில் அறநெறி மாறா அனுமனை கம்பர் பல்வேறு நிலைகளில் படைத்துக் காட்டியிருக்கிறார்.

***கம்பராமாயணம்***

தமிழ் காப்பிய உலகின் தனக்கென தனிச்சிறப்பினைப் பெற்ற காப்பிய நூலாக கம்பராமாயணம் திகழ்கிறது. ஆதி காவியமாகிய வால்மீகி இராமாயணத்தைத் தழுவி சிறந்த முறையில் சில மாறுதல்களோடு கம்பர் இந்நூலை தமிழில் இயற்றியுள்ளார். இராம அவதார சிறப்புகளைக் கூறும் இந்நூலுக்கு கம்பர் முதலில் இராமவதாரம் என்று பெயரிட்டார். பின்னர் நூலின் சிறப்புக் கருதியும், இயற்றப்பட்ட கம்பரின் பெயரோடு இணைத்தும் கம்பராமாயணம் என்று அழைக்கப்படுகிறது. **“கம்பர் இராமகாதையைப் பாடுவதற்கு முன் அக்கதை தமிழ் மக்களிடையே மிக நன்றாகப் பரவியிருந்திருக்கின்றது. வால்மீகி இராமாயணத்திலுள்ள கதை நிகழ்ச்சிகளுள் சிலவற்றை நீக்கியும், சிலவற்றை மாற்றியமைத்தும், சிலவற்றைப் புதிதாக உருவாக்கிக் கொண்டும் கம்பர் தமிழர்களுடைய பண்பாட்டு, இலக்கிய மரபுகளுக்கேற்ப தமது இராம காதையைப் புதுக்கியிருக்கின்றார்” (கம்பர் கண்ட இராமன், நா. பழனிவேலு, ப. 3).** கம்பராமாயணம் பாலகாண்டம்,

**ISBN NUMBER: 978-93-91115-78-4**

அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் எனும் ஆறு காண்டங்களையும் நூற்றி இருபத்தி மூன்று (123) படலங்களையும். பத்தாயிரத்து ஐந்நூறு (10500) பாடல்களையும் கொண்டுள்ளது. ஏழாம் காண்டமாகிய உத்தரகாண்டம் என்னும் பகுதியை அவரின் சம காலத்து புலவராகிய ஒட்டக்கூத்தர் இயற்றினார். கமபரின் இராமாயணத்தைக் ‘**கம்ப நாடகம்**’ எனவும் ‘**கம்பசித்திரம்**’ எனவும் கற்றறிந்த அறிஞர் பெருமக்கள் கூறுவதுண்டு.

**கம்பர்**

சோழ நாட்டில் திருவழுந்தூரில் ஆதித்தன் என்பவரின் மகனாகப் பிறந்தவர். உவச்சர் குலத்தைச் (பூசாரிக்குலம்) சார்ந்தவர். திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப் பெற்றவர். குலோத்துங்க சோழனின் அவைக்களப் புலவராகவும் இருந்தவர். காலம் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு ஆகும். இவர் வடமொழி, தென்மொழி ஆகிய இரண்டிலும் புலமை மிக்கவராவார். இவர் பாடிய நூல்கள் கம்பராமாயணம், சடகோபர் அந்தாதி, சரஸ்வதி அந்தாதி, ஏர் எழுபது, சிலை எழுபது, திருக்கை வழக்கம் முதலியனவாகும். இவருடைய பாடல்கள் சொல்லழகும், பொருளழகும், கவிநயமும் கொண்டு விளங்குகிறது. கம்பரின் படைப்புகளில் கம்பராமாயணம் தமிழ் இலக்கியத்தில் தலைசிறந்த காப்பியமாகக் கருதப்படுகிறது. கம்பராமாயணத்தினைப் படித்த பலரும் கம்பனின் கவித்திறனைப் பலவாறாக பாராட்டியுள்ளனர். அந்த வகையில் ‘**கல்வியிற் சிறந்த தமிழ்நாடு – புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு**’ என்று பாரதியாரும், ‘**வடமொழி தென்மொழிக் காப்பிய நயங்களாகிய பொன் மையில் தம் சித்திர கோலைத் தோய்த்துத் தம் காப்பிய ஓவியத்தை கம்ப நாடார் வரைந்தார்**’ என்று மு. இராகவையங்காரும் சிறப்பித்துக் கூறுவதை அறியமுடிகிறது. கம்பருக்கு ‘**கல்வியிற் பெரியோன் கம்பன்**’,‘**கவிச் சக்கரவர்த்தி**’ போன்ற பட்டப் பெயர்களையும் சூட்டியுள்ளனர். சிறந்த வைணவ பத்தராகிய இவர் ‘**கம்பநாட்டாழ்வார்**’ என்னும் சிறப்பு பெயராலும் அழைக்கப்படுபவர்.

**சுந்தர காண்டம்**

‘**சுந்தரம்**’ என்பதற்கு ‘**அழகு, இனிமை, நன்மை**’ என்றெல்லாம் பொருள் உண்டு. ‘**காண்டம்**’ என்பது பெருங்காப்பியத்தின் காப்பிய ‘**உட்பிரிவை’க்** குறிக்கும். அந்த வகையில் ‘**சுந்தர காண்டம்**’ என்பது ‘**அழகிய பகுதியை**’க் குறிப்பதாகும். கம்பராமாயணத்தின் ஐந்தாவது புகழ்பெற்ற காண்டமான சுந்தர காண்டத்தில் **கடல் தாவு படலம்** முதல் **திருவடி தொழுத படலம்** முடிவுற பதினைந்து படலங்கள் அடங்கிய பகுதி முழுவதும் அழகுற அமைந்தள்ளன. அதிலும் குறிப்பாக சுந்தர காண்டத்தின் தலைவனான அனுமனுக்கு சுந்தரன் என்ற பெயரும் உண்டு. “**இராம சௌந்தரியத்தில் முற்றிலுமாகத்**

**தன்னை ஆட்படுத்திக் கொண்ட அனுமனும் அகத்திலும் புறத்திலும் அழகனாக (சௌந்தர்யனாக) மாறுவதில் வியப்பொன்றுமில்லை. வான்மீகியின் சுந்தர காண்டத்திற்கு விளக்கம் எழுதியவர்கள் பக்தி சௌந்தரியம், வீர சௌந்தரியம் என்ற இரண்டும் நிறைந்தமையின் அனுமன் சுந்தரன் எனப்பட்டான்"(கம்பராமாயணம், இராமாவதாரம், சுந்தரகாண்டம், பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் (மு.ப.ஆ.), ப. 16)** என்று உரையாசிரியர்கள் குறிப்பிட்டிருப்பதை அ.ச. ஞானசம்பந்தன் பதிவு செய்துள்ளார். அவ்வகையில் காண்டம் முழுவதும் பேருருவம் கொண்டு விளங்கும் அனுமனின் பெருமைகளை கூறும் பகுதியாதலால் சுந்தர காண்டம் எனப் பெயர் பெற்றது. கம்பராமாயணத்தின் ஏனைய காண்டங்களுக்கு அக்காண்டத்தில் வரும் நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு பெயரிடப்பட்டது. இக்காண்டத்திற்கு 'அழகு' என்ற பொருளில் '**சுந்தரக் காண்டம்**' எனப் பெயரிடப்பட்டது சிறப்பிற்குரியதாகும்.

**அனுமன்**

அனுமனின் தாய் '**அஞ்சனாதேவி**' தந்தை '**கேசரீ**' என்ற வானரத் தலைவர் ஆவார். இவர்களின் குலதெய்வம் '**வாயு பகவான் பஞ்சபூதங்களில் ஒருவர்**' ஆவார். இவர் அனுமனுக்கு தந்தையாகவும், குருவாகவும் இருந்து வழி நடத்தியதால் அனுமன் '**வாயுபுத்திரர்**' என்றும் அழைக்கப்படுகிறார். '**மாருதி**', '**ஆஞ்சநேயன்**' போன்ற பெயர்களும் உண்டு. இராமாயணம் தவிர மகாபாரதம் மற்றும் புராணங்களிலும் அனுமனைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. இராமன் மீது கொண்ட அளவற்ற பக்தியால் இராமனின் தொண்டனாக விளங்கியவர். தம் வாழ்நாள் முழுவதும் பிரம்மசரியத்தைக் கடைப்பிடித்தவர். **"இராமாயணக் கதை மாந்தருள், இராமன் சீதைக்கு அடுத்தபடியாக அனுமனுக்கே சிறப்புப் பெருமையும், தெய்வத்தன்மையும் இருப்பதாக நம்பி மக்கள் அனுமனை வழிபடுகின்றனர்"(சுந்தர காண்டச் சுரங்கம், ப. 7).** கருடாழ்வாரைப் '**பெரியதிருவடி**' என்றும், அனுமனைச் '**சிறிய திருவடி**' என்றும் வழங்குவது வைணவ மரபாகும். அந்த வகையில் வைணவக் கோயில்களில் அனுமருக்கு தனி சன்னதி உண்டு.

**சுந்தரக்காண்டத்தில் அனுமன்**

வானர குலத்தில் தோன்றினும் மேன்மையான தரத்தில் பணியாற்றும் உள்ளத்தையும், ஆராய்ந்து முடிவு செய்யும் திறமையும் தகுதியும் அமைந்த ஒரு கதாப்பாத்திரமாக அனுமனின பாத்திரப் படைப்பு அமைந்துள்ளது. மனிதப் பண்புகளையும் விஞ்சி நிற்கும் கதாபாத்திரமாகவும், '**தொண்டு**' என்ற ஒரு சொல்லின் முழு வடிவமாகவும் தொடக்கத்திலிருந்து இறுதிவரை '**அனுமன்**' கம்பனால் படைக்கப்பட்டிருக்கிறான். தொண்டனிடத்து அகப்பட்டுக் கொள்ளும் பரம்பொருள் கூட அவனை விட்டு

ISBN NUMBER: 978-93-91115-78-4

நீங்காதவானகிறான். உலக இலக்கியங்களில் "**தொண்டு என்ற ஒரு பண்புக்கு இத்தகைய ஒரு மாபெரும் வடிவம் கொடுத்த கவிஞர்கள் கம்பன் தவிர யாரும் இலர் என்பது கண்கூடு"(கம்பராமாயணம், சுந்தரகாண்டம், பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் (ப.ஆ), ப. 58).** கிட்கிந்தா காண்டம் மற்றும் யுத்தகாண்டத்தை விட சுந்தரகாண்டத்தில் கம்பன் அனுமனின் புகழை நன்கு பாடியிருக்கிறார். இதில் அனுமனின் **ஆற்றல், இரக்க குணம், கடமையுணர்வு, கூரிய மதிநுட்பம், நீதியுணர்வு, தன்னடக்கம்** போன்ற அற்புத குணங்களை வெளிப்படுத்தியிருக்கிறார். கம்பன் தான் படைத்த பாத்திரங்களுக்கேற்ப அடைமொழிகள் தந்து அப்பாத்திரங்களின் முக்கியத்துவத்தை விளக்குவார். அதுபோல, அனுமனுக்குக் கம்பன் அடைமொழிகள் கொடுத்து சிறப்பித்திருக்கிறார். இதனை,

**"கல்லாத கலையும் வேதக் கடலுமே" (கி.காண். 64)**

**"அழுங்கா மனத்து அண்ணல்" (சு.காண். 51)**

**"அறத்துக்கு ஆங்கொரு துணையென நின்ற அனுமன்" (சு.காண். 1044)**

**"கோது இல் சிந்தை அனுமன்" (கி.காண். 600)**

**"அரி உருவான ஆண் தகை" (சு.காண். 1112)**

**"நூற் பெருங்கடல் நுனித்துணர் கேள்வியான்" (சு.காண். 300)**

என்ற தொடர்களால் காணமுடிகிறது. இது போன்ற அடைமொழிகள் அனுமனின் தொண்டின் மீது கம்பன் கொண்ட ஆழ்ந்த பக்தியை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

**கடலைக் கடந்து செல்லல்**

சுக்கிரீவனின் ஆணைப்படி சீதையைத் தேடி வரும் பொருட்டு எண் திசையிலும் செனற வானரப்படையில் தென்திசை, சென்ற அங்கதன் முதலியோர் இலங்கை நீங்கலாக அத்திசை முழுவதும் தேடிவந்தனர். சோர்ந்து போன அவர்கள் திரும்பிச் செல்ல மனமின்றித் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்ளத் துணிந்தனர். இந்நிலையில் முதியோனாகிய சாம்பவான் அனுமன் தான் இக்காரியத்தை செய்து முடிக்க வல்லான் என்று முடிவு செய்ததை,

**"நல்லவும் ஒன்றேர் தீயவும் நாடி நவைதீரச்**

**சொல்லவும் வல்லீர் காரியம் நீரேத் துணிகிற்பீர்**

**வெல்லவும் வல்லீர் மீளவும் வல்லீர் மீடல் உண்டேல்**

**கொல்லவும் வல்லீர் தோள்வலி ஒன்றுங்குறையாதீர்" (கி.காண். 1033)**

என்ற பாடலடிகள் வெளிப்படுத்துகிறது. பெருவீரனும், முதியோனும் ஆகிய சாம்பவானனின் ஏவலாலும், மூத்தோரை மதித்துப் போற்றும் பண்பினாலும் அனுமன் இலங்கை செல்ல முடிவெடுத்தான். கடலை கடந்து இலங்கை செல்ல வேண்டியிருப்பதால்

ISBN NUMBER: 978-93-91115-78-4

அனுமன் மூன்று உலகங்களையும் அளப்பதற்காக பேருருவம் எடுத்த திரிவிக்கிரமனைப் போல, மிகப் பெரிய உருவத்தை எடுத்து வானளாவ உயர்ந்தான். விண்ணை முட்டும் மகேந்திர மலையில ஏறி நின்ற அனுமனுக்கு இலங்கை கண்ணில் பட செல்லும் இடம் இது தான் என்று தெளிந்த சிந்தையுடன் அவ்விடத்தை நோக்கிப் பாய்ந்தான். பறவையைப் போல தன்னை மாற்றிக் கொண்டு உயரத் தாவி பறந்த தன்மையை கம்பர் அழகுற பாடியிருக்கிறார். வானரனாக இருந்தவன் வானவர் போல் விண்ணில் பறந்த அக்காட்சியை,

**“வால் விசைந்து எடுத்து, வன் தான் மடக்கி, மார்பு ஒடுக்கி, மானர்**
**தோள்விசைத் துணைகள் பொங்கக் கழுத்தினைச் சுருக்கித் தூண்டும்**
**கால் விசைத் தடக்கை நீட்டிக் கட்புலம் கதுவா வண்ணம்**
**மேல் விசைத்து எழுந்தான் உச்சி விரிஞ்சன் நாடு உரிஞ்ச வீரன்” (சு.காண். 16)**

என்ற பாடலால் காணமுடிகிறது. மேலும் அனுமன் பறந்து சென்ற அத்தன்மையானது திரிகூட மலையாகிய புதல்வனைப் பார்க்க வேகமாக பாய்ந்து செல்லுகின்ற மேருமலையை போன்று இருந்தது என்று குறிப்பிட்டிருக்கிறார். இதனை,

**“மாணி ஆம் வேடம் தாங்கி மலர் அயற்கு அறிவு மாண்டு ஓர்**
**ஆணி ஆய் உலகுக்கு எல்லாம் அறம் பொருள் நிரப்பும் அண்ணல்**
**சேண் உயர் நெடுநாள் தீர்த்த திரிதலைச் சிறுவன் தன்னைக்**
**காணிய விரைவில் செல்லும் கனக மால் வரையும் ஒத்தான்” (சு.காண். 26)**

என்ற பாடலடிகளில் அறிய முடிகிறது.

**மைந்நாக மலையின் அன்பைப் பெறுதல்**

பேருருவம் கொண்ட அனுமன் கடல் தாண்டிச் செல்கையில் இடையே மைந்நாக மலையொன்று மேலெழுந்து வந்தது. தன்னுயிர் காத்தவன் வாயுதேவன் என்று கூறி அவ்வன்பின் மீது கொண்ட அன்பை வெளிப்படுத்தும் வகையில் தன் மீது தங்கி சற்று இளைப்பாறி விட்டு, தான் அளிக்கும் விருந்தை உண்டு செல்லுமாறு வேண்டிக் கொண்டது. அம்மலையின் அன்பை நினைத்து நெகிழ்ந்த அனுமன் இராமனுக்குத் தொண்டு புரியும் தான் ஓய்வை விரும்பாதவனென்றும், வெற்றியடைந்து திரும்பும்பொழுது அதன் விருப்பத்தை நிறைவேற்றுவேனென்றும் கூறி தான் கொண்ட கடமைக்குரிய முக்கியத்துவத்தை எடுத்துரைக்கிறார். அனுமனின் கூற்றாக அன்புடையாரின் சிறப்பைக் கூறி அன்பே உயர்ந்தது என்று கம்பர் குறிப்பிட்டிருக்கிறார். இக்கருத்தை,

**“முன்பிற் சிறந்தாரிடை உள்ளுவர், காதல் முற்றப்**
**பின்பிற் சிறந்தார் குணம் நன்றிது பெற்ற யாக்கைக்கு**
**என்பிற் சிறந்தாயது ஓர் ஊற்றம் உண்டு என்ன லாமே!**

ISBN NUMBER: 978-93-91115-78-4

**அன்பிற் சிறந்தாயதோர் பூசனை யார் கண் உண்டே" (சு.காண். 60)**

என்ற பாடல் விளக்குகிறது. மைந்நாக மலை, வாயு தனக்குச் செய்த உதவியைக் கூறும் பொழுதும், அனுமன் அதற்கு அளித்த மறுமொழியிலும் அன்பும், என்பும் இடம்பெறுகின்றன. அன்பு அறத்திற்குச் சார்பு (அ) துணை என்று சொல்வதை விட அது தான் அடிப்படை என்று சொல்வது பொருந்தும். அவ்வகையில் வள்ளுவனின் வாக்கும் இக்கருத்தை நினைவூட்டுவதை,

**"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**

**என்பும் உரியர் பிறர்க்கு" (குறள். 72)**

என்ற குறளடிகள் வெளிப்படுத்துகின்றன. இதனால் **'அன்பின் சிறந்தாயதோர் பூசனை யார் கண் உண்டோ'** என்றும் கம்பரின் பாடல் பகுதி அன்புடையார் பிறர்க்கு உரியர் என்றும் குறள் பகுதியில் அடங்கியிருப்பதை அறியமுடிகிறது.

**சுரசை வாழ்த்துதல்**

சுரசை என்ற அரக்கி தோன்றி தன் பசிக்கு உணவாகுமாறு அனுமனிடம் கேட்கிறார். இராமர் இட்ட பணியை முடித்து திரும்பி வருகின்றபோது உணவாகிறேன். அதுவரை பொறுத்திருக்க வேண்டும் என்கிறார். ஆயினும் சுரசை கேட்கவில்லை இப்பொழுதே தன்னை உண்டு பசியாறுவேன் என்று சூளுரைத்து பெரிய வாயைத் திறந்து கொண்டு நிற்கிறாள். மந்திர வார்த்தைகள் பயன்படாத இடத்தில் தந்திர வார்த்தைகளே நன்மையை பயக்கும் என்று கருதி மீண்டும் சுரசையிடம் பேசினான்.

உள்ளே புகுவதாகவும், வல்லமை இருக்குமானால் தன்னை உண்ணுமாறும் கூறுகிறான். கைநொடிக்கும் கணப்பொழுதில் அவளுடைய வாய் சிறிது என்று கருதும்படி பேருருவம் கொண்டு அடுத்த நொடியே மிகச் சிறிய தேனீ போல் அவன் வாயில் புகுந்து வெளியே பறந்தான். இதனை,

**"பெண் பால் ஒரு நீ பசிப்பிழை ஒறுக்க நொந்தாய்**

**உண்பாய் எனது ஆக்கையை யான் உதவற்கு நேர்வல்**

**விண்பாலவர் நாயகன் ஏவல் இழைத்து மீண்டால்**

**நண்பால் ஏனச் சொல்லினள் நல்லறி வாளன் நக்காள்" (சு.காண். 68)**

என்ற பாடலடிகள் வெளிப்படுத்துகிறது.

**"நான் நாகக் கூட்டத்தின் தலைவி சுரசை என் பெயர். உன்னை சோதிக்கவே தேவர்களும் என்னை அனுப்பினர். என்னிடம் நீ விவேகமாய் நடந்து கொண்டது போலவே இனியும் நடந்து கொள்வாய் என்பதில் ஐயமில்லை. இனி நீ சந்திக்கப் போகின்ற இடையூறுகள் பரிசோதனைகள் அல்ல; அசலான சோதனைகள். அந்த சோதனைகளை**

ISBN NUMBER: 978-93-91115-78-4

**அதற்குண்டான விவேகத்தோடு எதிர்க்கொண்டு உன் கடமையை வெற்றிகரமாய் முடிப்பாயாக" (ஜெ.பு.பு.க.அ.க..இ.சௌ. ப. 241)** என்றாள் சுரசை.

**அங்காரத் தாரையை அழித்தல்**

அங்காரத் தாரை என்னும் அரக்கி நிழலைப் பற்றிக் கொண்டு உருவங்களை இழுக்கும் ஆற்றல் பெற்றவள். வானத்துக்கும், பூமிக்குமான தோற்றத்துடன் அனுமன் செல்லும் வழியை அடைத்து நின்றாள். அவளிடம் கருணையையும், தர்மத்தையும் எதிர்ப்பார்ப்பது தவறு என்று உணர்ந்தான். அரக்கியும் பெண்ணென்று தன்னை நினைக்க வேண்டாமென்றும், தன்னருகில் வந்தவர்கள் தேவர்கள் ஆயினும் உயிர் விடுதல் உறுதியென்றும் கூறினாள். எமன் கூட உதவி செய்தற் பொருட்டு வருவானாயின் அவனையே உண்பேன். கண்ணில் பட்ட உயிர்கள் அனைத்தையும் உண்பேன் என்று கூறிக்கொண்டு அனுமனை உண்ண வாய் திறந்தாள். அனுமனும் உள்ளே நுழைந்து தூணிலிருந்த வெளிப்பட்ட நரசிங்க மூர்த்தியை போல பேருருவம் கொண்டு அவள் வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளியே வந்தான். அனுமனின் அத்தோற்றத்தை,

**"திறந்தாள் எயிற்றை அவன் அண்ணல் இடை சென்றான்**
**அறந்தான் அரற்றியது அயர்த்து அமரர் எய்த்தார்**
**இறந்தான் எனக்கொரு ஓர் இமைப்பதனின் முன்னம்**
**பிறந்தான் எனப்பெரிய கோளரி பெயர்த்தான்" (சு.காண். 82)**

என்ற பாடலடிகளில் காணமுடிகிறது. அரக்கியின் வயிற்றைக் கிழித்துக்கொண்டு அவ்வயிற்றுக் குடல்களையும் சுற்றிக்கொண்டு அனுமன் வானில் பறந்தான். அச்செயலானது, பாம்பைப் பிடித்துக்கொண்டு வானில் பறந்து செல்லும் கருடனைப் போலவும், காகித வாலோடு பறக்கும் காற்றாடியைப் போலவும் இருந்ததென்று கம்பர் கவிநயம் பட பாடியுள்ளார்.

**இராம நாமத்தைப் பற்றிக் கொள்ளல்**

மலையில் ஜாம்பவான் அங்கதன் முதலியோருடன் அனுமனும் சேர்ந்து இராம நாமம் என்னும் மந்திரத்தை மனப்பூர்வமாக உச்சரித்தான். ஆதலால் சடாயுவின் தமையன் சம்பாதிக்குச் சிறகுகள் வளர்ந்து, அவன் பறந்து சென்றதைக் கண்கூடாக கண்டான். ஆகையால் அந்நாமத்தை உறுதியாகப் பற்றிககொண்டு தனக்கு வந்த துன்பங்கள் பலவற்றையும் கடந்து வந்தான். பெரியாழ்வாரும் 'நாராயணா' என்னும் திருநாமத்தைக் கூறினால்,

**"நண்ணிற் தொழுவார் சிந்தை பிரியாத நாராயணா" (பெரி.திரு. 140)**

என்று பெரியாழ்வார் திருமொழியில் எடுத்துக் காட்டுகின்றார். கம்பநாட்டாழ்வாரும் இராம நாமத்தின் மகிமையை கூறுவதை கம்பரும்,

**“நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே**
**தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே**
**சென்பமும் மரணமும் இன்றித் தீருமே**
**இம்மையே ராம என்று இரண்டு எழுத்தினால்”**

என்ற பாயிரம்வழி எடுத்துரைக்கின்றார். அனுமனும் ‘**இராமன் என எல்லாம் போம்**’ என்று எந்த வித இடையூறும் இன்றி இலங்கை நகருக்கு அருகிலுள்ள பவளமலையை வந்தடைந்தான். கம்பர் இராம நாமத்தின் சிறப்பை இராம பக்தனான அனுமனின் வாயிலாக உலகுக்கு எடுத்துக் காட்டிய விதம் போற்றுதற்குரியதாகும். அனைத்து துன்பங்களையும் தீர்க்கும் மந்திரம் இராம நாமம் என்பதை,

**“ஊறு கடிது ஊறுவன ஊறு இல் அறம் உன்னா**
**தேறல் இல் அரக்கர்புரி தீமை அவை தீர**
**ஏறும் வகை எங்கு ஊது இராம என எல்லாம்**
**மாறும் அதின் மாறு பிறது இல் என வலித்தான்” (சு.காண். 88)**

என்ற பாடலடிகள் தெளிவுப்படுத்துகிறது.

**இலங்கை மாநகருக்குள் புகுதல்**

தெய்வத் தச்சனாகிய விசுவகருமாவால் அமைத்த நகரம் இலங்கை மாநகம் அந்நகரத்தின் வளைவு உயர்ந்து நின்ற மாளிகைகளையும், பிரம்மாண்டமான மதில்களையும் பார்த்து அனுமன் வியந்தான். இருபது வெள்ளம் அரக்கர்கள் முன் வாயிலைக் காவல் காத்து நின்றனர். தேவர்களால் கூட இந்நகரத்தை எளிதில் கைப்பற்ற முடியாது. அவ்வாறிருக்க வானரப்படை இந்த இடந்தை அடைவது எப்படி, சீதையை மீட்பது எப்படி என்றெல்லாம் யோசித்தான். சீதையைத் தேடி கண்டுப்பிடித்து பின்னர் இதைப் பற்றி யோசிக்கலாம் என்று முடிவெடுத்தான். அது வரை யார் கண்களிலும் படாமல் இருப்பதற்காக, தனது உருவத்தைச் சுருக்கிக் கொண்டான். காவல் மிக்க வாயிலை கடந்து செல்லுதல் கடினமென்று அனுமன் நினைத்ததை,

**“கருங்கடல் கடத்தலரிது அன்று இந்நகர் காவல்**
**பெருங்கடல் கடப்பது அரிது எண்ணம் இறை பேரின்**
**அருங்கடன் முடிப்பதரிது ஆம் அமர் கிடைக்கின்**
**நெருங்கு அமர் கிடக்கும் நெடுநாள் என நினைத்தான்” (சு.காண். 167)**

என்ற பாடலால் தெரிய வருகிறது. காவல் மிகுந்த வாயிலின் வழியல்லாமல் மதிலைத் தாண்டிச் செல்வோம் என்று மதிலின் புறத்தே ஊர்ந்து சென்றான். அப்போது இலங்கையின் காவல் தெய்வமாகிய இலங்கை மாதேவி அனுமனை எதிர்த்து போரிட்டாள். ஆயுதங்களை இழந்த நிலையிலும் கைகளால் அனுமனைத் தாக்க முற்பட்டாள். ஆயினும் அனுமன் அவளை பெண் என்று கருதி கொல்லாமல் விட்டு அவள் மார்பில் அறைந்து தரையில் வீழ்த்தினான். அனுமனின் இரக்கக் குணத்தை, **“ஒடியா நெஞ்சத்து ஓரடி கொண்டான்” (சு.காண். 185)** என்று கம்பர் சிறப்பித்துப் பாடியுள்ளார். அனுமனால் வீழ்த்தப்பட்ட இலங்கை மாதேவி பிரம்மதேவனின் அருளை நினைத்து எழுந்து, அனுமனிடம் பேசினாள். பிரம்மனின் கட்டளைப்படி இந்நகரரைக் காவல் புரிந்தேன். வலிமை மிக்க குரங்கொன்று கைகளால் தன்னை அடித்து வீழ்த்தப்படும் அந்நாளில் அந்நகரின் காவலை விட்டுவிடுவேனென்றும் அதன் பின்னர் அந்நகரம் அழிவது உறுதியென்றும் கூறினார். அக்கூற்றுப்படியே நடந்தது என்று அனுமனைப் புகழ்ந்து விடைப்பெற்று சென்றதை,

**“அன்னதே முடிந்தது ஐய அறம் வெல்லும் பாவம் தோற்கும்**
**என்னும் ஈது இயம்ப வேண்டும் தகையதோ இனி மற்று உன்னால்**
**உன்னிய எல்லாம் முற்றும் உனக்கு முற்றாத்து உண்டோ**
**பொன்னகர் புகுதி என்னாப் புகழ்ந்து அவள் இறைஞ்சிப் போனாள்” (சு.காண். 189)**

என்ற பாடல் உணர்த்துகிறது. மேலும்,

**“அல்லவை தேய அறம் பெருகும் நல்லவை**
**நாடி இனிய சொலின்” (குறள். 96)**

என்ற திருக்குறள் கருத்துக்கு வலிமை சேர்த்தாற்போல கம்பனும், **‘அறம் வெல்லும் பாவம் தோற்கும்’** என்று குறிப்பிட்டிருப்பது சிறப்பிற்குரியதாகும்.

இராமனின் திருவடிகளை மனத்திலே நினைத்து இலங்கை நகருக்குள் நுழைந்து சீதையைத் தேடினான். **பசுக்களின் கொட்டில்கள், யானைக் கூடங்கள், தேர் மாடங்கள், குதிரை லாயங்கள், சோலைகள், ஆடல் பாடல்களைக் கண்டு கேட்டு மகிழும் அரக்க மகளிர் கூடும் இடங்கள், பல்வேறு மாளிகைகள்** முதலிய இடங்களிலெல்லாம் சென்று அனுமன் சீதையைத் தேடினான். இவ்விடங்களில் மட்டுமல்லாமல் பல்வேறு இடங்களிலும் தேடிச் சென்றமையை,

**“மாட கூடங்கள் மாளிகை ஒளிகை, மகளிர்**
**ஆடு அரங்குகள் அம்பலம் தேவர் ஆலயங்கள்**
**பாடல் வேதிகை பட்டி மண்டபம் முதல் பலவும்**
**நாடி எகினன் இராகவன் புகழ் எனும் நலத்தான்” (சு.காண். 227)**

என்ற பாடலானது எடுத்துரைக்கிறது. அனைத்து இடங்களிலும் சுற்றிப் பார்த்த அனுமன் இராவணனின் அரண்மனைக்குள் அடியெடுத்து வைக்கிறான். அங்கு உறங்கும் நிலையிலிருந்த கும்பகர்ணன், வீடணன், இந்திரசித்தன், அக்ககுமாரன், அதிகாயன் போன்றோரைக் கண்டு அவர்களைச் சந்தேகித்து பின் தெளிந்தான். மண்டோதரியின் மாளிகையை அடைந்து, அவளைக் கண்டு சீதையாக இருக்குமா? என்று ஐயுற்றான். பின்னர் நன்றாகப் பார்த்து நினைத்தது தவறு என உணர்ந்தான். அவள் உறங்கும் நிலையைக் கண்டு இவள் கணவன் அழிவானென்றும், இலங்கை மாநகரம் அழியுமென்றும் கூறுகிறான்.

இராவணனின் மாளிகைக்குள் சென்றான். உறங்கிக் கொண்டிருந்த அரக்கனின் பத்துத் தலைகளையும், இருபது தோள்களையும் பார்த்தவுடன் இவன் இராவணன் என தெரிந்து கோபம் கொண்டான். சீதாப்பிராட்டியை மாரீசமானைக் கொண்டு வஞ்சகமாகக் கவர்ந்து வந்த இவ்வரக்கனையும், இவ்வூரையும் அழித்துவிட எண்ணினான். பின் சற்று சிந்தித்தவனாய், இராமபிரானின் கட்டளை என எண்ணி இதுவாகாது என நினைத்து ஒரு செயலைச் செய்யத் தொடங்கி மற்றொரு செயலைச் செய்தல் அறிவுடையவர்க்கு உரிய செயலாகாது என இராவணனை கொல்லாது விட்டான். இச்செய்தியை,

**“இற்றைப் போர் பெருஞ்சீற்றம் என்னோடு முடிந்திடுக**
**கற்றைப்பூங் குழலாளைச் சிறை வைத்த கண்டகனை**
**முற்றப்போர் முடித்தது ஒரு குரங்கு என்றால் முனைவீரன்**
**கொற்றப்போர்ச் சிலைத் தொழிற்குக் குறைவு உண்டாம் எனக் குரைத்தான்”**
**(சு.காண். 317)**

என்ற பாடலால் வெளிப்படுகிறது. இராவணனுடைய உறங்கு நிலையைக் கண்ட அனுமன் சீதையும் நல்ல நிலையில் இருக்க வேண்டும் என்று கருதி மீண்டும் தேடும் முயற்சியில் ஈடபட்டான். கற்பழியாச் சீதையை இராவணன் கொன்றானா, தின்றானா, இலங்கைக்கு அப்பால் எங்கேனும் சிறை வைத்திருப்பானா, வேறு என்ன செய்திருப்பான் என ஒரு வகையாலும் உண்மையை உணர முடியவில்லை என்று வருந்தினான். சீதையைக் கண்டு வருவேன் என்று இராமர் எதிர்ப்பார்த்திருப்பார். சுக்கீரிவன் கொண்டு வருவேன் என்று இருப்பார். ஆனால் சீதாப்பிராட்டியை தேடிக் கண்டு கொள்ளாமல் இராமபிரானிடம் திரும்பி செல்வேனா (அ) அரக்கர்களை அழித்து அவர்களோடு சாகாமல் எந்த ஒரு பயனுமின்றி வீணாக இறப்பேனா என பலவாறாக நினைத்து துன்புற்றான். ராம நாமம் ஒன்றே துன்பத்தைத் தீர்க்கும் அருமருந்தென்று அந்நாமத்தை தியானித்தான். எள் அளவும் இடம் விடாமல் அவ்விலங்கையில் உள்ள அனைத்து இடங்களிலும் சீதாப்பிராட்டியை தேடிச் சென்ற அனுமனுக்கு பூஞ்சோலை கண்ணில் பட்டது. **“அது ஒரு பெரும் வனம்.**

ISBN NUMBER: 978-93-91115-78-4

**ஆச்சா, இலும்பை, கடம்பு, தேக்கு, செண்பகம், புங்கை, பொன்னி, செம்மரம் என்று எல்லா வகை விருட்சங்களும் மாநாடு கண்டது போல ஒன்றாகி வளர்ந்திருந்தன. அந்த வனம் கண்ணில் பட்ட நொடி அனுமனுக்குள்ளும் ஒரு சிலிர்ப்பு…. நகரையே சுற்றி வந்த நாம் இந்த வனத்தை விட்டுவிட்டோமே என்று….. (ஜெ.பு.பு.க, அ.க, இ.சௌ, ப. 262)"** அவ்வனத்திலும் சீதாப்பிராட்டியைக் காண முடியவில்லையென்றால் அந்நிலையில் உயிரை விடுவதைத் தவிர வேறு வழியில்லை என்று முடிவு செய்து அவ்வனத்தை அடைந்தான். அங்கு ஓர் மரத்துக்குக் கீழே சீதாப்பிராட்டியைக் கண்டு வியந்தான்.

**இராம தூதுவனாக சீதையைச் சந்தித்தல்**

இராவணனால் சிறை வைக்கப்பட்டிருந்த சீதை வருந்தி குருக்கத்தி மரக்கிளையில் தூக்கு மாட்டி தற்கொலை செய்துக்கொள்ள முடிவு செய்கிறாள். அந்நிலையில் அனுமன் சீதையின் முயற்சியை தடுக்கும் உபாயம் ராம நாமம் ஒன்றே என்று கருதி அந்நாமத்தை உச்சரித்தான். சீதையும் ராம நாமம் ஒலித்ததைக் கேட்டு தன் முயற்சியைக் கைவிடுகிறாள். அனுமனும் சீதையின் முன்தோன்றி கைகூப்பி வணங்கி இராம தூதனாக இராமனால் அனுப்பப்பட்டு வந்ததைக் கூறினான். சீதையிடம் சந்தேகப்பட வேண்டாமென்பதைக் கூறுகிறான். இதனை,

**"ஐயுறல் உனது அடையாளம் ஆரியன்**
**மெய்யுற உணர்த்திய உரையும் வேறுள**
**கையுறு நெல்லியங் கனியின் காண்டியலால்**
**நெய்யுறு விளக்கு அனாய் நினையல் வேறு என்றான்" (சு.காண். 512)**

என்ற பாடல் விளக்குகிறது. அனுமனைக் கண்ட சீதை இவன் அரக்கனா (அ) குரங்கினத்தரசனா என்று சந்தேகித்து யாராக இருப்பினும் இராமபிரானின் பெயரைக் கூறி தன் உயிரை மீட்டான். ஆதலால் நல்லவன் என்று தெளிந்து யாரென்று வினவினாள். அதற்கு இராமபிரான் குரங்கினத் தலைவனாகிய சுக்கிரீவனை நண்பனாகப் பெற்றான். அவரது அண்ணன் வாலியைக் கொன்று கிட்கிந்தை அரசைச் சுக்கிரீவனுக்குக் கொடுத்தான். அந்தச் சுக்கிரீவனின் அமைச்சன் தானென்றும் தன் பெயர் அனுமன் என்றும் கூறினான். எழுபது வெள்ளம் வானரப் படையினர் தங்களைத் தேடி நான்கு திசைகளிலும் சென்றுள்ளனர். அவர்களுள் அங்கதன் தலைமையில் தெற்கு வந்த சேனைப் படையைச் சேர்ந்தவன் என்று தன்னை பணிவுடன் அறிமுகம் செய்துக்கொண்டான்.

சீதையின் மனதில் நம்பிக்கை கோடு படர, இராமபிரானின் மேனியழகு எத்தன்மையது என்று கேட்கிறாள். பின்னர் அனுமன் இராமபிரானை அடிமுதல் முடிவரை என்று அவர் வடிவழகைப் பாதாதிகேசமாக வர்ணித்தான்.

ISBN NUMBER: 978-93-91115-78-4

**‘திருவடி, திருவடிவிரல், திருவடிநகங்கள், புறவிரல்கள், கணைக்கால்கள், தொடை, திருவுந்தி, திருமார்பு, திருக்கைகள், கைநகங்கள், திருத்தோள்கள், திருக்கழுத்து, திருமுகம், வாய், பற்கள், மூக்கு, புருவம், நெற்றி, குழல், நடை’** என அத்தனை உறுப்புகளையும் ஒவ்வொன்றாக அனுமன் கூறியதைக் கம்பர் போற்றியுரைக்கிறார். இராமரின் திருவடி தாமரையாகும். விரல்கள் ஞாயிற்றின் ஒளியென்றால் கணைக்காலுக்கு ஒப்புமை கூறமுடியாது. அவர் நடைக்கு யானைத் துதிக்கை நாணும் கொப்பூழ் பொய்கையை போல் ஆழ்ந்தது. மார்பு திருமகள் தோற்றம் பெற்றது. கைகள் எண்திக்கு யானையின் கைகளாகவும், தோள் மலையாகவும் காட்சி தருகிறது. கழுத்து சங்கிற்கு, முகம் தாமரைக்கு, வாய் பவளத்திற்கு, பல் முத்து (அ) நிலவெளிக்கு, மூக்கு இந்திர நீலத்திற்கு, புருவம் வில்லிற்கு, நெற்றி பிறைக்கு, குழல் மேகத்திற்கு, நடை காளைக்கு என்று ஒவ்வொரு உறுப்புகளையும் ஒப்புமைக் கூறி அவை இராமபிரானின் வடிவழகிற்கு ஒப்புமையாகாது என்று கூற அதைக் கேட்ட சீதை உள்ளம் மகிழ்ந்தாள். இராமபிரானின் முக அழகை கூறுவதை,

**“அண்ணல் தன் திருமுகம் கமலம் ஆம் எனில்**
**கண்ணினுக்கு உவமை வேறு யாது காட்டுவேன்**
**தண்மதி யாம் என உரைக்கத் தக்கதோ**
**வெண்மதி பொலிந்தது மெலிந்து தேயுமால்” (சு.காண். 538)**

என்ற பாடலில் காணமுடிகிறது. அனுமனின் கூற்றாக கம்பர் இராமபிரானின் திருமேனியழகை இருபது பாடல்களில் குறிப்பிட்டிருப்பது சிறப்பிற்குரியதாகும். இராமர் கூறிய அடையாள மொழிகளையும் பாங்குற எடுத்துக் கூறினான். சீதையால் காட்டு வழியில் நடப்பது கடினமாதலால் தன்னோடு வராமல் அன்னையர்க்கு பணிவிடை செய்துக் கொண்டிருக்க வேண்டுமென்று இராமர் கூறிய போது, அவர்க்கு முன்பே மரவுரியை உடுத்திக்கொண்டு வந்து நின்றாள். காட்டிற்குப் புறப்பட்ட நாளில் கோட்டை மதிலைத் தாண்டிய போது காடு எங்கே உள்ளதென்று கேட்டாள். இச்செய்தியானது சிலப்பதிகார செய்தியை நினைவு கூறத்தக்கதாக உள்ளது. கோவலன் கண்ணகியுடன் மதுரைக்குச் சென்று கொண்டிருந்த போது, சிறிது தொலைவுச் சென்றதும் கண்ணகி, இன்னும் மதுரை எவ்வளவு தொலைவில் உள்ளது எனக் கேட்ட செய்தியொன்று ஒப்புநோக்கத் தக்க வகையில் அமைந்துள்ளது. இதனை,

**“முதிராக் கிளவியின் முள்ளெயிறு இலங்க**
**மதுரை மூதூர் யாதென வினவ**
**ஆறைங் காதம் அகல் நாட்டும்பர்**
**நாறைங் கூந்தல் நணித்தென நக்கு” (சிலம்பு.நா.கா.கா. 40 - 43)**

ISBN NUMBER: 978-93-91115-78-4

என்ற பாடலடிகள் எடுத்துரைக்கிறது. சீதை சுமந்திரனிடம் தான் வளர்த்த கிளிகளையும், நாகணவாய்ப் பறவைகளையும் ஊர்மிளை முதலியோர் வளர்க்க வேண்டும் என சொல்லி அனுப்பினாள். இவ்வடையாளச் செய்திகளை இராமபிரான் கூறியனுப்பினார் என்று அனுமன் சீதையிடம் தெரிவிக்கிறான். கம்பராமாயணத்தில் கம்பர் கூறிய அடையாளச் செய்திகள் போல், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் பெரியாழ்வார், **'நெறிந்த கருங்குழல் மடவாய்'** எனத் தொடங்கும் திருமொழியில் அமைந்த பத்து பாசுரங்களிலும் அடையாளச் செய்திகளை அழகாகப் பாடியுள்ளார். அப்பாசுரங்கள் இராமாயணத்தின் ஒரு நிகழ்வை கொண்ட காப்பியத் துணுக்காக அமைந்து இராமாயண நிகழ்வுகளை விளக்குகிறது. இறுதியாக இராமபிரான் கொடுத்தனுப்பிய மோதிரத்தை அனுமன் சீதையிடம் கொடுத்தார். இந்நிகழ்வை பெரியாழ்வார்,

**"மைத்தரு மலர்க் குழலாய் வைதேவீ விண்ணப்பம்**
**ஒத்த புகழ் வானரக்கோன் உடனிருந்து நினைத்தேட**
**அத்தகு சீர் அயோத்தியர் கோன் அடையாளம் இவை மொழிந்தான்**
**இத்தகையாம் அடையாளம் ஈது அவன் கை மோதிரமே" (பெரி.திரு. 3.10.8)**

என்று சிறப்பித்துப் பாடியுள்ளார். அனுமன் இவ்வடையாளங்களை கூறினான் என்றதோடு அவர் கை மோதிரத்தை அடையாளமாக காட்டியதை கம்பரும்,

**"நீட்டி தென நேர்ந்தனன் என நெடிய கையால்**
**காட்டினன் ஒராழியது வாள் நுதலி கண்டாள்" (சு.காண். 550)**

என்று குறிப்பிட்டுள்ளார். இராமபிரான் கொடுத்தனுப்பிய மோதிரத்தைப் பெற்ற சீதை **'கண்ணிலான் கண் பெற்றதைப் போல'** மகிழ்ந்து தன் நிலையை பல மொழிகளால் பகர்ந்ததோடு அனுமனை வாழ்த்தினாள். இன்று போல் என்றும் வாழ்க என்று சீதை கூறியதை,

**"பாழிய பணைத்தோள் வீர துணை யிலேன் பரிவு தீர்த்த**
**வாழிய வள்ளலே யான்மறு இல மனத்தான் எண்ணின்**
**ஊழி ஒர் பகலாய் ஒதும் யாண்டுஎலாம் உலகம் ஏழும்**
**வீவுற்ற ஞான்றும் இன்றென இருத்தி என்றாள்" (சு.காண். 559)**

என்ற பாடலால் அறியமுடிகிறது. பின்னர் சீதையைச் சிறையெடுத்த பின் நடந்த நிகழ்வுகள் அனைத்தையும் அனுமன் கூற, அந்நிகழ்வுகளையெல்லாம் கேள்வியுற்ற அவள் மனம் பெரிதும் வருத்தமுற்றாள். கடத்தற்கரிய இக்கடலை எவ்வாறு கடந்து வந்தாய் என்று கேட்க இராமபிரானின் அருள் பெற்றவராதலால் பேருருவங் கொண்டு கடந்தேன் என்று கூறினான். **"தாயே இராம நாமத்தால் மாயையைத் தாண்டுவது போல, காற்றால்**

**இக்கடலை நான் தாண்டி வந்தேன்'** என்றான் அனுமன். **"இவ்வளவு சிறிய உடலை உடைய நீ எப்படி கடலைத் தாண்டி வந்தாய்? தவப் பயனாலா? எண் வகைச் சித்திகளாலா?"(கம்பராமாயணம், புலவர் மு. செல்வநாதன் (உ.ஆ.), ப. 271)** என்று கேட்டாள் சீதை.

அனுமன் கைகளைக் கூப்பி வணங்கி விண்ணுக்கும் மண்ணுக்குமான பேருருவத்தை எடுத்துக்காட்டினான். அவ்வுருவத்தைக் கண்டு பயந்த சீதை முன்போலவே சிறிய உருவத்தை எடுப்பாயாக என்று கூற அனுமனும் அந்நிலையை அடைகிறான். அனுமனின் ஆற்றலை வியந்து சீதை பாராட்டியதை,

**"ஆழி நெடுங்கை ஆண்தகை தன் அருளும் புகழும் அழிவு இன்றி**
**ஊழி பலவும் நிலை நிறுத்தற்கு ஒருவன் நீயே உளை யானாய்**
**பாழி நெடுந்தோள் வீரா நின் பெருமைக்கு ஏற்பப் பகை இலங்கை**
**ஏழு கடற்கும் அப்புறத்தது ஆகா திருந்தது இழிவு அன்றோ" (சு.காண். 597)**

என்ற பாடல் உணர்த்துகிறது. இலக்குவன் ஒருவனை துணையாகக் கொண்ட இராமபிரானுக்கு அனுமனின் துணையும் கிடைத்ததையெண்ணி பெருமூச்சு விட்டாள். சிறையிலிருந்து விடுதலைப் பெற்றவளாகவும், இராமபிரானின் திருவடிகளை அடைந்தவளாகவும் மகிழ்ந்து மீண்டும் அனுமனைப் புகழ்ந்தாள். அதற்கு மறுமொழியாக அனுமன் இராமபிரானுக்கு அடியார்களாக எண்ணற்ற வானர படைத்தலைவர்கள் உள்ளனர். அவர்களை நோக்க இந்த அரக்கர்கள் உறையிடவும் போதமாட்டார்கள். இலங்கை இருக்கும் இடம் அவர்களுக்கு இதுவரை தெரியவில்லை தான் சென்று தெரிவித்ததும், வானர் வருவர் அன்றே இந்த இலங்கை அழியும் **'குரங்கு கை மாலை போல'** ஊரும் அரக்கரும் அழிவது உறுதி என்று அனுமன் கூறினான்.

**அசோகவனத்தை அழித்தல்**

சீதையைக் கண்ட அனுமன் திரும்பிச் செல்வது தன்னுடைய வீரத்திற்கு இழுக்கு என்று எண்ணி அசோகவனத்தை அழித்து ஆற்றலை வெளிப்படுத்த முடிவு செய்தான். இரண்யாட்சனால் ஒளித்து வைக்கப்பட்ட பூமியை வெளிக்கொண்டு வர திருமால் எடுத்து வராக அவதாரத்தின் பேருருவத்தைப் போன்று அனுமனும் மாபெரும் உருவம் கொண்டான். அசோகவனத்தை அழிக்க அனுமன் எண்ணியதை கவிஞர் வாலியும்,

**"தன் வருகையை – இலங்கை**
**வேந்தனின் குறிப்பேட்டில்**
**பதிவு செய்ய – அஞ்சனையின்**
**பாலகன் எண்ணினான்; உடனே**

**பேருருவம் எடுத்து – அந்த**

**பூஞ்சோலையை அதம்**

**பண்ணினான்" (அ.புருஷன், ப. 175)**

என்ற கவிதையில் குறிப்பிட்டுள்ளார். காவல் மிகுந்த அசோகவனத்தை தனது இருகால்களைக் கொண்டு நாசமாக்கினான். மேகத்தைத் தொடும் அளவிற்கு உயர்ந்து நின்ற சில மரங்களை பிடுங்கி எறிந்தான். அம்மரங்களில் உள்ள தழைகள், இலைகள் எல்லாம் வலிமைமிக்க அட்டத்திக்கு யானைகளுக்கு உணவாயின. சில மரங்கள் வான் வழியே சென்று தேவருலக சோலைகளாகிய கற்பக வனங்களை அழித்தன. சில மரங்களிலுள்ள வெண்ணிறமான மலர்கள் அவை வீசி எறிப்பட்ட வேகத்திற்கு நிலை கலங்கி வானிலுள்ள நட்சத்திரங்களுடன் கலந்து பூமியில் விழுந்தன. சில மரங்கள் நாலா திசைகளிலும் சென்று அரக்கர் வாழும் மாளிகைகளை இடித்தன. அதனால் அம்மாளிகைகளின் கதவுகள், தூண்கள் என யாவும் நொறுங்கின. சீதை இருந்த அசோகமரம் ஒன்றைத் தவிர ஏறக்குறைய மற்றவையெல்லாம் அழிந்தன. அனுமனால் தாக்கப்பட்ட மரங்களின் நிலையை,

**"வேங்கை சென்று, மராமரம் வேர்பறித்து,**

**ஓங்கு கற்பகம் பூவொடு ஒடித்து உராய்ப்**

**பாங்கர்ச் சண்பகம் பத்தி பறித்து அயல்**

**மாங்கனிப் பணை பட்டித்து மாற்றியே" (சு.காண். 718)**

என்ற பாடலில் காணமுடிகிறது. மரங்களைத் தொடர்ந்து யானைகள், அதனைத் தொடர்ந்து மலைப்பாறைகள், சிறுகுன்றுகள் என அனைத்தையும் கைகளால் அசைத்துப் பெயர்த்தெடுத்து ஒரு பந்தை வீசி எறிவது போல எறிந்தான் அனுமன்.

அசோகவனத்தை அழித்த போது அம்மரங்களில் இருந்த பறவைகள் எல்லாம் தத்தம் இனத்தோடு சொர்க்கலோகத்தை அடைந்தன. அனுமன் சீறிச் சினந்ததற்கே சொர்க்கம் கிடைத்ததெனில், கருணையோடு பாரத்திருந்தால் இன்னும் பெரும் பயன் பெற்றிருப்போம் என்று பறவைகளின் கூற்றாக கம்பர் புதியதொரு கருத்தைக் குறிப்பிட்டுள்ளார். இதனை,

**"தோட்டொடும் துதைந்த தெய்வ**

**மரம் தொறும் தொடுத்த புள் தம்**

**கூட்டொடும் துறக்கம் புக்க**

**குன்றெனக் குவ்வுத் திண்தோள்" (சு.காண். 736)**

எனும் பாடலடிகளால் புலப்படுகிறது. உலக வழக்காகிய **'கூண்டொடு கைலாசம்'** என்ற சொற்றொடரை நினைவு கூறும் வகையில் கம்பரும் **'கூண்டொடும் துறக்கம் புக்க'** என்ற சிறப்பான சொற்றொடரை பயன்படுத்தியமை குறிப்பிடத்தக்கதாகும்.

**ISBN NUMBER: 978-93-91115-78-4**

அசோகவனத்தின் நிலையைக் கண்ட அரக்கியர் வாயிலும், வயிற்றிலும் அடித்துக்கொண்டு அவ்விடத்தை விட்டு ஓடிச் சென்றனர். அரக்கர்கள் சிலர் எதிர்த்தும் வந்தனர். அவர்களை அழிப்பதற்காக, நீண்ட திண்மயான மரம் ஒன்றை கையில் எடுத்து நின்றான். இது பாற்கடலைக் கடைவதற்குரிய நீண்ட அடியையுடைய மந்தரமலையைப் போன்று இருந்தது. அச்சமயம் இதையும் அழிப்பேன் என்று கூறி அங்கிருந்த செங்குன்றை அடியோடு பெயர்த்தெடுத்து இலங்கை நகர் மீது வீசி எறிந்தான். அத்தாக்குதலால் எதற்கும் அஞ்சாத அரக்கர்களும் அஞ்சி நடுங்கினர். பிறர்க்குத் தீமை செய்பவர்கள் அத்தீமையை அனுபவிப்பர் என்கின்ற வகையில் பல அரக்கர்கள் இறந்தொழிந்தனர். அசோக வனத்தை காவல் புரிந்து வந்த தேவர்களை கம்பர் **'பருவத்தேவர்கள்'** என்று குறிப்பிட்டுள்ளார். பெரும் பொழுதுக்குரிய ஆறு பருவங்களைச் சார்ந்த அதிதேவதைகளான அப்பருவத்தேவர்கள் இராவணனின் கட்டளைப்படி அசோக வனத்தை காவல் காத்து வந்தனர்.

அசோக வனத்தை அனுமன் அழித்து விட்டதால், இராவணன் தங்களை தண்டிப்பான் என்று பயந்து, அலறி அடித்துக்கொண்டு ஓடினர். அத்தேவர்களின் நிலையை,

**"நீரிடு துகிலர் அச்ச நெருப்பிடு நெஞ்சர் நெக்குப்**
**பீரிடும் உருவர் தெற்றிப் பிணங்கிடு தாளர் பேழ்வாய்**
**ஊரிடு பூசல் ஆரஉறைத்தனர் ஓடியுற்றார்**
**பாரிடு பருவச் சோலை பாலிக்கும் பருவதேவர்" (சு.காண். 748)**

என்ற பாடலால் வெளிப்படுகிறது. தேவர்கள் பயந்து ஓடிய இச்செய்தியை இராவணனிடத்து முறையிட்டனர். அவ்வேளையில் அண்டம் முழுவதும் பிளந்து சிதறியது போல ஒரு பெருஞ் சத்தத்தை எழுப்பினான் அனுமன். அதனால் பூமி பிளந்து அதன் வழியாகக் கடல் நீர் உள்ளே பாய்ந்தது. அசோகவனம் முழுவதும் நிலை குலைந்து போனது. அரக்கர்களை அழிக்க வேண்டுமென்றால் முதலில் அசோகவனத்தை அழிக்க வேண்டும் என எண்ணினான். இங்கு,

**"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**
**திண்ணியர் ஆகப் பெறின்" (குறள். 666)**

என்ற வள்ளுவரின் குறளும் சிந்திக்கத்தக்கது. அனுமன் எண்ணியதைச் செய்து முடித்தான் என்ற வகையில், அவனின் வீரதீர சாதுர்யத்தை வெளிப்படுத்துகிறது.

**கிங்கர்களை வதைத்தல்**

அசோக வனத்தை அழித்த அனுமனின் பேரரவம் இராவணனின் காதுகளில் விழுந்தது. உடனே இராவணன் வலிமைமிகக அரக்க கிங்கர்களை அனுப்பி அனுமனைப் பிடித்து வருமாறு கட்டளையிட்டான். சூலம், வாள், உலக்கை, கூர்மையான வேல், மழு முதலிய பல்வேறு ஆயுதங்களை ஏந்திய அவ்வீரர்கள் நெருப்பை உமிழ்ந்தாற் போன்ற

கண்களையும் நஞ்சினை போன்ற கறுத்த மேனியையும் மலை போன்ற தோள்களையும் கொண்டு வலிமைமிக்கவர்களாகக் காணப்பட்டனர். ஊழிக் கால வெள்ளத்தின் போது பொங்கியெழும் கடலைப் போல விரைந்து சென்று அசோகவனத்தை அடைந்தும் அனுமனைச்சுற்றி வளைத்தும் ஆயுதங்களை வீசினர். அனுமனும் அங்கிருந்த மரத்தை பிடுங்கி எரிந்து அவர்கள் அனைவரையும் கடுமையாகத் தாக்கினான். அரக்கர்களை கொன்றழித்த அனுமனின் போர்த் தன்மையை,

**“ஓடிக் கொன்றனன் சிலவரை உடல் உடல் தோறும்**

**கூடிக் கொன்றனன் சிலவரை கொடிநெடு மரத்தால்**

**சாடிக் கொன்றனன் சிலரை பிணந்தொறும் தடவிக்**

**தேடிக் கொன்றனன் சிலவரை கறங்கெனத் திரிவான்” (சு.காண். 789)**

என்ற பாடல் வெளிப்படுத்துகிறது. காற்றாடியைப் போல் எங்கும் பரந்து கிங்கர்களை அழித்ததால் அவ்வுடல்களிலிருந்த உயிர் பிரிந்தது. அவ்உயிர்களைப் பற்றிச் செல்லும் எமனும் அத்தொழிலைச் செய்ய முடியாமல் சோர்ந்து விட்டான். அதனால் உடல்களை விட்டுப் பிரிந்த அவ்வுயிர்களைக் கொண்டு செல்பவர் எவருமில்லாத காரணத்தால் நட்சத்திரங்க்ள, மேகக் கூட்டங்கள், நீலவானம் என வான மண்டலம் மட்டுமல்லாமல் இடைப்பட்ட அனைத்து இடங்களிலும் அவ்வுயிர்கள் தொற்றிக் கொண்டும், சுற்றிக் கொண்டும் இருந்தன. எண்ணற்ற வீரர்கள் இறந்தனர் என்ற செய்தியொடு எண்ணற்கரிய விழுப்புண்களைத் தன் வீரத்திற்கு அடையாளமாக அனுமன் பெற்றான். இத்தகைய புராணச் செய்தியை கம்பர், அனுமன் விழுப்புண் பெற்ற விதத்தை,

**“எத எற்றின எறிந்தன ஈர்த்தன இகலின்**

**பொய்த குத்தின பொதுத்தன தொளைந்தன போழ்ந்த**

**கொய்த சுற்றின பற்றின குடைந்தன பொலிந்த**

**அய்யன் மற்பெரும் புயத்தன புண் அளப்பு அரிதால்” (சு.காண். 803)**

என்ற பாடல் வரிகளில் கம்பர் வெளிப்படுத்துகிறார். இங்கு விழுப்புண் பற்றிய சிறப்பை,

**“விழுப்புண் படாத நாள் எல்லாம் வழுக்கினுள்**

**வைக்கும் தன் நாளை எடுத்து” (குறள். 776)**

என்று வள்ளுவர் குறிப்பிட்டிருப்பதும் சிந்திக்கத்தக்கதாகிறது.

**சம்புமாலியை வதைத்தல்**

கிங்கர்களை தொடர்ந்து சம்புமாலி என்ற அரசன் ஒன்றரை இலட்சம் போர் வீரர்களைக் கொண்ட நால்வகைப் படைகளுடன் அனுமனை எதிர்க்கப் புறப்பட்டுச் சென்றான். நால்வகைப் படைகளின் அளவை,

**ISBN NUMBER: 978-93-91115-78-4**

**"ஆயிரம் ஐந்தோடு ஐந்தாம், ஆழியம் தடந்தேர் அத்தேர்க்கு**
**ஏயின இரட்டியானை யானையின் இரட்டி பாய்மர**
**போயின பதாதி, சொன்ன புரவியின் இரட்டி போலாம் –**
**தீயவன் தடந்தேர் சுற்றித் தெற்றென சென்ற சேனை" (சு.காண். 824)**

என்று பல நிலைகளில் கம்பர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இராமனின் அளவற்ற ஆற்றலைப் பெற்ற அனுமனும் நெய்விளக்கு போல் ஒளி வீசும் நெற்றியை முன்னணிப் படையாகவும், உடம்பிலுள்ள மயிர்த்தொகுதிகள் வீரர்களாகவும், கூரிய நகங்களை உடைய இரு கைகளே இருபக்க படைகளாகவும் தன் வாலே பின்னணிப் படையாகவும் கொண்டு தானே ஒரு பெரும்படையாக அவர்களை எதிர்கொண்டு நின்றான். படைவீரர்கள் வீசிய ஆயதங்களையெல்லாம் தன் இடது கையாலும் யானை, தேர், குதிரை முதலிய படைகளை வலது கையாலும் அழித்தான். ஓரிடத்தில் நில்லாமல் பம்பரம் போன்று சுழன்று சுழன்று அவ்வீரர்களை தன் இரு கரங்கள் கொண்டு தாக்கினான். படைகளையெல்லாம் இழந்து நின்ற தலைவனாகிய சம்புமாலியின் நிலையை கண்ட அனுமன், அவனை நோக்கி எளியவரின் உயிரைக் கொல்லுதல் நீதியன்று. உடன் வந்தவரைக் காக்கும் வலிமை உனக்கு இல்லை. எல்லாரையும் இழந்து தனித்து நிற்கின்றாய். இப்போது சாவதைத் தவிர உன்னால் வேறொன்றும் செய்ய இயலாது எனவே, '**இன்று போய் நாளை வா**' என்று கூறி அனுப்பினான். பகைவனிடத்து இரக்கம் காட்டிய அனுமனின் தன்மையை,

**"ஏதி ஒன்றால் தேருட் அஃதால் எளியோர் உயிர்கோடல்**
**நீதி அன்றால் உடன் வந்தோரைக் காக்கும் நிலையில்லாய்!**
**சாதி அன்றே பிறிது என செய்தி? அவர்பின் தனி நின்றாய்!**
**போதி என்றான் பூத்தமரம் போல் புண்ணால் பொலிகின்றான்" (சு.காண். 857)**

என்ற பாடலில் குறிப்பிட்டுள்ளார். இராமனைப் போல அனுமனும் பேராண்மையுடன் ஊராண்மை மிக்கவனாக இருப்பதை உணர முடிகிறது. 'போதி' என அனுமன் அவனைக் கொல்லாது விட்டது ஊராண்மையாகும். பேராண்மையோடு ஊராண்மையும் அமையவில்லை எனில், அவர் சிறந்த வெற்றியைப் பெற்றவராவார் என்ற கருத்தை கம்பரின் பாடல் எடுத்துரைக்கின்றது. அனுமன் பேராண்மையோடு (வீரம்) ஊராண்மையும் உதவி செய்யும் இரக்க குணம் மிக்கவனாகத் திகழ்ந்தான். திருவள்ளுவர் படை மறவர்கட்கும் வீரமும் இருக்க வேண்டும்; எதிரிக்கு துன்பம் எனில் உதவி செய்யும் மனப்பாங்கு வேண்டும் என்று கூறியுள்ளார். இக்கருத்தை,

**"பேராண்மை என்ப தறுகண் ஒன்றுற்றக்கால்**

**ஊராண்மை மற்று அதன் எஃகு" (குறள். 773)**

என்ற குறள் வெளிப்படுத்துகிறது. படையிழந்து தனித்து நிற்கும் இராவணனை நோக்கி, இராமன், '**இன்று போய் நாளை வா**' என்றார். அந்த வகையில் இராமனைப் போல் தொண்டனான அனுமனிடத்தும் இத்தகைய ஊராண்மைப் பண்பு இருந்தது போற்றதற்குரியது.

**பஞ்ச சேனாதிபதிகளை வதைத்தல்**

சம்புமாலி உட்பட அரக்கர்கள் அனைவரையும் அனுமன் அழித்த செய்தியைக் கேட்ட இராவணன் பெருங்கோபம் கொண்டான். அவனே சென்று அனுமனை அழிப்பதாகவும் கூறினான். அச்சமயத்தில் பஞ்ச சேனாதிபதிகளான பூபாட்சன், துதிரன், பிரசன்னன், விருபாட்சன், பாசகர்ணன் ஆகிய ஐவரும் இராவணன் முன் வந்தனர். **"அரசே! நீங்கள் ஒரு குரங்குடன் போரிடப் போவது, கருடன் ஒரு கொசுவோடு போரிடச் சென்றது போல இழிவைத் தரும். திறமையற்றவர்களையே நீங்கள் அனுப்பினீர்கள். இப்போது உங்களுக்கு நன்மை கிடைக்க வேண்டுமானால் அந்தக் குரங்குடன் போரிட எங்களை அனுப்புங்கள்" (உரைநடையில் கம்பராமாயணம், ப. 286)** என்று வணங்கி வேண்டிட, இராவணனும் சம்மதம் தெரிவிக்க, அவ்வய்வரும் பெரும் படையைத் திரட்டினர். ஐவரின் கட்டளையை ஏற்று பறை அறைவோரும் யானை மீதேறி முரசை அடித்து போர் செய்தியை தெரிவித்தார்கள். இதனை,

**"ஆனை மேல் முரசு அறைந்தனர் வள்ளுவர் உரைத்தார்**

**பேனம் வேலையில் புடை பரந்தது பெருஞ்சேனை" (சு.காண். 871)**

என்ற பாடலடிகள் விளக்குகிறது. தமிழகத்தில் முரசறைந்து செய்தியை அறிவிக்கும் வழக்கம் இருந்ததைப் போன்று இலங்கையிலும் அவ்வழக்கம் இருந்ததைக் கம்பர் குறிப்பிட்டுள்ளார். இராவணனை வென்று இலங்கை மாநகரை விட்டு புறப்படும் முன்னர் இராமனின் வெற்றிச் செய்தியை முரசறைந்து தெரிவிக்கும்படி சுக்கிரவன் வள்ளுவனிடத்தில் கூறினான். போருக்கு புறப்பட்ட அப்படை வீர்களின் மனைவியர், மக்கள், தாயர் என மற்றுமுள்ள சுற்றத்தார் அனைவரும் போருக்கு செல்ல வேண்டாமெனத் தடுத்தனர். அந்தக் குரங்கை எதிர்த்தவர் ஒருவரும் உயிருடன் திரும்பவில்லை. என்று அழுது புலம்பியும், செவி சாய்க்காத வீரர்கள் அனுமனை எதிர்க்க போர்க்களத்திற்கு சென்றனர். அனுமனின் மீது சில படைக்கருவிகளை வீசியும், அம்புகளை எய்தும் போரிட்டனர். அப்படைக் கருவிகள் எல்லாம் விறைத்துக் கொண்டிருக்கும் அனுமனின் மயிர்த் தொகுதிகளின் மேல் பட்டு வீழ்ந்தன. அவ்வாறு மயிர்ப்புறம் படுவது அனுமனுக்கு தினவு தீரச் சொறிந்து விட்டது

ISBN NUMBER: 978-93-91115-78-4

போல் இருந்தது. இதனால் தினவுக்கு இதமாக இருந்தது போல் ஒரு வகை ஆறுதல் பெற்றவனாக மகிழ்ந்து ஏற்றுக்கொண்டான். இதனை,

**"செறிந்தன மயிர்ப்புறம் தினவும் தீர்வுறச்**

**சொறிந்தன என இருந்து ஐயன் தூங்கினான்" (சு.காண். 896)**

என்ற பாடலடிகளில் காணமுடிகிறது. அனுமன் இரும்புத்தூண், பெரியமலை, கற்பாறை என இவற்றையெல்லாம் பெயர்த்தெடுத்து படை முழுவதும் அழித்து ஒழியுமாறு அடித்து நொறுக்கினான். படைத் தலைவர்களில் ஒருவரான துர்த்தரனின் தேரில் குதித்து அவனோடு போரிட்டு தன் இரும்புத் தடியால் அடித்துக் கொல்கிறான். விருபாட்சனை, தேரோடு வானில் வீச எறித்ததோடு கீழே விழுந்த அவன் உடம்பையும் ஏறி மிதித்து குழம்பாக்கினான். பூபாட்சன், பிரகாசன் ஆகிய இரண்டு பேரையும் தேருடன் தூக்கிக் கொண்டு வானில் பறந்தான். தப்பி ஓட நினைத்த அவர்களை தன் வாலால் இறுகக் கட்டி முறித்தழித்தான். எஞ்சி நின்ற பாசகர்ணனும் அனுமனை எதிர்க்க, அவன் தலை மீது பாய்ந்து குதித்தழுத்தி பூமியில் புதைத்தான். பஞ்சசேனாதிபதிகளும் தங்கள் சேனைகளோடு போர்க்களத்தில் இறந்தனர் என்ற செய்தியை சோலைக் காப்பாளர்கள் இராவணனிடம் சென்று முறையிட்டனர். இதனை,

**"தானையும் உலந்தது ஐயா தலைவரும் சமைந்தார் தாக்கம்**

**போனபின் ஓடி யாரும் எய்தும் புரிகிலாமை**

**வானையும் வென்று ளோரை வல்லையின் மடிய நூறி**

**எனையர் இன்மை சோம்பி இருந்தது. அக்குரங்கும் என்றார்" (சு.காண். 932)**

என்ற பாடலால் தெரிய வருகிறது. பஞ்ச சேனாதிபதிகளும் அவர் கூட்டமும் பஞ்சு பஞ்சாகிப் போயினர். தன்னுடன் போர் செய்ய வேறு எவரும் இல்லாத காரணத்தால் அனுமனும் சோம்பி அவ்விடத்திலேயே காத்துக் கொண்டிருந்தான்.

**அக்க குமாரனை வதைத்தல்**

பஞ்சசேனாதிபதிகள் இறந்த செய்தியையறிந்து இராவணனின் இளைய மகனான அக்ககுமாரன் அனுமனுடன் போர் செய்ய முன் வந்தான். முன்பு இந்திரனை பிடித்து வர ஆசைப்பட்டது அக்ககுமாரன் ஆவான். ஆனால் இராவணன் இந்திரனின் வலிமையையறிந்து பாலகனாகிய தன்னை விடுத்து மூத்தோனாகிய மேகநாதனை அனுப்பினான். அந்த மனக்குறை தன் மனத்தில் உள்ளதென்றும் அக்குறை தீர இந்தக் குரங்கையாவது பிடித்து வர அனுமதி தாருங்கள் என்றான். அண்ணன் அமரர்களின் தலைவனை அடக்கினான் தம்பி அசுரக் குரங்கை அடக்கினான் என்ற பெயர் எதிர்காலத்தில்

கிடைக்கும் என்று தன் விருப்பத்திற்கு ஓர் அழுத்தமான காரணத்தை எடுத்துரைத்தான். அக்ககுமாரன் இத்தகைய உறுதிப்பாட்டை,

**"கொய்தளிர் கோதும் வாழ்க்கைக் கோடரத்து உருவுகொண்டு**

**கை தவம் இயற்றி, ஈண்டு ஈ சிறுபழி இழைக்கும் கற்பான்**

**எய்தினான் இமையா முக்கன் ஈசனே என்ற போதும்**

**நொய்தினின் வெற்றி, பற்றித் தருகவென், நொடியின் நுன்பால்" (சு.காண். 936)**

என்ற பாடல் புலப்படுத்துகிறது. இந்திரனையும் அவனது வச்சிராயுதத்தையும் வெற்றிக் கொண்டமையால் மேகநாதன் இந்திரசித்தன் என்ற பெயர் பெற்றான். அனுமனும் தன்னை எதிர்த்து போரிட வந்திருப்பவன் இந்திரசித்தனா (அ) இராவணனா என ஐயுற்றான். பின்னர் யாராக இருந்தாலும் அவர்களை வெல்வது உறுதி என்று எண்ணினான். இந்திரசித்தனின் தம்பியாகிய அக்ககுமாரனும் ஒரே நாளில் பலரை கொல்ல கற்றவனுமாகிய அனுமனும் எதிரெதிர் நின்று போர் புரிந்தனர். இமையோர்களாகிய தேவர்களும் அப்போரைக் கண்டு அனுமனுக்கு என்ன தீங்கு விளையுமோ என்று திடுக்கிட்டனர். ஆனால், இது ஒரு நல்ல வாய்ப்பு என்று கருதி தொடர்ந்து அப்போரைக் கண்டனர். இதனை, அக்காட்சியை,

**"எற்றாம் மாருதி நிலை என்பார் இனி**

**இமையா விழியனை இவை ஒன்றோ**

**பெற்றாம் நல்லது பெற்றாம் என்றனர்**

**பிரியாது எதிர் எதிர் செறிகின்றார்" (சு.காண். 964)**

என்ற பாடலடிகள் விளக்குகிறது. **'தேவர்கள் கண் இமைக்கார்'** என்ற கருத்தை வைத்து கம்பர் இயற்றியுள்ளார். நேருக்கு நேர் நின்று போர் புரிகையில் அனுமன் அக்க குமாரனின் கைகளில் உள்ள வில்லை பிடுங்கி எறிந்தான். தன் வாளால் குத்த முயன்றபோது அவ்வாளையும் பறித்து முறித்தான். வயிரம் பாய்ந்த தோள்களினால் அனுமனைத் தழுவி வீழத்தலாம் என்ற அவனை வாலால் சுற்றிக்கட்டி தேரின் மீது ஏற்றிக்கொண்டு கைகளால் பிடித்து ஆட்டுக்கல் குழவியைச் சுற்றுவது போல சுழற்றி சுழற்றி எடுத்தான். அவ்வளவில் அக்க குமாரனின் உயிர் அவனை விட்டு நீங்கியது. இச்செயலை, **"உலகேழ் தேயினும் ஒரு தன் புகழிறை தேயாதால்" (சு.காண். 970)** என்று கம்பர் அனுமனைப் புகழ்ந்து பாடுகிறார். அனுமனுக்கு அஞ்சிய அரக்கர் பலர் பிழைக்கப் பல்வேறு மாற்றுருவங்கள் எடுத்துத் தப்பி சென்றனர் என்று கம்பர் நகைச்சுவைப்பட பாடியிருப்பதை,

**"மீனாய் வேலையை உற்றார் சிலர்; சிலர்**

**பசுவாய் வழி தொறும் மேய்வுற்றார்**

**ஊனார் பறவையின் வடிவுற்றார் சிலர்**

**சிலர் நான் மறையவர் உருவானார்**

**மானார் கண்ணிள மடவா ராயினர்**

**முன்னே, தம் குழல் வகிர் வுற்றார்**

**ஆனார் சிலர் சிலர் ஐயா நின் சரண்**

**என்றார் நின்றவர் அறியென்றார்” (சு.காண். 972)**

என்ற பாடலால் அறியமுடிகிறது. அனுமனுக்கு அஞ்சிய அரக்கர்கள் மனைவி, மக்கள், உற்றார், உறவினர்கள் என யாவரும் காணமுடியாத அளவிற்கு தங்கள் உருவத்தை மாற்றிக்கொண்டார்கள். பசு, பார்ப்பனர், பெண்டிர் எனச் சிலர் உருவத்தை மாற்றிக் கொண்டதாக கம்பர் கூறியதன் உட்பொருள் அனுமன் அறப்போர் புரிபவன் ஆதலின் அவ்வடிவங் கொள்பவரை ஒன்றும் செய்யான் என எண்ணி சில அரக்கர்கள் அவ்வடிவங் கொண்டதாகும். சங்க இலக்கிய புறநானூற்று ஆசிரியரான நெட்டிமையாரும்,

**“ஆவும் ஆனியர் பார்ப்பன மாக்களும்**

**பெண்டிரும் பிணியுடை யிரும் பேணித்**

**தென்புல வாழ்நர்க்கு அரங்கடன் இறுக்கும்**

**பொன்போல் புதல்வர்ப் பெறாஅதீரும்**

**எம் அம்பு கடிவிடுதும் நும்மாண் சேர்மினென**

**அறத்தாறு நுவலும் பூட்கை…..” (புறநானூறு 9: 1-6)**

என்ற பாடலில் குறிப்பிட்டிருக்கும் நெறிமுறைகளை நினைவு கூறும் வகையில் அனுமன் அறப்போர் புரிந்த நிலை வெளிப்படுகிறது.

**இந்திரசித்தினின் பிரம்மாஸ்திரத்திற்கு கட்டுப்படல்**

அக்க குமாரனின் மரண செய்தியைக் கேட்ட இந்திரசித்தன் கொதித்தெழுந்தான். அனுமனை எதிர்க்கப் படைகளைத் திரட்டினான். தன் தந்தையிடம் சென்று **“குரங்கினுடைய வலிமையை அறியாமல் சம்புமாலி போன்ற பெருவீரர்களையும், அளவற்ற வீரர்களையும், தம்பி அக்க குமாரனையும் அனைவரையும் மாளச் செய்து விட்டீர்களே! இதைக் காட்டிலும் பெரிய அவமானம் நமக்கு என்ன உள்ளது எனக்கு உத்தரவு கொடுங்கன் நானே சென்று அக்குரங்கைப் பிடித்து வருகிறேன்” (கம்பராமாயணம், சுந்தரகாண்டம், ப. 31)** என்று கூறி தந்தையின் அனுமதிப்பெற்று அனுமனை எதிர்க்கப் புறப்பட்டான். அசோக வனத்திற்குச் சென்ற அதன் அழிவையும், அங்கு இறந்து கிடந்த வீரர்களின் உடல்களையும் தன் தம்பி அக்க குமாரனின் உடலையும் பார்த்து தன் குடும்பத்தினர்க்கு ஏற்பட்ட இன்னல்களையும் எண்ணி வருந்துகிறான். இதனை,

**“கானிடை அத்தைக் உற்ற குற்றமும் கரனார் பாடும்**

**யானுடை எம்பீ வீய்த இருக்கணும் பிறவும் எல்லாம்**

**மானிடர் இருவராறும் வானரம் ஒன்றினாறும்**

**ஆளிடத்து! உள என் வீரம் அழகின்றே அம்ம என்றான்" (சு.காண். 1001)**

என்ற பாடலடிகளில் காண முடிகிறது. அனுமனும் இந்திரசித்தனைக் கண்டு கொண்டு அவனை வென்றால் இராவணனை எளிதில் வெல்ல முடியும் என்று எண்ணினான். இந்திரசித்தனின் நால்வகைப் படைகளும் களத்திலே ஆரவாரம் செய்தன. அனுமனும் ஆச்சா மரத்தை பிடுங்கி எடுத்துக்கொண்டு போருக்கு தயாரானான். பேருருவம் கொண்டு அனைவரையும் தாக்கியதில் இறுதியாக இந்திரசித்தன் ஒருவனே மிஞ்சினான். பெருங்கோபம் கொண்ட இந்திரசித்தனும் வில்லம்புகளால் சராமாரியாக அனுமனை தாக்கினான். அவ்வம்புகளையெல்லாம் அனுமன் உடலை உதறி விடுவது போல் கீழே வீழச் செய்தும், மீண்டும் அவனையே திரும்பி தாக்கும்படி செய்தான். நூறு ஆயிரம் என்ற எண்ணிக்கையில் இந்திரசித்தனும் தொடர்ந்து அனுமனின் மீது அம்புகளை செலுத்திக் கொண்டேயிருந்தான். அவை அனுமனின் மார்பிலும், கையிலும் அழுந்த வெறுப்புற்ற இந்திரசித்தனை தேரோடு தூக்கி வானில் வீசி எறிகிறான். இனி வேற வழி இல்லை என்ற நிலையில் இந்திரசித்தன் பிரம்மாஸ்திரத்தை அனுமனின் மீது விடுத்தான். அனுமனும் பிரம்மாஸ்திரத்திற்கு கட்டுப்பட்டான். பிரம்மாஸ்திரம் தன்னை கட்டுமென்றும் அது தன்னை ஒன்றும் செய்யாதென்றும் முன்னர் பிரம்ம தேவன் அளித்த வரம் அனுமனின் நினைவிற்கு வருகிறது. அதுமட்டுமல்லாமல் ஒரு முகூரத்த காலம் மட்டும் அந்த அஸ்திரம் செயல்படும் என்பதை அறிந்திருந்த அனுமன் அக்காலம் வரை பொறுமையாக இருக்க முடிவு செய்து பிரம்மனை தியானித்தான். கண் மூடி தியானித்த நிலையிலிருந்த அனுமனைக் கண்டு இந்திரசித்தனும் அரக்கர்களும் அவனது வலிமை ஒடுங்கி விட்டதாகக் கருதி மகிழ்ந்தனர். இதனை,

**"சாய்ந்த மாருதி சதுமுகன் படையெனும் தன்மை**

**அய்ந்து மற்றிதன் ஆணையை அவமதித்து அகற்சி**

**ஏய்ந்தது அன்று என எண்ணினன், கண் முகிழ்த்து இருந்தான்**

**ஓய்ந்த தாம் இவள் வலி என அரக்கன் வந்து உற்றான்" (சு.காண். 1041)**

எனும் பாடல் வரிகள் தெளிவுறுத்துகிறது. இந்திரசித்தனிடம் அகப்பட்டுக் கொண்ட அனுமனை அரக்கர்கள் கயிற்றால் கட்டி இராவணனிடம் இழுத்துச் செல்கின்றனர். சாதாரண கயிற்றால் அனுமனைக் கட்ட முடியாதென்றும், எவ்வளவு பெரிய கயிறானாலும் அதை அறத்து விடுவானென்றும் பயந்தனர். அப்பயத்தால் பெண்களின் தாலி கயிறுகளைத்

ISBN NUMBER: 978-93-91115-78-4

தவிர, மற்ற கயிறுகள் அனைத்தையும் பயன்படுத்தி அனுமனைக் கட்டினர். பல்வகைப்பட்ட கயிறுகளால் அனுமனைப் பிணித்தமையை,

**"நாட்டில் நகரில் நடு உள்ள கயிறு நவிலுந் தகைமையவே**

**வீட்டின் ஊசல் நெடும்பாசம் அற்ற தேரும் வீசி துறந்த**

**மாட்டும் புரவி ஆயமெலாம் மருவி வாங்கும் தொடை அழிந்த**

**பூட்டும் வல்லி மூட்டோடும் புரசை இழந்த போர்யானை" (சு.காண். 1164)**

**"பெண்ணிற்கு இசையும் மங்கலத்தில் பிணித்த கயிறே இடையிழைத்த**

**கண்ணிற் கண்ட வன்பாசம் எல்லாம் இட்டுக் கட்டினார்" (சு.காண். 1165)**

என்ற பாடலடிகள் காட்சிப்படுத்துகிறது. பிரம்மாஸ்திரம் கட்டு இருக்க பிற கட்டுகள் தேவையில்லை. ஆயினும் அனுமனின் மீது கொண்ட அச்சம் அவர்களை அவ்வாறு செய்ய வைத்தது.

**இராவணனனுக்கு அறிவுரை கூறல்**

இந்திரசித்தன் அனுமனை இராவணன் முன் கொண்டு சென்று நிறுத்திய போது அவன் மீது பாய்ந்து கொல்ல வேண்டும் என்று முதலில் நினைக்கிறான். ஆனால், 'அச்செயல் செய்யத்தக்க செயலன்று; அறச்செயலும் அன்று' என்று அச்செயலை கைவிட்டான். மேலும் இவனை, தன்னால் வெல்லவும் முடியாது; தன்னை வெல்வதும் இவனால் முடியாது. எனவே முடிவற்ற போரை தொடங்குவதும் நல்லதல்ல. இராவணனைக் கொல்வேன் என்று இராமன் சபதம் செய்துள்ளார். இன்னும் ஒரு மாத காலம் தான் உயிரோடு இருப்பேன் என்று சீதையும் தன் நிலைமையை எடுத்துரைத்துள்ளான். ஆதலால் இப்போது போர் செய்வது அறிவுடைமையாகாது என்று எண்ணிய அனுமன் தூதனாக செயல்படவேண்டும் என முடிவு செய்தான். இராவணனும் மிகுந்த கோபத்துடன் அனுமனைப் பார்த்து, **"இந்த இலங்கைக்கு ஏன் வந்தாய்? நீ யார்? திருமாலா? இந்திரனா? சிவனா? பிரமனா? அல்லது ஆதிசேடனா? முருகனா? எமன்தானா? அல்லது முனிவர்கள் அனுப்பிய பூதமா? உண்மையில் நீ யார் என்பதைச் சொல்?" (உரைநடையில் கம்பராமாயணம்,**

**ப. 295)** என்று இராவணன் கேட்டான். அயோத்தியில் தசரத சக்கரவர்த்தியின் மைந்தனாக அவதரித்திருக்கும் இராமனின் பெருமைகளைக் கூறி அப்பெருமானின் அடியவன் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறான். இராம அவதாரச் சிறப்பை அனுமனின் கூற்றாக,

**"அறந்தலை நிறுத்தி வேதம்**

**அருள் சுரந்து அறைந்த நீதித்**

**திறம் தெரிந்து உலகம் பூணச்**

**செந்நெறி செலுத்தித் தீயோர்**

**இறந்து உக நூறித் தக்கோர்**

**இடர் துடைத்து ஏக ஈண்டுப்**

**பிறந்தனன் தன்பொன் பாதம்**

**ஏத்துவார் பிறப்பு அறுப்பான்" (சு.காண். 1126)**

என்ற பாடலடிகளில் கம்பர் எடுத்துரைத்துள்ளார். இராமபிரானுக்கு அடிமைத் தொழில் செய்பவன் தானென்றும் அனுமன் என்பது தன் பெயரென்றும் கூறினான். இராவணன் அவையில் அஞ்சா நெஞ்சத்துடன் தன்னை அறிமுகம் செய்துக்கொண்ட அனுமனை கவிஞர் வாலியும் புதுக்கவிதையில் வடித்துத் தந்திருக்கிறார். இதனை,

**"அனுமான்! – என இறைவன்**

**அருமறை பரவும் பெருமான்!**

**புல்லியர் இனம் கண்டு**

**பொடிக்கப் பிறந்த – ஒரு**

**வில்லியின் தூதன் நான்! – அந்த**

**வரதனின் தூதன் தான்" (அவதாரபுருஷன், ப. 178)**

என்ற கவிதை வரிகள் காட்சிப்படுத்துகிறது. சீதையைத் தேடிக் கொண்டு வந்த படையின் தலைவன் வாலியின் மகனான அங்கதனின் தூதனாய் வந்திருப்பதாக இராவணனிடத்து அனுமன் கூறினான். அதுமட்டுமல்லாமல் வாலியைக் கொன்ற இராமனோடு நட்புறவு கொண்ட கிட்கிந்தை மன்னனான சுக்கிரீவன் கூறிய வார்த்தைகளை சொல்லும் பொருட்டு வந்தேன் என்றான். அறக்கோட்பாடுகளை வலியுறுத்தி இராவணனை திருத்த முயற்சிக்கிறான. இதனை,

**"வறிது வீழ்த்தனை வாழ்க்கையை மன் அறம்**

**சிறிதும் நோக்கலை தீமை திருத்தினாய்**

**இறுதி உற்றுளது ஆயினும் இன்னும் ஓர்**

**உறுதி கேட்டு உயிர்நெடிது ஓம்புவாய்" (சு.காண். 1137)**

என்ற பாடல் விளக்குகிறது. தீயினும் தூயவளாகிய கற்புக்கரசி சீதையை துன்புறுத்தியதால் உன் தவப்பயன் உன்னை விட்டு நீங்கத் தொடங்கிவிட்டது. பிறர் மனை விரும்பியர் எவரும் வாழ்ந்ததில்லை. அதற்கு வாலியும் சான்றாவான். ஆழி சூழ் உலகில் உன்னைப் போல நீதியும் ஞானமும் கொண்ட நிறைக் குணத்தோர் எவருமில்லை வேத நெறி முறைகளின் படி வாழ்ந்து கொண்டிருப்பவன் இன்று அறநெறி தவறி பாவச் செயலில் ஈடுபடுதல் குற்றமாகும். பத்து தலைகளும், இருபது கைகளும் கொண்டிருப்பதால் ஒருதலையும், இருகைகளும்

ISBN NUMBER: 978-93-91115-78-4

உடைய இராமனைக் கண்டு அஞ்ச வேண்டியதில்லை என்று எண்ணுவது தவறாகும். அறம் தவறியவர்க்கு வல்லமை கை கொடுக்காது. முப்புரம் எரித்த சிவபெருமானிடம் பெற்ற வர பலத்தினால் இராமனுடைய சர பலத்தை வென்று விடலாம் என்று நினைப்பது நடக்காது என்றான். உன் செல்வம், சுற்றம், உயிர் என இவற்றை காத்துக்கொள்ள வேண்டுமென்றால், இறுதியாக சிறை வைக்கப்பட்டிருந்த சீதையை விடுவிக்க வேண்டும் என்று சுக்கிரீவன் கூறிய செய்திகளை இராவணனிடத்து அனுமன் கூறினான். இச்சிந்தனையை,

**“நண்டு சிப்பி வேய்கதலி நாசமுறுங் காலத்தில்**
**கொண்ட கரு அழிக்கும் கொள்கைபோல் – ஒண்தொடிஇ**
**போதம் தனம் கல்வி பொன் வரும் காலம் அயல்**
**மாதர் மேல் வைப்பார் மனம்” (நல்வழி. 36)**

என்ற நல்வழிப் பாடலிலும் காணமுடிகிறது.

அனுமன் சீதையை விட்டுவிடுமாறு நயமாகப் பல அறிவுரைகள் கூறியும் அதைக் கேட்காத இராவணன் அனுமனை நோக்கி, குரங்கொன்று தனக்கு அறிவுரைக் கூறுவதா என்று ஏளனமாகச் சிரித்தான். அதுமட்டுமல்லாமல் தூதனாய் வந்தவன் அரக்கர்களைக் கொன்றது எதற்காக என்று கேட்டான். அதற்கு அனுமனும் **“உன்னை எனக்குக் காட்டுவார் எவரும் இல்லாததால் அசோக வனத்தை அழித்தேன். என்னைக் கொல்ல வந்த அரக்கர்களை நான் கொன்றேன். அதன் பிறகு உன்னைக் காண வேண்டும் என்பதற்காகத்தான் அடக்கத்தோடு இங்கு வந்தேன்”(உரைநடையில் கம்பராமாயணம், மு. செல்வநாதன் (உ.ஆ.), ப. 297 – 298)** என்று அனுமன் பதில் கூறுகிறான். அனுமனைக் கொல்லுமாறு இராவணன் ஆணையிட கொலையாளிகள் விரைந்து வந்தனர். அப்போது வீடணன் நில்லுங்கள் என்று உரக்கக் கூறி தடுத்தான். தூதனாக வந்தவனைக் கொல்லுதல் பாவமென்றும் அத்துடன் பழியும் தம்மை வந்து சேருமென்றும் அரச நீதியை எடுத்துரைக்கிறான்.

**இலங்கையை எரியூட்டுதல்**

அனுமனின் செயல்பாட்டால் சீற்றம் கொண்ட இராவணன் அவனை கொல்வது குற்றம் என்று கருதி தண்டிக்க முற்பட்டான். தன் வாலாலே ஆசனத்தை அமைத்துக்கொண்டு உட்கார துணிந்த இக்குரங்கினுடைய வாலை வெட்ட வேண்டும் என்று அப்போதே நினைத்தேன். அப்படி வெட்டினால் கூட வேதனை குறைவாகத்தான் இருக்கும். எனவே அதன் வாலில் தீ வைத்து கொளுத்துங்கள் என்றான். அனுமனும் ‘**வாலில் தீயிடுவது இந்த ஊரை கொளுத்துக**’ என்று குறிப்பால் உணர்த்துவது போல இருக்கிறது என்று மகிழ்ந்தான். அரக்கர்கள் அனுமனது நீண்ட வாலில் துணியைச் சுற்றினர். பின்னர் அதை எண்ணெயில்

**ISBN NUMBER: 978-93-91115-78-4**

தோய்த்து எடுத்து கொளுத்தினர். இலங்கை வாழ் மக்கள் அனைவரும் காணும் வகையில் அனுமனை இழுத்துச் சென்று அந்நகர் முழுவதும் சுற்றி வந்தனர். அமைதியாக இருந்த அனுமனும் ஊர் எல்லையை அடைந்த போது, இது தான் தப்பிச் செல்வதற்காக நேரம் என்று கருதினான்.

**"ஒடுமீன் ஓட உறுமீன் வரும் அளவும்**
**வாடி இருக்குமாம் கொக்கு" (மூதுரை. 16)**

என்ற மூதுரையில் தக்க சமயத்திற்காக எதிர்ப்பார்த்திருந்த கொக்கினைப் போல் அனுமனும் செயல்பட்டான். பேருருவம் கொண்டு வாலினைப் பிடித்துக்கொண்டிருந்த வீரர்கள் கீழே விழுந்து இறந்தனர் எரியும் நெருப்பில் சிக்கிய வீரர்கள் அலறித் துடித்தனர். அவர்களை அப்படியே ஆகாயத்தில் வீசி எறிந்துவிட்டு வாலை சுழற்றி இலங்கையின் மேல் பரவும்படி செய்தான். இதனை,

**"துன்னலர் புரத்தை முற்றும்**
**சுடுதொழில் தொல்லை யோனும்**
**பன்னின பொருளும் நாணப்**
**பாதகர் இருக்கை பற்ற**
**மன்னனை வாழ்த்தி, வாழ்த்தி**
**வயங்குளரி மடுப்பன் என்னாப்**
**பொன் நகர் மீதே, தன்போர்**
**வாலினைப் போக விட்டான்" (சு.காண். 1180)**

முப்புரத்தை எரிக்க சிவபெருமானும் தனக்குத் துணையாக பலவற்றை உடன் கொண்டு சென்றார். ஆனால் அனுமன் எந்தவொரு துணையுமின்றி வாலினைக் கொண்டு இலங்கையை எரித்தான் என்று கம்பர் அனுமனின் ஆற்றலை புகழ்ந்து பாடியுள்ளார். அனுமனின் வாலிலிருந்த தீயானது இலங்கை மாநகரின் மாளிகை முழுவதையும் பற்றி எரிந்தது. ஆதலால் அந்நகரத்து மக்கள் எல்லோரும் நிலைகெட்டு செய்வதறியாமல் அங்கும் இங்கும் ஓடி அலைந்தனர். அம்மக்களின் கூக்குரலை,

**"வாசல் இட்ட எரிமணி மாளிகை**
**மூசமுட்டி முழுதும் முருக்கலால்**
**ஊசல் இட்டன ஓடி, உலைந்து உளை**
**பூசல் இட்ட – இரியப்புரம் எலாம்" (சு.காண். 1187)**

என்ற பாடல் வரிகளால் அறியமுடிகிறது. வால் பட்ட இடங்கள் எல்லாம் பற்றி எரியத் தொடங்கியது. இலங்கை நகர் முழுவதும் தீயால் குளித்துக் கொண்டிருந்தது போல காட்சி

ISBN NUMBER: 978-93-91115-78-4

தந்தது. **"முன்னை இட்ட தீ முப்பரத்திலே, பின்னை இட்ட தீ தென் இலங்கையிலே" (பட்டினத்தார்பாடல், தாய்பாடல், பா. 7)** என்று பட்டினத்தார் குறிப்பிட்டது போல, தீயின் வெப்பம் இலங்கையைச் சூழ்ந்த கடலை மட்டுமல்லாமல் புகைத்தொகுதியாக மேலெழுந்து விண்ணையும் தாக்கியது. அரக்கர்களும், அரக்கிகளும் தப்பி செல்லும் வழியின்றி நெருப்பிலே வீழ்ந்து அழிந்தார்கள். சிலர் புகை மண்டலத்தில் சிக்கிக்கொண்டு கருகிப் போனார்கள். சிலர் கருகிய உடல்களோடும், தோல் உரிந்த உடல்களோடும் ஓடிச் சென்று கடல் நீருக்குள் ஒளிந்து கொண்டார்கள். சிலர் தம்மக்களுடனும், சுற்றத்தாருடனும் சென்று கடலில் வீழ்ந்தனர். கடலில் வீழ்ந்த அரக்கியர்களின் நிலையை,

**"மருங்கின் மேல் ஒரு மகவு கொண்டு ஒரு தனி மகவை**
**அருங்கை யால் பற்றி மற்றொரு மகவுபின் அரற்ற,**
**நெருங்கி னாரொடு நெறிகுழல் சுறுக்கொள நீக்கிக்**
**கருங்கடல் தலை வீழ்ந்தனர் அரக்கியர் கதறி" (சு.காண். 1219)**

என்ற பாடலால் காணமுடிகிறது. நகரை அழித்த தீயானது இராவணனின் அரண்மனையையும் விட்டுவைக்கவில்லை. அந்த அரண்மனையின் ஏழு மாடங்களும் ஊழிக் காலத் தீப்போல் பற்றி எரிந்தது. இராவணன் தன் உரிமைப் பெண்களுடன் புட்பக விமானத்தில் ஏறித் தப்பிச்சென்றான்.

அனுமன் தீப்பற்றியுள்ள வாலைக் கடலில் தோய்த்தெடுத்தான். அவ்வாறு தோய்த்ததனால் உண்டான வெப்பம் முன்பு கடலில் சென்று மூழ்கிய வீரர்கள் சிலர் இறக்க காரணமானது. தன்னை எதிர்த்து வந்த மீதமுள்ள வீரர்களையும் அனுமன் கொன்றான். வானத்து வித்யாதரர்களும் அனுமன் கொளுத்திவிட்ட தீ சீதை இருக்கும் இடமான அசோகவனத்தை மட்டும் எரிக்கவில்லை என்று கூறினர். இறுதியாக அனுமன் சீதையிடம் சென்று அவர் திருவடிகளை வணங்கி விடைபெற்றுச் சென்றான்.

**திருவடியைத் தொழுதல்**

இலங்கையினின்று மீண்டு வந்த அனுமன் மகேந்திரமலையில் உள்ள வானரர்களைக் கண்டான. அங்கதன் சாம்பவான் மற்றும் அங்குள்ள அனைவரையும் வணங்கினான். அவர்கள் அனைவருக்கும் சீதை வாழ்த்துத் தெரிவித்ததாகக் கூறினான். பின்னர் வானரர்கள் இலங்கையில் நடந்தவற்றைக் கூறுங்கள் என்று கேட்க, அதற்கு அனுமன் சீதையின் கற்புத் தன்மையையும், அவர் இராமபிரானுக்கு சூடாமணியை அடையாளமாகக் கொடுத்தனுப்பியதையும் கூறினான். தற்பெருமை பேசக்கூடாது என்ற காரணத்தால் அரக்கர்களோடு போர்புரிந்து வென்றது. இலங்கையை எரித்தது ஆகிய

ISBN NUMBER: 978-93-91115-78-4

செயலகளையெல்லாம் கூறவில்லை. அனுமன் கூறாதனவற்றை வானரர் குறிப்பால் உணர்ந்தறிந்தனர் என்று கம்பர் குறிப்பிட்டிருக்கிறார். இதனை,

**"பொருதமை புண்ணெ சொல்ல, வென்றமை போந்த தன்மை**

**உரைசெய ஊர்தீ யிட்டது ஓங்கிரும் புகையே ஒதக்**

**கருதலர் பெருமை தேவி மீண்டிலாச் செயலே காட்டத்**

**தெரிதர உணர்ந்தேம் பின்னர் என்னினிச் செய்தும் என்றார்" (சு.காண். 1259)**

என்ற பாடலால் அறியமுடிகிறது. சீதையை தேடி வருவதற்கு கொடுக்கப்பட்ட கால அவகாசம் முடிந்தவிட்டதால் இராமபிரானிடம் சென்று விரைவாக இச்செய்திகளை தெரிவிக்குமாறு வானர்கள் அனுமனிடத்து கூறினார்கள். இராமபிரானை வந்தடைந்த அனுமனும் அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்குவதற்குப் பதிலாகச் சீதை இருந்த தென்திசை நோக்கித் தலைமேல் கைகுவித்துக் கீழே விழுந்து வணங்கினான். அக்குறிப்பைக் கொண்டு இராமபிரானும் சீதை கற்போடும், உயிரோடும் இருக்கின்றாள் என்பதை புரிந்துக் கொண்டார். அனுமனும் இராமரிடத்தில இலங்கையில் நடந்த நிகழ்வுகள் என்று ஒவ்வொன்றாக சொல்லவில்லை. அதற்கு மாறாக எடுத்தவுடன் **'கடல் சூழ் இலங்கை மாநகரில் கற்பினுக்கு அணியாகத் திகழும் சீதையை இரு கண்களால் கண்டேன்'** என்றான். அனுமனின் இக்கூற்றை,

**"கண்டனென் கற்பினுக்கு அணியைக் கண்களால்**

**தென் திரை அலைகடல் இலங்கை தென் நகர்**

**அண்டர் நாயக இனி துறத்தி ஐயமும்**

**பண்டு உள துயரும் என்று அனுமன் பன்னுவான்" (சு.காண். 1307)**

என்ற பாடலடிகளால் அறியலாகிறது. இதில் சீதை என்று குறிப்பிடாமல் **'கற்பினுக்கு அணி'** என்று கம்பர் உயர்வாகச் சுட்டிக் காட்டுகிறார். கவிஞர் வாலி அவ்வகையில் கவிஞர் வாலியும் சீதையின் கற்பின் சிறப்பை புதுக்கவிதையாக்கி தந்தமையை,

**"கண்டேன் சீதையை; கற்புக்குக் கற்பைக்**

**கற்பிக்கும் கோதையை! தரையை மிஞ்சிய மறையை" (அ.புருஷன், ப. 182)**

என்ற கவிதை வரிகளால் அறியமுடிகிறது.

ஒரு பெண் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய குணங்களுடனும், பொறுமையுடனும், கற்புத் தன்மையுடனும் இருக்க வேண்டும். கற்பெனப்படுவது உடலாலும், உள்ளத்தாலும் மட்டுமல்லாமல் கணவனின் சொல்படி நடந்துக்கொள்வதும் ஆகும். அவ்வகையில் இம்மூன்றும் ஒருங்கே இணைந்து பெண்ணாக பெண்ணினத்திற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவள் சீதை. ஒவ்வொரு பெண்ணும் பிறந்த வீடு, புகுந்த வீடு

**ISBN NUMBER: 978-93-91115-78-4**

என்று இரு வீட்டாரின் பெருமையைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்கு உதாரணமானவள் சீதையென்று, அனுமனால் அவரின் கற்பின் திறத்தை கம்பர் பாராட்டியிருக்கிறார். இதனை,

**“விற்பெருந் தடந்தோள் வீர! வீங்கு நீர் இலங்கை வெற்பில்**

**நற்பெருந் தவத்தன் ஆய நங்கையைக் கண்டேன் அல்லேன்**

**இற்பிறப்பு என்பதொன்றும் இரும்பொறை என்பதொன்றும்**

**கற்பு எனும் பெயரதொன்றும் களிநடம் புரியக் கண்டேன்” (சு.காண். 1311)**

என்ற பாடலடிகள் வெளிப்படுத்துகிறது. மனம், மொழி, மெய் என்ற நிலைகளில் தங்களை விட்டு பிரியாதிருக்கும் அன்னையை தாங்கள் மட்டும் பிரிந்துள்ளீர்கள் என்று நினைப்பது பொருந்தாது என்றான். சீதை இலங்கையில் உள்ள ஓர் சோலையில், இலக்குவன் வேய்ந்த தூய பர்ணசாலையில் தவநிலையேறிக் கொண்டிருக்கிறாள். **“உன்னை விரும்பாத ஒரு பெண்ணை நீ தீண்டினால் தலை வெடித்துச் சிதறிச் சாவாய் என்று பிரமன் கொடுத்த சாபம் இராணவனுக்கு இருக்கிறது. அதனால் அவன் சீதையைத் தொட அஞ்சி, அவள் இருந்த நிலத்தை பெயர்த்தெடுத்துச் சென்றிருக்கிறான்” (உரைநடையில் கம்பராமாயணம், ப. 304).**

அசோகவனத்தில் சீதையை கண்ட அனுமன் அவரிடம் பேசுவதற்கான தக்க சமயத்தை எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கையில், அவ்விடத்திற்கு இராவணன் வந்தான். தான் கொடுத்த கால அவகாசத்தில் பன்னிரண்டு மாதங்களில் பத்து மாதங்கள் கழிந்தனயென்றும், மீதம் இரண்டு மாதங்கள் தான் இருக்கின்றனயென்றும் கூறினான். அதற்குள் தன் விருப்பத்திற்கு இணங்க வேண்டும். இல்லையென்றால் உயிரை இழக்க நேரிடும் என்று அச்சுறுத்தினான். பின்னர் சீதைக்கு அறிவுரை வழங்கும்படி அரக்கியரிடம் கூறிச் சென்றான். மானம் இழந்த பின் வாழாமை நன்று என்று சீதையும் தன்னுயிரை மாய்த்துக் கொள்ள முடிவு செய்தாள். அந்நிலையில் இராமரின் திருநாமத்தை உச்சரித்து அம்முயற்சியை அனுமன் தடுத்தான். இராமபிரான் கொடுத்தனுப்பிய மோதிரத்தையும், அவரை விட்டுப் பிரிந்த பின்னர் நடந்த நிகழ்வுகளையும் ஒவ்வொன்றாக எடுத்துரைத்தான். அதன் பின்னர் சீதை இராமபிரானின் உண்மையான தொண்டன் அனுமன் என்பதை ஏற்றுக் கொண்டாள். சீதையின் நிலையை எடுத்துரைப்பதை,

**“திங்கள் ஒன்று இரும்பென் இன்றும் திருவுளந் தீர்த்த பின்னை,**

**பங்கு வெண் உயிரொடு என்று உன் குரைகழல் தலைக்கண் வைத்தாள்” (சு.காண். 1329)**

என்ற பாடல் வரிகள் புலப்படுத்துகிறது. இராமபிரான் எப்பாடுபட்டாவது இலங்கை வந்து தன்னை மீட்டுச் செல்வார் என்று நம்பிக்கை கொண்டிருந்தாள். அந்நம்பிக்கைக்கு அடியவனான தானும் வலுவூட்டியபின் அவ்விடத்திலிருந்து புறப்பட்டு வந்ததாகக் கூறினான். வரும் முன்னர் இராமரின் நினைவாக சீதை தரித்திருந்த சூளாமணியை தந்தார்

என்று அனுமன் அச்சூளாமணியை எடுத்து அவரிடம் கொடுத்தான். சூளாமணியைப் பார்த்த இராமனின் விழிகளில் கண்ணீர் பெருகியது. சீதை இருக்குமிடம் தெரிந்து இனியும் காலங் கடத்தக்கூடாது என்று இராமன் கூற்றிற்கிணங்க சுக்கிரிவன் ஆணையை ஏற்ற வானரப் படை தென் திசை நோக்கிப் புறப்பட்டது. அச்சமயம் அனுமனின் தோள்களின் மீது இராமரும், வாலியின் மைந்தனாகிய அங்கதனின் தோள்கள் மீது இலக்குவனும் ஏறிச் சென்றனர். அனுமனின் வேண்டுகோளின்படி இராமர் அருளியமையை,

**"புன்தொழில் குரங்கு எனாது என் தோளிடைப் புகுதி எண்ணாத்**

**தன் தலை படியில் தாழ்ந்தான் அண்ணலும் சரணம் வைத்தான்" (சு.காண். 1337)**

என்ற பாடலடிகளில் காணமுடிகிறது. இராமபிரானின் திருவடிகளைத் தோள்கள் மீது சுமக்கும் பாக்கியத்தைப் பெற்றதனால் அனுமன் '**சிறிய திருவடி**' என்று அழைக்கப்பட்டான்.

**தொகுப்புரை**

- மகேந்திர மலையிலிருந்து கடல் தாண்டி இலங்கை சென்றது முதல் இலங்கையை எரியூட்டி மீண்டும் அம்மலைக்கு திரும்பி வந்தது வரை என பல்வேறு நிகழ்வுகளால் அனுமனின் பேராற்றலைக் கம்பர் பெரிதும் படைத்துக்காட்டியிருக்கிறார்.
- மகேந்திர மலையிடம் அன்பு செலுத்தியது, இலங்கை மாதேவியை கொல்லாமல் அடித்தது, அக்ககுமாரனை போய் வா என்றது, உறங்கிக் கொண்டிருந்த இராவணனை கொல்லாமல் விடுத்தது, இராமனும் சீதையும் படும் துயரை எண்ணி மனம் வருந்தியது உள்ளிட்ட பல்வேறு செயல்களால் அனுமன் இரக்கக்குணம் கொண்டவன் என்பதை அறியமுடிகிறது.
- இராமரிடத்தும், சீதையிடத்தும் பணிந்து நடந்து கொண்ட விதமும், இந்திரசித்தனின் பிரம்மாஸ்திரத்திற்கு கட்டுப்பட்ட திறமும் என அனுமனின் பணிவுடைமை பாராட்டப்பட்டுள்ளது.
- இராமர் இட்ட பணியை செய்து முடிப்பேன் அது வரை ஓயமாட்டேன் என்ற அனுமனின் கடமையுணர்வை கம்பர் வெளிப்படுத்தியிருக்கிறார்.
- சீதையை கண்டு வருவேன் என்று சொன்ன சொல் தவறாமல் கண்டு வந்த செய்தியை உரைத்த அனுமனின் வன்மையும், செயல் தன்மையும் போற்றதலுக்குரியது.
- இலங்கையின் மாளிகைக்குள் புகுந்த அனுமன் மதிநுட்பத்தால், பல செய்திகளை நுனித்துணர்ந்து கொண்டார் என்பதை கம்பர் திறம்படக் கூறியுள்ளார்.
- கம்பராமாயணத்தில் அனுமன் அறிமுகமான கிட்கிந்தா காண்டம் முதல் யுத்த காண்டம் முடிய அவனுடைய சொல்லையும், செயலையும் ஆழ்ந்து நோக்கினால் அப்பாத்திரப்

ISBN NUMBER: 978-93-91115-78-4

படைப்பு இராம அவதாரத்தின் நோக்கத்தினை நிறைவுசெய்தற் பொருட்டு அமைந்ததென்பதை தெளிவுறுத்துகிறது.

- அனுமன் சொல்லாலும், செயலாலும் ஒரு தனிக் காண்டத்தை படைத்த கம்பன் அதில் முழுவதுமாக அனுமனின் புகழைப் பாடியிருப்பது நன்கு புலப்படுகிறது. இவற்றில் கம்பனின் கவித்துவமும் வெளிப்பட்டிருப்பது சிறப்பிற்குரியது.
- சுக்கிரீவனுக்கு நல்ல அமைச்சனாகவும், இராமனுக்குச் சிறந்த தூதனாகவும், தன்னலமற்ற தொண்டனாகவும், இலங்கையை அழித்த மாபெரும் வீரனாகவும் அனுமன் செயல்பட்டுள்ளான். அனுமனின் இத்தகைய பன்முகப் பண்புகளை கம்பர் அழகுற படைத்துக் காட்டியிருப்பது சிறப்பிற்குரியது.

**துணைநூற்பட்டியல்**

[1] டாக்டர் M. நாராயணவேலுப்பிள்ளை. வ.த. இராமசுப்பிரமணியம், டாக்டர் துரை. இராசாராம், *கம்பராமாயணம், சுந்தரகாண்டம் மூலமும் தெளிவுரையும்* (பாகம். 1-2), மூன்றாம் பதிப்பு – 2006, திருமகள் நிலையம், தி.நகர், சென்னை – 17.

[2] புலவர் மு. செல்வநாதன் (உ.ஆ), கரு. இராமநாதன் (ப.ஆ.), *உரைநடையில் கம்பராமாயணம்*, ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ், முதற்பதிப்பு, தி.நகர், சென்னை – 17, 1993.

[3] முனைவர் சுந்தர சண்முகனார், *சுந்தர காண்டச் சுரங்கம்*, முதற்பதிப்பு, வானதி பதிப்பகம், தி.நகர், சென்னை – 17, 1989.

[4] இந்திரா சௌந்தர்ராஜன், *ஜெகம் புகழும் புண்ணிய கதை அனுமனின் கதையே...,* இரண்டாம் பதிப்பு, சாருபிரபா, இராயப்பேட்டை, சென்னை – 14, 2014.

[5] திரு.சோ. *வால்மீகி இராமாயணம்*, இரண்டாம் பாகம், பதிமூன்றாம் பதிப்பு, அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை – 14, 2014.

[6] முனைவர் நா. பழனிவேலு, *கம்பர் கண்ட இராமன்*, முதற்பதிப்பு, பொன்னிப் பதிப்பகம், திருப்பூர் – 1, 1995.

[7] டாக்டர் மு. வரதராசனார், *திருக்குறள் தெளிவுரை*, திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், டி.டி.கே. சாலை, சென்னை – 18.

[8] கவிஞர் வாலி, *அவதார புருஷன்*, வானதி பதிப்பகம், தி. நகர், சென்னை – 17.

[9] கீர்த்தி, எம்.எ, *அருணாவின் நீதிநூல்கள்*, அருணா பப்ளிகேஷன்ஸ், மூன்றாம் பதிப்பு, வில்லிவாக்கம், சென்னை – 49, 2014.

[10] பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் (மு.ப.ஆ), *கம்பராமாயணம் இராமவதாரம்,*

*சுந்தரகாண்டம் உரையுடன்*, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், முதல் பதிப்பு, அம்பத்தூர், சென்னை – 98, 2012.

**References**

[1] Dr. M. Narayanavelupillai. Vata. Ramasubramaniam, Dr. Durai. Rajaram, *Kambaramayanam, Through Sundarakandam and Clarification* (Part. 1-2), Third Edition - 2006, Thirumakal Nilayam, T.Nagar, Chennai - 17.

[2] Puluvar M. Selvanathan (U.A.), Karu. Ramanathan (P.A.), *Prose Kambaramayanam*, Sri Hindu Publications, First Edition, T.Nagar, Chennai - 17, 1993.

[3] Dr. Sundara Shanmuganar, *Sundara Kandach Surangam*, First Edition, Vanathi Publishing House, The Nagar, Chennai - 17, 1989.

[4] Indira Soundarajan, *The Blessed Story of Jagam is the Story of Hanuman*, Second Edition, Saruprabha, Raiyapettai, Chennai - 14, 2014.

[5] Mr. S. *Valmiki Ramayana*, Part II, Thirteenth Edition, Alliance Company, Mylapore, Chennai – 14, 2014.

[6] Dr. N. Palanivelu, *Kambar Kanda Raman*, First Edition, Ponni Publishing, Tiruppur - 1, 1995.

[7] Dr. M. Varatharasanar, *Thirukkural Clarification*, Tirunelveli, South Indian Vegan Institute, D.T.K. Road, Chennai - 18.

[8] Poet Wali, *Avatara Purushan*, Vanathi Publishing, The. Nagar, Chennai - 17.

[9] Keerthi, MA, *Aruna's Moral Books*, Aruna Publications, Third Edition, Villivakkam, Chennai – 49, 2014.

[10] Professor A.S. Gnanasambanthan (MBA), *Kambaramayanam Ramavataram*, with text by *Sundarakandam*, New Century Book House (P) Ltd, First Edition, Ambattur, Chennai - 98, 2012.

# 4

# கம்பராமாயணத்தில் மகளிர் - பன்முகப் பண்புகள்

## Women in Kambaramayanam – Multi-Faceted Quality

**முனைவர் ம.ஆனந்தவள்ளி**, கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை, அரசு மகளிர் கலைக்கல்லூரி, கிருட்டினகிரி.
**Dr.M.Anandavalli**, Guest Lecturer of Tamil, Government Arts College for Women, Krishnagiri-02.
**ORCiD: https://orcid.org/0000-0001-8083-5072**
**DOI: 10.5281/zenodo.6967075**

## Abstract

*This chapter explores the multiple characters of women portrayed in "Kambaramayanam" by the famous Tamil poet Kambar. Kambaramayanam is also called "Ramavatharam". Most of the female Roles in "Kambaramayanam" are potrayed with admirable good characters. Female roles like Kosalai, Kaikeyi, Sumethirai, Savarimadha, Tharai, Thirisadai are potrayed with the character of motherhood. Some of the characters which are shown in "Kambaramayanam" are known for anger and evilness. In this chapter, let us see the multiple characters of women that are seen in "Kambaramayanam".*

**Keywords**: Women, *Kambaramayanam*, Multi-Faceted Quality

### முன்னுரை

இராமனின் வரலாற்றைக் கூறும் இராமாயணம் கம்பரால் இயற்றப்பட்டதால் கம்பராமாயணம் என அழைக்கப்பட்டது. இந்நூல் குலோத்துங்க சோழனின் ஆணைப்படி எழுதப்பட்டதாகும். வடமொழியில் வால்மீகியால் எழுதப்பட்ட இராமாயணத்தைத் தழுவி எழுதப்பட்டது கம்பராமாயணம் ஆகும். இதில் ஆறு காண்டங்கள் அமையப்பெற்றுள்ளன. சடையப்ப வள்ளல் சிறந்து வாழ்ந்திருந்தத் திருவெண்ணெய்நல்லூரில் எண்ணப்பட்ட நூற்றாண்டு எண்ணூற்றேழில், பங்குனி மாதம் அத்த நட்சத்திரத்தில், அரங்கநாதர் முன்னிலையில் கம்பரால் இந்நூல் அரங்கேற்றப்பட்டது.

'கம்பன் வீட்டு கட்டுத்தறியும் கவிபாடும்' என்ற பழமொழிக்கு ஏற்ப கம்பரின் வாழ்க்கை முழுவதும் தமிழ் வளமும், தமிழ் இலக்கியமும் நிறைந்து காணப்பட்டது. இவர் கி.பி.1180 ஆம் ஆண்டு நாகப்பட்டினம் மாவட்டம் குத்தாலம் வட்டம் திருவழுந்தூர் என்னும் கிராமத்தில் பிறந்தார். தந்தையின் பெயர் ஆதித்தன் என்பதாகும். இவர் தமிழ் மற்றும் சமஸ்கிருத மொழிகளில் புலமைப் பெற்றிருந்தார்.

**ISBN NUMBER: 978-93-91115-78-4**

தமிழ்ப் புலவர்களில் கம்பர், ஒட்டக்கூத்தர், ஜெயங்கொண்டார் ஆகிய மூவரும் கவிச்சக்ரவர்த்திப் பட்டம் பெற்றவர்களாவர். இவர்களில் கம்பர் மட்டுமே 'கவிச்சக்ரவர்த்தி கம்பர்' என்று அழைக்கும் பெருக்குரியவராக உள்ளார். 'யாம் அறிந்த புலவரிலே கம்பனைப்போல்', என்றும் 'புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு' என்றும் பாரதியின் பாராட்டுக்குரியவர்.

பண்பு என்பது ஒருவரிடம் இருக்கும் நிறைந்த குணமாகும். 'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்' என்று கலித்தொகைக் குறிப்பிட்டுள்ளது. அதனடிப்படையில், மனித சமுதாயத்தை நெறிபடுத்தும் உயர்ந்த எண்ணத்துடன் இயற்றப்பட்ட இராமாயணத்தில் பல்வேறு பண்புகள் கொண்ட மாந்தர்கள் கம்பரால் படைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் மாதர் குலத்திற்குரிய பண்புகளைப் பல கோணங்களில் படைத்துக் காட்டியுள்ளார். தியாகம், இரக்கம், தன்னலமறுப்பு, தொண்டு போன்ற பண்பு நலன்கள் அதிகம் வாய்க்கப்பெற்றவர்களாக உள்ளனர். சில நேரங்களில் 'கடல் கரையை மேவுவது போல' சினம், வஞ்சினம், அரக்கக்குணம் போன்ற குணங்களும் அவர்களிடம் வெளிப்பட்டுள்ளன.

கம்பராமாயணத்தில் கம்பர் படைத்துக்காட்டியுள்ளப் பெண் மாந்தர்கள் பெரும்பாலும் நற்பண்புகள் நிறைந்த பாத்திரங்களாக இருந்த போதிலும் சில இடங்களில் அரக்கத்தனம் வாய்ந்த பெண் பாத்திரப் படைப்புகளையும் படைத்துள்ளார். இது பெண்மையின் முழுமையான பண்புகளை வெளிப்படுத்துவதாக உள்ளது. அவ்வகையில் மகளிரின் பண்புகளான அன்பு, தாய்மை, கற்பு, மேன்மை, தவச்சிறப்பு மற்றும் அரக்கத்தனம், போன்ற பண்புகளை எடுத்துரைப்பது தற்கால சமூகத்திற்கு அவசியமாகிறது.

கம்பராமாயணத்தில் இடம்பெற்றுள்ள கோசலை, கைகேயி, சுமத்திரை, சவரிமாதா, அனுசூயா, தாரை, திரிசடை ஆகியோர் தாய்மைப் பண்புகள் நிறைந்தவர்களாக உள்ளனர். மண்டோதரி தன் கணவனுக்கு பதிவிரதையாகவும், அகலிகை மற்றும் சுயம்பிரபை ஆகிய இருவரும் இராமன், அனுமனால் சாபவிமோசனம் பெற்றவர்களாகவும் படைக்கப்பட்டுள்ளனர். சூர்ப்பணகை, தாடகை, அயோமுகி ஆகிய மூவரும் அரக்கர்குலப் பெண்கள் ஆவர். இவர்கள் அவர்களுக்கே உரிய பண்புகளைப் பெற்று விளங்கக் கூடியவர்களாக கம்பர் படைத்துக்காட்டியுள்ளார்.

**தாய்மை**

தாய்மை என்பது பிரதிபலன் எதிர்பார்க்காத உறவாகும். தாய் என்பவள் அன்பின் சிகரமாகவும், தியாகத்தின் சுடராகவும், அறிவின் ஊற்றாகவும் திகழக்கூடியவள். மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற வரிசையில் முதல் இடத்தைப் பெறக்கூடியவள். பதினாறு செல்வமாக எண்ணும் மனை, மனைவி, மக்கள், தாய், நெல், நீர், நிலம், கால்நடை, கல்வி,

**ISBN NUMBER: 978-93-91115-78-4**

கேள்வி, அறிவு, ஒழுக்கம், வலிமை, ஏவல், பொன், புகழ் ஆகியவற்றில் தாயையும் ஒரு செல்வமாக முன்னோர்கள் கருதியுள்ளனர்.

தாய் என்னும் சொல்லுக்கு ‘அண்ணன்தேவி, அரசன்தேவி, ஊட்டுத்தாய், குருவின்தேவி, கைத்தாய், செவிலித்தாய், தன் தேவியை ஈன்றாள், நற்றாய், பாராட்டுத்தாய், மாதாவின் சகோதரி’ என தமிழ் மொழியகராதி பல பொருள்கள் தந்துள்ளன. இத்தகைய சிறப்புப் பெற்ற தாய் தன் குழந்தையின் முன்னேற்றத்திற்காக தன்னைக் கரைத்துக் கொள்கிறாள். இவ்வகையில் கோசலை, கைகேயி, சுமித்திரை ஆகிய மூவரும் அரசியர்களாக விளங்கி தாய்மை அடைகிறார்கள்.

**அரசியர்கள்**

கோசல நாட்டு மன்னன் தசரதனின் பட்டத்தரசிகள் கோசலை, கைகேயி, சுமத்திரை ஆகிய மூவராவர். இவர்களுக்குப் பிள்ளைப்பேறு இல்லாததை நினைத்து தசரத மன்னன் மிகுந்த கவலையுற்றார். குல குருவான வசிஷ்டரின் ஆலோசனைப்படி, விபாண்டக முனிவரின் மகன் ரிஷ்யசிருங்கரைக் கொண்டு பிள்ளைவரம் வேண்டி பெரும் வேள்வி ஒன்று நடத்தப்படுகிறது. அதன் மூலம் கிடைத்த அமிர்தத்தைத் தசரத மன்னன் தம் மூன்று மனைவியர்களுக்கும் பகிர்ந்து கொடுத்தார். அதன் மூலமாக கோசலைக்கு இராமனும், கைகேயிக்கு பரதனும், சுமத்திரைக்கு இலக்குவணன், சத்துருக்கன் என்ற இரட்டையரும் குழந்தைகளாகப் பிறக்கின்றனர். இம்மூவரசிகளும் தத்தமக்குப் பிறந்த நான்கு குழந்தைகளையும் தன் குழந்தைகளாகக் கருதிப் பேதம் காட்டாது பாராட்டி, சீராட்டி வளர்த்தனர்.

**கோசலை**

கோசல நாட்டு மன்னன் தசரதனின் மூத்த மனைவி கோசலை. கௌசல்யை என்றும் அழைக்கப்படுபவள். முற்பிறவியில் கோசலை மனுசத்ருபா என்னும் பெண்ணாக பிறந்திருந்தாள். இவள் தீவிர விஷ்ணு பக்தையாக இருந்து மேற்கொண்ட தவத்தால் விஷ்ணு மகிழ்ச்சியடைந்து ஓர் வரமளித்தார். அவ்வரத்தால் இப்பிறவியில் விஷ்ணுவின் அவதாரமான இராமன் மகனாக பிறந்தான். தசரதர் கைகேயி, சுமத்திரை ஆகிய இருவரையும் திருமணம் செய்து வந்த போது, சிறிதும் பொறாமைக் கொள்ளாது அவர்களைத் தன் தங்கையாக ஏற்றுக் கொண்டவள். இவர்களின் புதல்வர்கள் மீதும் சரிசமமான அளவில் அன்பு வைத்திருந்தாள்.

இராமன் அரசனாக முடிசூடித் தன்னைப் பார்க்க வருவான் என எதிர்பார்த்திருந்தாள். அச்சமயம் இராமன் தூரத்தில் வெறுந்தோற்றத்துடன் வருவதைப் பார்த்;தாள். பிறகு, இராமனிடம் வினவிய போது, உங்கள் அன்பு மகன் பரதன் முடிச்சூட்டிக் கொள்ளப்

ISBN NUMBER: 978-93-91115-78-4

போகிறான் என்றான். இதனை கேட்ட கோசலை வருத்தப்படாமல் 'மூத்தவன் இருக்க இளையவன் முடி சூடிக் கொள்ளுதல் முறையல்ல' என்ற ஒரு குறையைத் தவிர, வேறுகுறை ஒன்றுமில்லை என்றும், உன்னை விட பரதன் குணத்தில் சிறந்தவனாக விளங்கக் கூடியவன்' என்றும் குறிப்பிட்டாள். இதனை,

**"முறைமை அன்று என்பது ஒன்றுண்டு; அது அல்லது**
**நிறை குணத்தவன்; நின்னினும் நல்லனால்;**
**குறைவின் எனக் கூறினாள்; நால்வர்க்கும்**
**மறு வில் அன்பினில், வேற்றுமை மாற்றினாள்" (அயோ.காண்டம்: நகர்நீங்கு படலம்-4)**

என்ற பாடலால் அறியலாம். தந்தையின் ஆணையை மறுக்காதிருப்பதே அறம் என்பதைச் சுட்டிக்காட்டி, உன் தம்பி பரதனுக்கு முடிசூட்டி, அவனுடன் ஒற்றுமையாக இருந்து 'நல் ஆட்சி செய்க' என்று வாழ்த்தினாள். பிறகு இராமன் தந்தையிட்ட மற்றொரு கட்டளைபடி தான் காட்டிற்குச் சென்று பதினான்கு ஆண்டுகள் வாழ்ந்து, பிறகு நாட்டிற்கு வரவேண்டும் என்பதைக் குறிப்பிட்டதும், கோசலை அலறினாள், துடித்தாள், கீழே விழுந்தாள், பெற்ற வயிற்றை வருத்தினாள். தாய்ப்பசு கன்றுக்குட்டியைப் பிரிந்து வருந்துவதைப் போல உள்ளம் வாடி நின்றாள். இந்நிலையை,

**"கையைக் கையில் நெரிக்கும்ஞூ தன் காதலன்**
**வைகும், ஆல் இலை அன்ன வயிற்றினைப்**
**பெய்வ ளைத்தளி ரால்பிசை யும்ஞூ புகை**
**வெய்து உயிர்க்கும்ஞூ விழுங்கும், புழுங்குமால்" (அயோ.காண்டம்: நகர்நீங்கு படலம்-10)**

என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றது. முதலில் அரசப்பதவி தன் மகனுக்கில்லை என்ற போதும் மகிழ்ந்த தாய், தன்னை விட்டு மகன் பிரிந்து போகிறான் என்றவுடன் உள்ளம் பதறுவதை, இங்கு கம்பர் சுட்டிக்காட்டியுள்ளார். இராமன் தன் தாய்க்கு ஆறுதல் கூறி, விடைப்பெறும் போது, கோசலை தன்னையும் உடன் அழைத்துச் செல்லுமாறு கேட்கிறாள். அதற்கு இராமன் என்னைப் பிரிந்து வாடும் மன்னனைத் தேற்றுவது உங்கள் கடமை என்று கூறி மறுக்கிறான். பிறகு சற்று அமைதியடைந்த கோசலை, பரதன் நாடாண்டாளும், இராமன் காட்டிற்குச் செல்லுவதைத் தடுக்க வேண்டும், என எண்ணி தசரதனைப் பார்க்கச் செல்கிறாள். கைகேயியின் இருப்பிடத்திற்குச் சென்று தசரதனின் நிலைமையைப் பார்த்த பின், தன் கணவனின் நிலைக்காகவும், மகனின் நிலைக்காகவும் மிகுந்த வருத்தமடைகிறாள். இதனால் கோசலையின் இன்ப துன்ப மன உணர்வை அறிய முடிகிறது.

**ISBN NUMBER: 978-93-91115-78-4**

**கைகேயி**

கைகேயி கேகய நாட்டு மன்னர் அஸ்வபதியின் மகளும், தசரத மன்னனின் மனைவிகளுள் ஒருவரும் பரதனின் தாயும் ஆவார். கேகய நாட்டு இளவரசி என்பதால் கைகேயி என அழைக்கப்பட்டார். இவரின் இயற்பெயர் சரஸ்வதி என்பதாகும். வீரமும் விவேகமும் கொண்ட பேரழகி. வேதங்களிலும் கலைகளிலும் அபார தேர்ச்சி உள்ளவர். ஒரு முறை சம்பாசுரன் என்ற அசுரனுடன் தசரதன் போர் புரிய செல்லும்போது, மன்னனின் தேருக்கு சாரதியாக சென்றாள். போர் உச்சகட்டத்தை அடைந்த தேரின் அச்சு முறிந்தது. அச்சமயம் கணவன் தசரதன் உயிர் காக்கும் பொருட்டும், போர் தடைபெறாமல் நடைபெறுவதன் பொருட்டும் தனது கட்டைவிரலைத் தேரின் அச்சாணியாக்கினார். இவரின் அறிவையும், துணிச்சலையும், பதி பக்தியையும் கண்டு வியந்த மன்னன் கைகேயிக்கு அவள் கேட்கும் வரங்கள் இரண்டு தருவதாக வாக்களித்தார்.

ஒருநாள் கைகேயி அந்தப்புரத்தில் உறங்கிக் கொண்டிருந்த போது, இவளின் பாதங்களைக் கூனி மெல்ல வருடி, ‘பெருந்துன்பம் வரவும் வருந்தாது உறங்கிக் கொண்டிருக்கிறாயே’ என்கிறாள். அதற்கு கைகேயி வீரமிக்க என் புதல்வர்கள் ஒற்றுமையுடன் நலமாக வாழ்கின்றனர். தன் மைந்தர்கள் அவரவர் ஏற்றுக் கொண்டிருக்கும் தொழில்களை அறநெறி தவறாது செய்து வருகின்றனர். இத்தகைய பண்புகள் மிக்க புதல்வர்களைப் பெற்ற எனக்கு என்ன துன்பம் வந்தது என்று கூனியை வினவுகிறாள்.

பிறகு இராமன் அரசனாக முடிச்சூட்டிக் கொள்ள போகிறான் என்ற செய்தியைக் கூனி கூறினாள். இதனை கேட்டவுடன் கைகேயி மிகுந்த மகிழ்ச்சியடைந்து, கூனிக்கு தான் அணிந்திருந்த இரத்தின மாலையை பரிசளிக்கிறாள். இம்மகிழ்ச்சி இராமன், பரதன், இலக்குமணன், சத்ருக்கனன் ஆகிய நான்கு பிள்ளைகளிடமும் வேறுபாடில்லாது இருந்துள்ளமையைக் காட்டுகிறது. இதனை,

**“மாற்றம் அஃது உரைசெய, மங்கை உள்ளமும்**
**ஆற்றல்சால் கோசலை அறிவும் ஒத்தவால்;**
**வேற்றுமை உற்றிலள் வீரன் தாதைபுக்கு**
**ஏற்றுஅவள் இருதயத்து இருக்க வேகொலாம்” (அயோ.காண்டம்: மந்தரை சூழ்ச்சிப் படலம்-62)**

என்ற அடிகள் வெளிப்படுத்துகிறது. இராமன் சீதையோடு அரியணையில் வீற்றிருக்க, உன் மகன் பரதன் வெறும் தரையில் நிற்பான். இராமனை அரசனாக்க நினைத்து, மன்னரும் பரதனைக் கேகய நாட்டிற்கு அனுப்பி விட்டார். அரச குடும்பத்தில் பிறந்து, தற்போது பட்டத்தரசியாக விளங்கும் நீ(கைகேயி) துன்பக் கடலில் விழப் போகிறாய். இப்போதாவது

ISBN NUMBER: 978-93-91115-78-4

நான் சொல்வதைக் கேள், என்றெல்லாம் கூனி கூறிக்கொண்டிருப்பதைக் கேட்கும் போதே, கைகேயிக்கு அவள் மீது மிகுந்த சினம் ஏற்பட்டு,

**"எனக்கு நல்லையும் அல்லைநீ; என்மகன் பரதன்**

**தனக்கு நல்லையும் அல்லைஎ; அத் தருமமே நோக்கின்**

**உனக்கு நல்லையும் அல்லை; வந்து ஊழ்வினை தூண்ட**

**மனக்கு நல்லன சொல்லினை மதியிலா மனத்தோய்" (அயோ.காண்டம்: மந்தரை சூழ்ச்சிப் படலம்-76)**

என்று கூறினாள். நீதி தவறாத இவ்வரசக் குலத்திற்கு குற்றம் உண்டாகும்படி பேசிக்கொண்டிருக்கிறாய். என் எதிரே நிற்காமல் போய்விடு என்று கைகேயி கூனியை ஏசினாள். பிறகு கூனி கைகேயின் காலில் விழுந்து, நீ கோபித்தாலும் உனக்கு நன்மைத் தரும் வழியைக் கூறாது போக மாட்டேன் என்று மேலும் பேசத் தொடங்குகிறாள்.

**கைகேயின் ஆளுமைப் பண்பு**

ஒருவருடைய உடை, நடை, தோற்றம், அன்பு, பொறாமை, ஊக்கம், அச்சம், இரக்கம், நன்றியுணர்வு, தந்திரம் போன்ற பல விதமான பண்புகள் ஆளுமையில் அடங்கும் என்று வாழ்வியல் களஞ்சியம் குறிப்பிடுகிறது. இவ்வாளுமைப் பண்பைக் கைகேயி கொண்டிருந்தாள். கூனி, கைகேயிடம் 'இராமன் பதவியேற்று அதிகாரம் அடைந்தவுடன் உன்னிடம் பழைய படியே நடந்துக் கொள்வான் என்பது உறுதியல்ல. பெரிய முனிவர்களும் பெருஞ்செல்வம் பெற்றால் மனம் மாறிடுவர். உன் உறவினர்கள் வறுமையோடு உன்னிடம் வரும்போது, அவர்களுக்குக் கொடுக்க பொருளில்லாத உனது நிலைமையைச் சற்று நினைத்துப் பார்'; என்று கூறுகிறாள். இச்சிந்தனை

**"சாதலின் இன்னாதது இல்லை இனிதுஅதுவும்**

**ஈதல் இயையாக் கடை" (குறள் 230)**

என்ற வள்ளுவரின் குறட்பாவில் காண முடிகிறது. அதனால் மன்னன் ஏற்கனவே குறிப்பிட்டிருந்த இரண்டு வரங்களில் ஒன்று பரதன் நாடாளவும், மற்றொன்று இராமன் காடேகவும் படி கேட்டு பயன்படுத்திக் கொள்ள கூனி ஆலோசனைக் கூறுகிறாள்.

இவ்வாறு ஆலோசனைக் கூறிய கூனியைக் கைகேயி அணைத்து மகிழ்ந்தாள். 'நீ சொன்ன வழி மன்னனிடம் வரங்களைக் கேட்டு வாங்குவேன். இல்லையென்றால் உயிர் துறப்பேன்' என்ற உறுதியோடு மன்னனை அனுகினாள். அச்சமயம் ஆபரணங்கள் களைந்து தனது தோற்றத்தை மாற்றிக் கொண்டு, தரையில் விழுந்து அழும்படி நடித்தாள். இந்நிலைமையைப் பார்த்த தசரதன் அவளைத் தூக்கி நடந்த விவரத்தைக் கேட்கிறான்.

ISBN NUMBER: 978-93-91115-78-4

அப்போது கைகேயி அழுதுகொண்டே என்னிடம் உங்களுக்குக் கருணை இருந்தால் முன்பு எனக்கு தருவதாக சொல்லியிருந்த வரங்களைத் தற்போது நிறைவேற்றுங்கள் என்கிறாள்.

தசரத மன்னரும் ஒப்புக்கொண்டு, நீ விரும்பிய வரத்தை இப்போதேத் தருகிறேன் என்றார். அதற்கு கைகேயி,

**"ஏய வரங்கள் இரண்டின், ஒன்றி னால்என்**

**சேய் உலகு ஆள்வது, சீதை கேள்வன் ஒன்றால்**

**போய்வனம் ஆள்வது எனப்பு கன்று நின்றாள்**

**தீயவை யாவை யினும் சிறந்த தீயாள்" (அயோ.காண்டம்; கைகேயி சூழ்வினைப்படலம் - 14)**

என்று மன்னரிடம் கூறினாள். இதைக் கேட்டதும் மன்னன் மயங்கி விழுந்தான். பின் மயக்கம் தெளிந்து இவ்வாறு கேட்டதற்குரியக் காரணத்தை அறிய முற்பட்டார். அதற்குக் கைகேயி 'வரம் கொடுத்தால் மகிழ்வேன்; கொடுக்கா விட்டால் இறந்துப் போவேன்' என்றாள். இதனால் செய்வதறியாது மன்னன் அவள் கேட்ட வரங்களை நிறைவேற்றுகிறார். அச்சமயம் இராமனை அழைத்து வரும்படி சொல்லிய கைகேயி,

**"ஆழிசூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள, நீ போய்த்**

**தாழ்இருஞ் சடைகள் தாங்கித், தாங்களும்; தவ மேற்கொண்டு**

**பு+ழிவெங்கானம் நண்ணிப், புண்ணியப் புனல்கள்; ஆடி,**

**ஏழ்ரண்டு ஆண்டின் வா என்று ஏவினான் அரசன்" (அயோ.காண்டம்: கைகேயின் சூழ்ச்சிப்பாடல் - 111)**

என்று கூறுகிறாள். இங்கு கைகேயின் துன்பம் நிறைந்த மனமும், உறுதியான நிலைப்பாடும் வெளிப்படுகிறது.

**சுமித்திரை**

தசரத மன்னனின் மனைவியர்களுள் சுமித்திரையும் ஒருவர். இலக்குவன், சத்துருக்கன் ஆகிய இருவரையும் ஈன்றெடுத்தத் தாய். இராமன் காடேகும் செய்தியறிந்து சுமித்திரை மனம் சோர்ந்து, அழுந்துத் தரையில் புரளுகிறாள். அவ்வாறு வருந்திய சிற்றன்னைச் சுமித்திரைக்கு இராமன் ஆறுதல் கூறுகிறான். அப்போது, பணிப்பெண்கள் கைகேயி தந்தனுப்பிய மரவுரியை இராமனிடம் கொடுத்தனர். அங்கிருந்த இலக்குவன், தானும் அண்ணனுடன் காட்டிற்குப் போக, தாய் சுமித்திரையிடம் அனுமதி கேட்டான்.

சுமித்திரை இலக்குவனிடம் இனி இராமனின் தம்பி என்ற உணர்வோடு செல்லாது, பணிவிடைச் செய்யும் அடிமையாய் இராமன், சீதையோடு செல். இராமன் திரும்பி வந்தால்

ISBN NUMBER: 978-93-91115-78-4

நீயும் வா; இல்லையென்றால் இராமனுக்கு முன்பு இறந்துப் போ, என்று கூறி மிகுந்த கண்ணீரோடு நின்றாள். இதனை.

**"…மகனே! இவன் பின்செல்; தம்பி**

**என்னும் படிஅன்று, அடியாரினில்ஏவல் செய்தி;**

**மன்னும் நகர்க்கே இவன் வந்திடின் வா; அது அன்றேல்**

**முன்னம் மடியென்றனள், வார்விழி சோர நின்றாள்" (அயோ.காண்டம்; நகர் நீங்கு படலம்-151)**

என்னும் அடிகள் தெளிவுபடுத்துகின்றன. இதனைப் புறநானூறு,

**"பிறப்பு ஓர் அன்ன உடன் வயிற்றுள்ளும்**

**சிறப்பின் பாலால், தாயும் மனம் திரியும்" (புறநானூறு 183 3-4)**

என்று குறிப்பிடுகிறது. இதன் படி இராமனின் சிறப்பு கருதி அவன் மீது வைத்திருக்கும் அன்பால் சுமித்திரை இவ்வாறு கூறுகிறாள். இராமன், இலக்குவன் ஆகிய இருவரும் தாயை வணங்கி விடை பெறும் தருணத்தில், இரண்டு கன்றுகளைப் பிரியப்போகும் தாய்ப் பசு போல துன்புற்றாள். இதனால் பேதம் பாராட்டாத சுமித்திரையின் தாயன்பு தெரிய வருகிறது.

***சீதை***

*மிதிலை நகர மன்;னன் சனகரின் மகள் சீதையாவாள். சீதைக்கு ஜானகி, மைதிலி, வைதேகி ஆகிய வேறுபெயர்கள் உண்டு. பொறுமையின் சிகரமாய் விளங்குபவள். சீதை மணப்பருவம் எய்தியவுடன் தந்தை சனகர் சிவனால் வழங்கப்பட்ட வில்லில் நாண் ஏற்றி வெற்றி பெறுபவருக்கு சீதையைத் திருமணம் செய்து வைப்பதாக சுயம்வரம் அறிவித்தார். இராஜகுமாரர்கள் பலர் சுயம் வரத்தில் கலந்துக் கொண்டு அசைக்கமுடியாத வில்லை, இராமன் நாணேற்றி சீதையை மணம் முடிக்கிறார்.*

**சொல்திறமை**

கைகேயின் சூழ்வினையால்; இராமன்; வனவாசம் செல்கிறார். அப்போது 'நான் காட்டிற்குச் செல்கிறேன், நீ வருந்தாமல் இங்கு இரு' என்ற இராமனின் சொற்களைக் கேட்ட *சீதை,*

**"நாய கன்வனம் நண்ணலுற்றான் என்றும்,**

**மேய மண்ணிழந் தானென்றும் 'விம்மலன்;**

**'நீ வருந்தலை; நீங்குவென் யான்' என்ற**

***தீய* வெஞ்சொல் செவிசுடத் தேம்புவாள்" (அயோ.காண்டம்; ந.நீ.படலம் - 226)**

**ISBN NUMBER: 978-93-91115-78-4**

என்று வருந்தினாள். இது கணவன் மீது சீதை வைத்திருந்த அன்பால் நேர்ந்த துன்பமாகும். துக்கம் பெருகிய சீதை, தனது கணவரிடம், தாய் கோசலைக்குத் தாங்கள் என்ன சமாதானம் கூறினீர்கள்? என்று கேள்வி தொடுத்தாள். அதற்கு இராமன், கணவருக்கு பணிவிடைச் செய்துகிடப்பது, மனைவியின் கடமை என்று கூறி தாயைச் சமாதானம் செய்ததாகக் கூறினார். அச்சமயம் சீதை, எனக்கும் தர்மம் அதுதான் என்று சாதுர்யமாக கூறி, இராமனுடன் காட்டிற்குச் செல்ல முடிவெடுத்தாள்.

இராமனுடன் வனம் சென்ற சீதை, இராவணனின் மாய மானைக் கண்டு, அழகில் மயங்குகிறாள். அதைப் பிடித்துத் தருமாறு இராமனிடம் கேட்க, இராமனும் மான் சென்ற வழியில் செல்கிறான். பின் இராவணனால் சீதை சிறைபிடிக்கப்பட்டு இலங்கைக் கொண்டு செல்லப்பட்டாள். விருப்பம் இல்லாத பெண்ணைத் தொட்டால் தலை வெடித்துச்சாவாய் என்று பிரமன் கொடுத்தச் சாபத்தை நினைந்து, இராவணன் சீதையைத் தொடாமல் அவளிருந்த குடிலைப் பெயர்த்தெடுத்து வான் வழியாகச் சென்றான். அதைப்பார்த்து முதலில் மயங்கிய சீதை, பின் விழித்தெழுந்து கதறினாள். பிறகு, அவள் சென்ற வழியை இராமன் அறியும் பொருட்டு, தன் ஆடையில் முடிந்து வைக்கப்பட்டிருந்த ஆபரணங்களை வழிமுழுதும் வீசிச் செல்கிறாள். அத்தகையத் துயரத்திலும் சீதையின் இச்சிந்தனைச் சிறப்பிற்குரியதாக விளங்குகிறது. சீதை தனக்கு நேர்ந்த இத்துன்ப மயமான நிலையிலும் இராமனை நினைந்து பொறுமைக் காத்திருந்தாள்.

**சீதையின் தவம்**

இலங்கையில் இராவணனால் சிறை வைக்கப்பட்டிருந்த சீதையைத் தேடி அனுமன் சென்றார். அப்போது அரக்கியர்களுக்கு நடுவில் இருந்த சீதையை அனுமன் கண்டு கொள்கிறார். அச்சமயம் 'சீதையைத் தருமம், சனகனின் நல்வினை, கற்பு என இவற்றில் எதுதான் இந்நாள் வரையிலும்; காத்து நின்றதோ' என்று எண்ணுகிறார். பின் சீதை தன் கணவனை நினைத்து தவம் செய்து கொண்டிருப்பதையும் அனுமன் கண்டு கொள்கிறார். இதனை,

**"பேண நோற்றது மனைப்பிறவி, பெண்மைபோல்**
**நாணம் நோற்று உயர்ந்தது, நங்கை தோன்றலால்;**
**மாண நோற்று ஈண்டிவள் இருந்தஆறு எலாம்**
**காண நோற் றிலன், அவன், கமலக் கண்களே" (சுந்தர காண்டம்; காட்சிப்படலம்-73)**

என்ற அடிகளில் கம்பர் காட்டியுள்ளார். இதில் நாணம் என்னும் குணம் தவம் செய்து உயர்ந்து நின்றது என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. நாணம் மகளிருக்குரிய பண்புகளும் ஒன்று. இது சீதையிடம் மேவியிருப்பது இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ISBN NUMBER: 978-93-91115-78-4

**சீதையின் சத்தியம்**

அசோகவனத்தில் சிறை வைக்கப்பட்டிருந்த சீதையைத் தேவமகளிர் சூழ்ந்து வர இராவணன் பார்க்கச் சென்றான். மானிட வாழ்வு கொண்டிருக்கும் இராமனை விடுத்து, மூன்று உலகங்களுக்கும் தலைவனான தன்னோடு வாழ வற்புறுத்தினான். கை கூப்பி, கீழே விழுந்து சீதையிடம் கெஞ்சினான். இராவணனின் இச்செயல் வள்ளுவரின்,

**"எனைத்துணையர் ஆயினும் என்னாம் தினைத்துணையும்**

**தேரான் பிறனில் புகல்" (குறள் 141)**

என்ற குறளை நினைவுப்படுத்துகிறது. இதில் அறிவின்றி அயலான் மனைவியை விரும்புபவன் எவ்வளவு பெரியவனாயினும் இழிந்தவனாகக் கருதப்படுவது அறியலாகிறது. இச்சொற்களை எல்லாம் கேட்ட சீதையின் செவிகள் தீப்பாய்ந்தது போன்று உணர்வெய்தியது.

சீதை இராவணனை அறிவற்றவனே நீ கூறியவையெல்லாம் இல்லறமுடைய நல்ல பெண்களுக்கு ஏற்புடையவை அல்ல. என் மனம் கல் போன்று உறுதியானது. கற்பு திண்மையானது. என் கணவன் இராமனின் அம்பு பதினான்கு உலகங்களையும் ஒரே சமயத்தில் அழிக்கும் ஆற்றலுடையது. அத்தகைய இராமனுக்கு நேர் நிற்க முடியாமல் வஞ்சனைச் செய்து என்னை கவர்ந்து வந்துள்ளாய். உயிர் பிழைக்க விரும்பினால் தன்னை இராமனிடம் கொண்டு போய் சேர்த்துவிடு, இராமனின் அம்பால், உனது நீண்ட வாழ்நாள், வலிமை, பெற்ற வரம் அனைத்தும் அழிந்து போகும். இவைகள் அனைத்தும் சத்தியமான வார்த்தைகள் என்று கூறுகிறாள். இதனை,

**"பெற்றுடை வாளும் நாளும்,**

**பிறந்துடை உரனும், பின்னும்**

**மற்றுடை எவையும், தந்த**

**மலர்அயன் முதலோர் வார்த்தை,**

**வில்தொடை இராமன் கோத்து**

**விடுதலும், விலக்குண்டு, எல்லாம்**

**இற்று இடைந்து இறுதல் மெய்யே" (சுந்தர காண்டம்; நிந்தனைப்படலம்-44)**

என்ற பாடலில் கம்பர் தெளிவுபடுத்தியுள்ளார். இதனால் சீதையின் மன உறுதியும், சத்திய வாக்கும் அறியலாகிறது.

**சீதையின் வருத்தம்**

மாயமாக வந்த மானை விரும்பி அதனைப் பிடித்து வர தலைவன் இராமனை அனுப்பினேன். மைத்துனன் இலக்குவனனையும் சினந்து இராமன் பின் போகச்

சொன்னேன். இம்மாதிரியாக தவறு செய்து அரக்கனான இராவணன் இடத்திலே வந்திருப்பதை நினைத்து வருந்தினாள். அசோகவனத்தில் சிறையிருந்தச் சீதை விருந்தினர் வந்தால் இராமன் விருந்தளிக்க முடியாமல் அடையும் துயரை,

**"அருந்து மெல்லடகு ஆரிட அருந்தும்? என்று அழுங்கும்;**

**விருந்து கண்டபோது என்னுறு மோ? என்று விம்மும்" (சுந்தர காண்டம்; காட்சிப்படலம்-15)**

என்ற கூறி வருத்தப்படுகிறாள். மேலும் பிறரின் பழிச்சொல்லிற்கு ஆளாகாமல் உயிர் துறப்பேன். இராமன் தன்னுடைய ஆற்றலால் இராவணன் கூட்டத்தை அழித்து தன்னை மீட்டுச்செல்லும் நாளில், நீ என்னுடன் இருக்கும் தகுதியற்றவள், என்று இராமன் சொல்லும் சமயத்தில், என் கற்பின் திறத்தை எப்படி நிரூபித்துக் காட்டப் போகிறேன் என்று வருந்தியது,

**"அற்புதன் அரக்கர்தம் வருக்கம் ஆசுஅற**

**வில்பணி கொண்டு, அரும் சிறையின் மீட்டநாள்,**

**'இல்புகத் தக்கலை' என்னின்; யானுடைக்**

**கற்பினை, எப்பரிசு இழைத்துக் காட்டுகேன்?" (சுந்தர காண்டம்; உருக்காட்டு படலம்-20)**

என்ற பாடலில் தெரிகிறது. இவ்வாறு சீதைத் தனக்குத் தானே பேசிக் கொண்டு இனி உயிர் வாழ்வதிலும் இறந்துப் போவது மேல் எனக் கருதி அங்கிருக்கும் குருக்கத்தி மரத்திடம் சென்றாள்.

**சீதையின் உறுதிப்பாடு**

சீதையைக் கண்ட அனுமன், தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு இராமனின் நிலைப்பாடுகளை விவரிக்கிறான். பிறகு அனுமன் விரைந்து வந்து 'என் தோளில் ஏறிக்கொள்க' என்று சீதையை வேண்டி நின்றான், இதை சீதை மறுத்துவிடுகிறாள். அதற்கு பல காரணங்களையும் உரைக்கிறாள். இராமனின் வில்லாற்றலை இலங்கை முழுதும் அரக்கர்களின் எலும்பு குவியலால் காட்சியளிக்க வேண்டும் அவ்வாறு நிகழாமல் உன்னுடன் வந்தால், எனது நற்குடிப் பிறப்பு, ஒழுக்கம், நீங்காத கற்பு ஆகியவற்றை எவ்வாறு உறுதிபடுத்திக் காட்டுவேன் என்கிறாள். இதனை,

**"பொற் பிறங்கல் இலங்கை, பொருந்தலர்**

**என்பு மால் வரை ஆக்கியது இல்லெனின்,**

**இற்பி றப்பும், ஒழுக்கும், இழுக்கமும் ,**

**கற்பும், யான்பிறர்க்க எங்ஙனம் காட்டுகேன்?" (சுந்தர கா.; சூளாமணிப் படலம்-17)**

**ISBN NUMBER: 978-93-91115-78-4**

என்ற அடிகளில் கம்பர் சுட்டிகாட்டியுள்ளார். அனுமன் ஐம்பொறிகளையும் அடக்கியவனாக இருந்தாலும் அவனும் ஒரு ஆண்மகன். உன் மேனியைத் தீண்டி வருவது எனது பெண்மைக்கு உகந்ததல்ல என்று கூறி அனுமனை இராமனிடம் திரும்பிச் செல்லச் செய்கிறாள்.

நான் உயிரோடு இருப்பது ஒரு மாதம் மட்டுமே, அதற்குள் இராமபிரான் தன்னை இவ்விடத்திலிருந்து மீட்டுச் செல்ல வில்லை யென்றால் உயிர் துறப்பேன். இது இராமன் மீது ஆணை. இராமனின் மனைவியாக நான் இல்லாவிட்டாலும், ஒரு பெண்ணுக்கு நேர்ந்த துன்பத்தை நீக்கும் கருணையுடன், வீரத்தைக் காத்தும் கொள்ள வேண்டும் என்று நான் வேண்டியதை இராமனிடம் சொல்லச் சொன்னாள். இலங்கையிலே இருந்து நான் இறந்துபோனாலும் மீண்டும் மறுபிறவி எடுத்து இராமபிரானையே மணம் முடிக்கும் வரத்தைத் தனக்கு தருமாறு கூறி தன்னிடம் இருந்த சூளாமணியைத் தந்தனுப்பினாள். இதனால் இராமன் ஒருவனையே நினைத்திருக்கும் சீதையின் உறுதிப்பாடு தெரியவருகிறது.

**கற்புத் தீ**

கற்பு மகளிரின் சிறந்த இல்லறப் பண்புகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. கற்பு என்பது கணவனிலும் தெய்வம் வேறில்லையென எண்ணிக் கலங்காது அவனை வழிபடுவதே என அபிதான சிந்தாமணியில்(ப.383) கூறப்பட்டுள்ளது. கற்பின் தன்மையை "முல்லை சான்ற கற்பு"(சிறு.30), "மாசு இல் கற்பு"(நற்.15;7), "கடவுட் கற்பு", "நகர் அடங்கிய கற்பு" (குறு.252;4, 338;7), "திருநகர் அடங்கிய மாசு இல் கற்பு", "உவர் நீங்கு கற்பு" (அகம்.114;13,136;19), "நிலைஇய கற்பு" (கலி.2;13), "மறுஇல் கற்பு"(திரு.6), "மறுஅறு கற்பு" (பரி.5;46), "செயிர் தீர் கற்பு", "பல் மாண் கற்பு", "நாண் அலது இல்லாக் கற்பு"(புறம்.3;6, 163;2, 196l;13) என்று சங்க காலப் பாடல்கள் குறிப்பிட்டுள்ளன. சீதை கற்பில் சிறந்திருப்பதைக் கம்பர் இராமாயணத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இராவணனை இராமன் கொன்று வீழ்த்திய பிறகு, வீடணனிடம் சீதையை அழைத்து வர இராமன் கட்டளையிட்டான். சீதை விமானத்தில் போர்க்களக் காட்சிகளைப் பார்த்து பெருமிதம் கொள்கிறாள். இராமனைப் பார்த்தவுடன் பிரிந்து சென்ற உயிர் மீண்டும் வந்தது போல் மகிழ்வுற்றாள். கண்ணீருடன் கலங்கிய சீதை இராமனை வணங்கி நின்றாள். ஆனால் இராமன் சீதையைக் கோபத்தோடு பார்த்தான். இராவணனின் இலங்கையில் நெடுங்காலம் தங்கியிருந்ததால், உன்னுடைய ஒழுக்கம் தவறவும், சாகாமல் இப்போது இங்கு வந்திருக்கிறாய். உன்னைச் சிறை மீட்கும் பொருட்டு இப்போரில் நான் ஈடுபடவில்லை. தன் மனைவியைக் கவர்ந்து சென்றானைக் அழிக்கவில்லை எனில் பழி ஏற்படுமே என்றெண்ணி இராவணனைக் கொன்றேன். பெண்மையின் பெருமை, உயர் குடிப்பிறப்பு, கற்பு, ஒழுக்கம்,

ISBN NUMBER: 978-93-91115-78-4

ஆகியவையும் கணவனை கண்கண்ட தெய்வமாகப் போற்றும் பெண்களின் தெளிவு, சிறப்பு, உண்மை போன்றவையும் உன்னால் அழிந்துபோயின, ஆதலால் 'நீ இறந்துவிடு, இல்லையென்றால் உனக்கேற்ற இடத்திற்கு சென்றுவிடு' என்றான் இராமன். இக்கொடிய சொற்களைக் கேட்டதும் சீதை, வெந்த புண்ணில் வேல்பாய்ந்தது போல் துடித்து கண்ணீர் மழை சிந்தி நின்றாள். அனுமன் தன்னைச் சந்திக்க வந்தபோது என்னுடைய இறப்பைத் தவிர வேறு வழி எனக்கில்லை எனக் கூறியதை நினைவுப்படுத்தினாள். இலக்குவனை அழைத்து தீ வளர்க்குமாறு செய்தாள். சீதை அத்தீயின் அருகில் சென்று தீயை வலம் வந்தாள்.

'நான் மனத்தாலோ, சொல்லாலோ, செயலாலோ களங்கம் உடையவள் என்றால் தீச் செல்வனே, என்னைச் சினத்தோடு சுட்டெரிப்பாயாக' என்றாள். பின் தன் கணவனை வணங்கி தீயில் புகுந்தாள். சீதையின் கற்புத்தீயால் அக்கினித்தேவன் சீதையைத் தன் கைகளில் சுமந்தவாறு வெளிவந்தான். சீதையின் உடம்பில் இருந்த வியர்வைத்துளிகள், அவள் சூடியிருந்த மலர்கள் அனைத்தும் தீயினால் சிதையாது இருந்தது. சீதையின் கற்பு திறத்தை,

**"நீந் தரும் புனலிடை நிவந்த தாமரை**

**ஏய்ந்ததன் கோயிலே எய்து வாள்எனப்**

**பாய்ந்தனள்; பாய்தலும் பாலின் பஞ்சுஎனத்**

**தீந்ததுஅவ் எரி, அவன் கற்புத் தீயினால்" (யுத்த காண்டம்; மீட்சிப்படலம்-85)**

என்ற பாடலில் கம்பர் சிறப்பித்துள்ளார். அக்கினித்தேவன் இராமனிடம் சீதையின் கற்பாகிய நெருப்பு என்னை சுட்டுவிட்டது. பிறகும் சீதையின் கற்பைச் சந்தேகப் படுதல் வேண்டாம் என்று சொன்னான். மனித அவதாரத்தில் இருக்கும் இராமன், தான் உண்டாக்கிய மாயையால் தானே மாட்டிக் கொண்டதை அறிந்து சீதையை ஏற்றுக்கொண்டான்.

**சவரி மாதா**

சவரி என்பவர் மதங்க முனிவர் மலையிலுள்ள ஆசிரமத்தில் இராமனை நினைத்து நெடுங்காலமாக தவம் செய்து கொண்டிருக்கும் மூதாட்டி. இவரை சந்தித்து இராமன் நலம் விசாரித்த போது ஆனந்தக்கண்ணீர் பெருகியது. காய், கனிகள் என தான் விரும்பிச் சேர்த்து வைத்திருந்தவைகளை இராமன், இலக்குவணனுக்குக் கொண்டு வந்து கொடுத்ததை,

**"வேண்டிய கொணர்ந்து நல்கி**

**விருந்து செய்து இருந்த காலை" (ஆரணிய காண்டம்; சவரி நீங்கு படலம்-3)**

**ISBN NUMBER: 978-93-91115-78-4**

என்று கம்பர் குறிப்பிட்டுள்ளார். அச்சமயம் இராமன் சவரியை அன்போடு பார்த்து ‘தாயே’ உன் உபசரிப்பு எங்களுடைய வழிநடைத் துன்பத்தைப் போக்கியது என்று கனிவோடு கூறினார். இதனை,

**“அருந்தவத்து அரசி தன்னை**

**அன்புற நோக்கி எங்கள்**

**வருத்துற துயரம் தீர்த்தாய்**

**அம்மனை வாழி என்றான்” (ஆரணிய காண்டம்; சவரி நீங்கு படலம்-5)**

என்ற அடிகளால் உணர முடிகிறது. சவரி, சுக்கிரீவன் வாழும் இரலை மலைக்கு செல்லும் வழியைக் கூறினார். பிறகு தன் மெய்வருத்திச் செய்த தவத்தின் பயனாக, முக்தி உலகத்தினல் இனிமையாகச் சேர்ந்தார். சவரி மாதாவின் தவச்சிறப்பு, விருந்தோம்பல், முக்தியடைந்த சிறப்பு ஆகியவை போற்றுதலுக்குரியதாகிறது.

**அனுசூயா**

சித்திரக் கூட மலையிலிருந்து இராமன், சீதை, இலக்குமணன் ஆகிய மூவரும் தண்டகாரண்யம் செல்கிறார்கள். அங்கு அவர்களுக்கு முதலில் தெரிவது அத்திரி முனிவரின் ஆசிரமம். அம்முனிவரின் மனைவி அனுசூயா தேவியாவார். இவர்கள் வயது முதிர்ந்த இணையராவர். தங்களை நாடி வந்திருந்த இராமன் உட்பட்ட மூவருக்கும் நல்ல உபசாரங்கள் செய்தனர். அனுசூயா தேவி, சீதையைத் தன் மகள் போன்று பேணினார். சீதை மீது மிகுந்த அன்பைப் பொழிந்தார். இதனால் சீதை, அயோத்தி, மிதிலையில் பெறாத அளவு கடந்த அன்பை அனுசூயா தேவியிடமிருந்து பெற்றதை உணர்ந்தாள். அனுசூயா தேவி சீதையிடம், என் அன்பு மகள் போல் நினைத்து நான் தரும் பொருள்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறி பல பரிசுகளைத் தந்தார். இதனால் அனுசூயா தேவியின் பரிவு, நிறைந்த பாசம் வெளிப்படுகிறது.

**தாரை**

வாலியின் மனைவி தாரையாவாள். வாலி இறந்த பிறகு கிட்கிந்தைக்கு சுக்கிரீவன் தலைவனாகிறான். தலைமைப் பொறுப்பை ஏற்ற சுக்ரீவன் தாரையைத் தாய் என்றும், தமையன் வாலி உரைத்த சீரிய அறிவுரையைத் தந்தையின் சொற்கள் என்றும் கொண்டு நல்லாட்சி புரிந்து வந்தான். இச்செய்தி,

**“தாரையை வணங்கி அன்னாள் தாய்எனத்**

**தந்தை முந்தைச் சீரியன் சொல்வே என்னச்**

**செவ்விதின் அரசு செய்தான்” (கிட்கிந்தா காண்டம்; அரசியற் படலம்-371)**

என்பதின் மூலம் தெரிய வருகிறது.

இராமனிடம் சுக்கிரீவன் சொன்னபடி, தன்னைச் சந்திக்க வாராமல் இருந்த நிலையில், இராமன் இலக்குவனனைச் சுக்கிரீவனிடம் தூது அனுப்புகிறார். அப்போது இலக்குவன் மிகுந்த சினத்தோடு சுக்கிரீவனைப் பார்க்க செல்கிறான். அச்சினம் கண்டு வானரர்கள் அஞ்சி ஓடினார்கள். அங்கதன் இலக்குவனின் முகக் குறிப்பைக் கண்டுணர்ந்து அதனைச் சுக்கிரீவனிடம் தெரிவிக்கச் செல்கிறான். அங்கு சுக்கிரீவன் மது அருந்தி மயங்கி கிடந்த நிலைக்கண்டு, அங்கதன் அனுமனோடு தாய் தாரையிடம் செல்கிறான்.

இலக்குவனின் கோபம் கிட்கிந்தையைப் பொலிவிழக்கச் செய்தது. அச்சமயம் அனுமன் தாயாகியத் தாரையை அனுப்பி இலக்குவனைச் சமாதானம் செய்ய ஆலோசித்தார். அதன்படி தாரை, தனது தோழியரோடு சென்று இலக்குவனனை வழி மறித்து நின்றாள். இலக்குவன் தன் மைந்தனுக்கு ஏற்ற வயதுடையவன் என்பதனால், தாரை தாய்மை உணர்வோடு உரையாடுகிறாள். உன்னுடைய வருகையால் கிட்கிந்தை மிக பேறுடையதாயிற்று, இம்மையில் நல்வாழ்வும், மறுமையில் நற்கதியும் உண்டானது என தாரை இலக்குவனிடம் குறிப்பிட்டாள். உன்னுடைய சினம் கொண்ட தோற்றத்தைக் கண்டு வானர வீரர்கள் அச்சம் கொண்டு நடுங்குகின்றனர். ஆதலால் 'நின் மனக் கருத்தைச் சொல்வாயாக' என்று கேட்டாள்.

இச்சொற்களைக் கேட்ட இலக்குவன் தலை உயர்த்தித் தாரையைப் பார்த்த அளவில் அவனுக்கு தன் தாயின் நினைவு வருகிறது. இதனை,

**"ஏர்குலாம் முகத்தி னாளை**

**இறைமுகம் எடுத்து நோக்கித்**

**தார்குலாம் அலங்கல் மார்பன்**

**தாயரை நினைந்து நைந்தான்" (கிட்கிந்தா காண்டம்; கிட்கிந்தா படலம்-50)**

என்ற அடிகள் குறிப்பிடுகின்றன. தாரையைக் கண்ட இலக்குமணனுக்கு, அவள் அடைந்த துன்பம் நினைவுக்கு வருகிறது. தன் தாயாரும் இக்கோலத்தில் தான் இருப்பார்கள் என்று எண்ணி வருத்தமடைகிறான். பின்பு சுக்கிரீவன் குறித்து தாரையிடம் வினவினான்.

சுக்கிரீவன் தற்போது சுகத்தில் ஆழ்ந்து, அறிவில் திரிந்து காணப்பட்டாலும், வெவ்வேறு இடங்களில் உள்ள வானர வீரர்களை அழைத்து வர தூது அனுப்பியுள்ளான். சிறியவர்கள் தங்களது செய்கையால் சிறுமையாக நடந்துக் கொண்டாலும், பெரியவர்கள் அவர்களைப் போல் நடத்தல் ஏற்புடையதாக இல்லை என்று தாரை பதில் கூறுகிறாள். இக்கருத்து,

**"அறிவினுள் எல்லாம் தலையென்ப தீய**

**செறுவார்க்கும் செய்யா விடல்" (திருக்குறள்-203)**

**ISBN NUMBER: 978-93-91115-78-4**

என்ற குறளில் வெளிப்பட்டிருப்பதும் ஏற்புடையதாகிறது. அதனால் தாரை இலக்குவனிடம் உன் ‘சினத்தைத் தணித்துக் கொள்’ என்றதும் சினம் தணிந்தான். தாரையின் இவ்வார்த்தைகள் ஒரு தாயின் கனிவு நிறைந்த வார்த்தைகள் போன்று இருந்ததால் மிகுந்த சினம் கொண்டிருந்த இலக்குவன் அமைதியடைந்த இச்செயல் தாய்மையை மதித்துப் போற்றுவதாக அமைந்துள்ளது.

**திரிசடை**

திரிசடை அன்பு வடிவானவள், தாயைவிட இனியவள் என்று கம்பரால் குறிப்பிடப்பட்டுள்ள பெருமைக்குரியவள். இராவணனால் அசோகவனத்தில் சிறை வைக்கப்பட்டிருந்த சீதையைச் சுற்றியிருந்த அரக்கியர்களில் தலைமையானவள். கம்பர் திரிசடையை “இருந்தனள் திரிசடை என்னும் இன் சொலில் திருந்தினாள்” என்று குறிப்பிட்டிருக்கிறார். சிறையிருந்த சீதைக்குப் பெருந்துணையாக இருந்தவள்.

‘திரிசடை’ என்றால் நம்மைப் பின்னிப் பிணைத்திருக்கும் முக்குற்றங்களையும் நீக்கியவள் என்பது பொருள். இதற்கு காமம், வெகுளி, மயக்கம் எனும் முக்குற்றங்களும் இல்லாதவள் திரிசடை’ என கிருபானந்த வாரியார் சுவாமிகள் விளக்கம் (DOTcom@ DINAKARAN.COM (EDITOR)sep23.2019) சொல்கிறார். ஒருவர் தனது நிறை குறைகளைத் தாயிடம் மட்டுமே வெளிப்படையாக பகிர்ந்து கொள்ள முடியும். அவ்வகையில் சீதைத் தன் அனுபவங்கள், எண்ணங்கள் அனைத்தையும் திரிசடையிடம்; பகிர்ந்து கொள்கிறாள். தாயென்றால், திரிசடை சீதைக்கு காவலாக நியமிக்கப்பட்டவள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். சீதை திரிசடையிடம், நன்னிமித்தத்தின் அடையாளமாய் தனது இடக்கண் துடித்தது, குறித்து உரையாடிக் கொண்டிருந்தாள். முன்பொரு முறை இராமன், இலக்குவன், விசுவாமித்திரர் மூன்று பேரும் தன் அரண்மனை வந்த நாளில் இடக்கண் துடித்ததைச் சுட்டிக்காட்டினாள். பெண்ணுக்கு இடக்கண்ணும், ஆணுக்கு வலக்கண்ணும் துடிப்பது நன்மைக்கான அறிகுறிகளாகும். நன்நிமித்தம் குறித்து குறிப்பிட்ட சீதைக்கு தீய நிமித்தம் குறித்த நினைவும் வருகிறது. அதையும் திரிசடையிடம் பகிர்ந்துக் கொள்கிறாள்.

இதற்கெல்லாம் ஆறுதல் மொழியாக திரிசடை உன் கணவரான இராமனை விரைவில் அடையப் போகிறாய். உன்னுடைய முகத்திலும் மிகுந்த ஒளி தோன்றுகிறது. காதில் ஒரு பொன் வண்டு இனிமையாக ஊதிச் செல்கிறது. ஆகையால் ஏதோ ஒரு மகிழ்ச்சியான செய்தி உன்னை நாடி வந்துக் கொண்டிருக்கிறது என்ற நம்பிக்கைA+ட்டும் வார்த்தைகளைத் திரிசடை கூறினாள். மேலும் இராவணன், தன் சுற்றத்தாருடன் கழுதை, பேய் G+ட்டப்பட்ட தேரில் ஏறி, தென்திசை நோக்கிச் சென்றான் என்ற கனவு காட்சியையும் குறிப்பிட்டாள். இதனை,

**"எண்ணெய் பொன்முடி தொறும் இழுகி, ஈறிலாத்**

**திண் நெடுங் கழுதை பேய் G+ண்ட தேரின் மேல்,**

**அண்ணல் அவ் இராவணன் அரத்தம், ஆடையன்**

**நண்ணினன், தென்புலம் - நவையில் கற்பினாய்" (சுந்தர காண்டம்; காட். படலம்-40)**

என்ற அடிகள் குறிப்பிடுகின்றது. இது தாய் பிள்ளைக்கு கூறும் ஆறுதல் மொழியாக இருப்பதை அறிய முடிகிறது.

சீதை களம் காண் படலத்தில் அரக்கியர்கள் சீதையை தெய்வீக விமானத்தில் ஏற்றிக் கொண்டு போர்க்களம் பார்க்கச் சென்றனர். அங்கு இராமன், இலட்சுமணன் விழுந்து கிடப்பதைப் பார்த்து இறந்துவிட்டனர் என எண்ணி, தானும் இறந்து விட முற்படுகிறாள். அச்சமயத்தில் திரிசடை 'இக்காட்சி அரக்கர்களின் மயாசாலம். மங்கல நாண் இழந்த ஒரு பெண்ணை இத்தெய்வீக விமானம் தாங்கிச் செல்லாது'. இராமன் உயிருடன் இருப்பது நிச்சயம் அதனால் துன்பப்பட்டு வருந்தாதே என்று ஆறுதல் கூறுகிறாள். இவ்வார்த்தைகளைக் கேட்ட சீதையின் மனம் தெளிவடைந்தது. இதனால் திரிசடையின் தாய்மைப் பண்பு மற்றும் ஆறுதல் மொழி குறித்து அறியப்படுகின்றது.

**மண்டோதரி**

மயன் என்னும் தேவதச்சனின் மகள் மண்டோதரி. இவள் பேரழகும் நல்ல செல்வ வளமும் நிறைந்தவள். சிறந்த சிவ பக்தை. இலங்கையை அழகு நிறைந்த நகரமாக உருவாக்க நினைத்து, இராவணனன் மயனிடம் செல்கிறான். அப்போது அழகும், அடக்கமும் நிறைந்திருந்த மண்டோதரியைக் கண்டு மனம் விரும்பி, மயனின் சம்மதத்தோடு முறையாகத் திருமணம் செய்துக் கொள்கிறான். இராவணனனுக்கு சரிநிகர் சமமாக விளங்கியவள் இம்மாதரசி. ஒழுக்கம், கற்பு ஆகியவற்றில் சிறந்து விளங்கியவள். சீதையைத் தன்னுடைய கணவன் சிறையெடுத்து வந்தான் என்ற செய்தியறிந்து மண்டோதரி மிகுந்த துயரமுற்றாள். கணவனிடம் நீங்கள் செய்தது அறச்செயலல்ல, சீதையை இராமனிடம் மீண்டும் கொண்டு சென்று விடும்படி பல வழிகளில் அறிவுறுத்தினாள். ஆனால் இவளின் சொற்களைக் கணவன் சற்றும் மனதில் எண்ணாமல் போனான். அறவழியில் வாழ்ந்து கொண்டிருந்த இவள் தன் கணவனின் தவறான செயல்களினால் பெற்ற பிள்ளைகளை ஒருவர் பின் ஒருவராக இழந்து துயருற்றாள்.

இராவணனன் செய்த தவறை அவன் உணர வேண்டும் என்பதற்காக அங்கதன் பிடியில் மண்டோதரி தானாக சிக்கி வருத்தமுற்ற மேன்மைத் தன்மையுடையவள். இறுதியில் போர்க்களத்தில் இறந்து கிடந்த தன் கணவனைப் பார்த்து புலம்புகிறாள். தன் கணவரின் மரணத்திற்கு இராமனின் வில்லும், வீரமும் மட்டும் காரணமல்ல. சீதையின் கற்பும்,

ISBN NUMBER: 978-93-91115-78-4

பேரழகும், சூர்ப்பணகை இழந்த மூக்கும், இராவணனன் சீதை மேல் கொண்ட காமமும், தசரதன் இராமனைக் காட்டிற்கு அனுப்பியதும் ஆக அனைத்தும் சேர்ந்து இராவணனைக் கொன்று விட்டது என்று கூறி அழுதாள். இது,

**“காந்தையருக்கு அணியனைய சானகியார் பேரழகும், அவர்தம் கற்பும் ஏந்து**

**புயத்து இராவணனார் காதலும் அச்சூர்ப்பனகை இழந்த மூக்கும்,**

**வேந்தர்பிரான் தயரதனார், பணிதன்னால் வெங்கானில் விரதம் புண்டு**

**போந்ததுவும், கடைமுறையே புரந்தரனார் பெருந்தவமாய்ப் போயிற்று அம்மா”**

**(யுத்த காண்டம்; இராவணன் வதைப்படலம்-241)**

என்ற கம்பர் அடிகளால் தெரிய வருகிறது. இதனால் மண்டோதரியின் அழகு, திறன், சோகம் ஆகியவை வெளிப்படுகிறது.

**அகலிகை**

கௌதம முனிவரின் மனைவி அகலிகையாவாள். தன் கணவரின் சாபத்தால் கல்லாய் மாறி, பிறகு இராமனின் பாதம் பட்டு மோட்சமடைந்தவள். விசுவாமித்திர, முனிவரின் யாகத்தைக் குறைவில்லாமல் செய்து முடித்த இராமன், இலக்குவன், விசுவாமித்திர முனிவர் ஆகிய மூவரும் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றனர். சோணை ஆற்றை அடைந்து அங்கு ஒரு சோலையில் தங்கி, மறுநாள் காலை பயணத்தைத் தொடர்ந்த போது கங்கை ஆற்றைக் கண்டனர். இக்கங்கையில் வளம் பெற்ற மிதிலை நகரின் மதில் பக்கம் வந்தனர். அங்கு மேடாய் இருந்த ஒரு கருங்கல் மீது இராமனின் பாதம் பட்ட அளவில் அந்தக் கல் ஒரு பெண்ணாய் மாறியது. வியந்து பார்த்த இராமனுக்கு, விசுவாமித்திரர் அப்பெண்ணை ‘அகலிகை’ என்று அறிமுகப்படுத்தினார். அப்போது அவளின் வரலாற்றைக் கூறுமாறு இராமன் கேட்டார்.

**அகலிகையின் சாபம்**

சாபம் என்பதற்கு சபிப்பு, வட்டத்திற் பாதி, வில் கேடுசூழ்மொழி, விலங்கின் குட்டி, தவத்தோர் சபித்துக் கூறும் மொழி என்று தமிழ் சதுரகராதி(ப.443) பொருள் தந்துள்ளன. இவ்வகையில் அகலிகை தவத்தில் சிறந்திருந்த தன் கணவரால் சபிக்கப்படுகிறாள். இந்திரன் கௌதம முனிவரின் மனைவி அகலிகையின் அழகைக் கண்டு மயங்கினான். அவன் தனது ஆசையை நிறைவேற்றிக் கொள்ள சூழ்ச்சி ஒன்று செய்தான். முனிவர் ஆசிரமத்தை விட்டு வெளியேறுமாறு செய்து, அம்முனிவரின் உருவம் கொண்டு ஆசிரமம் அடைந்தான். அங்கு அகலிகையோடு கூடியிருக்கும் நேரத்தில் கௌதம முனிவர் உள்ளே வந்தார். நடந்ததையும், நடக்கயிருப்பதையும் நினைத்து அகலிகை நடுக்கமுற்றாள். பூனை வடிவில் வெளியேற முயன்ற இந்திரனின் உடம்பில் ஆயிரம் பெண் குறிகள் தோன்றுமாறு

**ISBN NUMBER: 978-93-91115-78-4**

முனிவர் சபித்தார். ஒழுக்கம் தவறிய அகலிகையைக் கல்லாக மாறச் சபித்தார். அகலிகை முனிவரிடம் நடந்தவைகளுக்கு மன்னிப்புக் கேட்டு சாப விமோசனம் கேட்டு அழுது கதறினாள். இராமனின் திருவடித் தூசுபடும்போது, கல்லுருவம் நீங்கிப் பெண்ணுருவம் அடைவாய் என்று முனிவர் சாப விமோசனம் அளித்தை,

**“அழல் தரும் கடவுள் அன்னாய்**
**முடிவிவதற்கு அருளு கென்னத்**
**தழைத்து வண்டு இமிரும் தண்தார்த்**
**தசரத ராமன் என்பான்**
**கழற்றுகள் கதுவ இந்தக்**
**கல்லுருத் தவிர்தி என்றான்” (பால காண்டம்; அகலிகைப்படலம்-79)**

என்ற அடிகள் விவரிக்கின்றது. இவ்வாறு விசுவாமித்திரர் நடந்தவைகளை இராமனுக்கு கூறினார். இராமன் அகலிகையைப் பார்த்து நடந்த துன்பங்களை நினைத்து வருந்தாது, பெருந்தவ முனிவர் கௌதமருக்கு பணிவிடைகள் செய்து அவரின் அருள் பெருமாறு ஆசி வழங்கினார். இதனால் அகலிகையின் ஏமாற்றம், இராமனால் அடைந்த சாபவிமோசனம் பற்றி தெரிந்துக் கொள்ள முடிகிறது.

**சுயம்பிரபை - தவச்சிறப்பு**

இராம தூதர்களாகிய வானரர்களால் சாப விமோசனம் பெற்றவள் சுயம்பிரபை. இவள் பதினாறு கலைகளும் நிரம்பப் பெற்று அழகிய முகமுடையவள். மயனின் அருந்தவத்தால் பிரம்மா அளித்த நகருக்குக் காவலாக இருப்பவள். அனுமன் உள்ளிட்ட வானரர்களத்; சீதையை தேடி தென்திசைச் சென்றபோது, ஒரு பாலைவனத்தின் வெப்பம் அவர்களை வருத்தியது. அப்போது சூடு தாங்காமல் அங்குள்ள பிலத்துவாரத்தில் நுழைந்தனர். அதன் வழி சென்றுகொண்டிருக்கும் போது, ஒளி பொருந்திய நகரத்தின் நடுவே ஒரு பெண் தவக்கோலத்தில் இருப்பதைக் கண்டு அவளை வினவினர். அவளே சுயம்பிரபை. முதலில் அவர்களைப் பார்த்து சினந்தவள். பின் இராமதூதர்கள் என்றவுடன் அவர்களை வரவேற்று மகிழ்ந்து விருந்தளிக்கிறாள். இவள் அளித்த விருந்தின் சிறப்பை,

**“அட்டி அமிழ்து அன்னசுவை யின் அடிசில் அன்போடு**
**ஊட்டிமனன் உள் குளிர இன்னுரை உரைத்தாள்” (கிட். காண்; பிலம். படலம்-55)**

என்ற அடிகளில் கம்பர் சிறப்பித்துள்ளார். பிறகு நடந்தவற்றை அனுமனிடம் விவரிக்கிறாள்.

**தவச்சிறப்பு**

மயன் என்னும் தேவதச்சன் சுயம்பிரபையையும் அவளது தோழியான தேவமாதையும் விரும்புகிறான். இதனை அறிந்த சுயம்பிரபை தன் தோழியை அழைத்துக்

ISBN NUMBER: 978-93-91115-78-4

கொண்டு உருட்ச பாதாளம் செல்கிறாள். உருட்ச பாதாளத்தில் தேவமாதைக் கண்ட இந்திரன், மயனை விடுத்துச் சென்றதால் அவளைக் கோபித்த, அதற்கான காரணத்தையும் கேட்கிறான். இதற்கு காரணம் சுயம்பிரபை என்று அறிந்ததும் அவளை அப்பாதாளத்தைக் காவல் காக்குமாறு சபித்தும், இச்சாபம் இராமதூதுவனின் வருகையால் நீங்கும் என்றும் கூறிச்செல்கிறான். இதனை சுயம்பிரபை "இந்நகரில் ஆடை, அணிகலன்கள், மலர்கள், சுவையான உணவு என அனைத்தும் இருந்தும் அவைகளை வெறுத்து இராம தூதர்களாகிய உங்களின் வருகையை நோக்கி நெடுங்காலமாக கடுந்தவம் இருந்தேன்" என்று தனது நிலையை, அனுமனிடம் விவரித்தாள். இவளின் தவ நிலையை,

**"உண்ணஉள பூசஉள சூடஉள ஒன்றோ**
**வண்ணமணி யாடையுள மற்றும்உள பெற்றேன்**
**அண்ணல்அவை விட்டு உமை யடைந்திடுதல் வேண்டி**
**எண்ணரிய பல்பகல் இருந்தவம் இழைத்தேன்" (கிட்.காண்டம்; பிலம். படலம்-63)**

என்ற அடிகளில் கம்பர் விவரித்துக் காட்டியுள்ளாH. இதனால் சுயம்பிரபையின் விருந்து, தவச்சிறப்பு ஆகிய சிறப்புகள் அறியலாகிறது.

**சூர்ப்பணகை**

இலங்கையின் அரசனான இராவணனின் தங்கை சூர்ப்பணகையாவாள்.

**"செம்பரா கம்படச் செறிந்த கூந்தலாள்**
**வெம்பரா குத்தனி விளைந்த மெய்யினாள்" (ஆரணிய காண்டம்; சூர்ப்பணகைப் படலம்-9)**

என்று கம்பர் சூர்ப்பணகையை அறிமுகப்படுத்தினார். பஞ்சவடியில் இலக்குவன் அமைத்து தந்த குடிலில் இராவணனும், சீதையும் இனிமையாக வாழ்ந்து வந்தனர். அச்சமயம் சூர்ப்பணகை அப்பகுதிக்கு வந்தாள். இராமனின் அழகைக் கண்டு மயங்கினாள். எவ்வகையிலாவது இராமனை அடைய வேண்டும் என்று முடிவெடுத்தாள். தனது ஆற்றலால், இலட்சுமி மந்திரம் உச்சரித்து, அரக்கி வடிவத்தை மாற்றிக் கொண்டாள். சிவப்பு நிறக் கூந்தலும், வெறிக்கொண்டு துள்ளும் மனமும் உடைய அரக்கி, சந்திர ஒளிக்கொண்ட முகத்தோடு அழகிய பெண்ணாக மாறினாள். இளம் மயில், அன்னம் போன்று நஞ்சுடைய வஞ்ச மகள் இராமன் இருக்கும் இடத்தை அடைந்தாள். இத்தகைய சூர்ப்பணகையின் வருகையை,

**"பஞ்சி யொளிர், விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்,**
**செஞ்செவிய கஞ்சநிமிர், சீறடி பெயர்ப்பாள்**
**அம்சொலிள மஞ்ஞையென, அன்னமென, மின்னும்**

ISBN NUMBER: 978-93-91115-78-4

**வஞ்சியென, நஞ்சமென, வஞ்சமகள் வந்தாள்" (ஆர.காண்டம்; சூர்ப்பணகைப் படலம்-31)**

என்று கம்பர் படைத்துக் காட்டியுள்ளார். திடீரென்று ஒலி வந்த திசையை இராமன் நோக்கியபோது அங்கு சூர்ப்பணகையைச் சந்தித்தார். இராமன் பாதங்களை வணங்கிய சூர்ப்பணகை, வெட்கப்பட்டு அவர் அருகில் சென்று நின்றாள். இராமன் விசாரித்த போது, மூன்று உலகங்களுக்கும் அரசனான இராவணனின் தங்கை 'கன்னிப் பெண்ணாகிய காமவல்லி' என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள். அரக்கக் குலத்தைச் சார்ந்த நீ இவ்வழகை எப்படி பெற்றாய் என்று இராமன் வினாவினார். அதற்கு அரக்கரோடு சேர்ந்து வாழ விரும்பாமல், அற நெறியில் வாழ விரும்பி தவம் செய்து தேவர்களால் இவ்வழகைப் பெற்றேன் என்று பொய்யுரைக்கிறாள்.

**காமம்**

சூர்ப்பணகை இராமரிடம், ஒழுக்கம் தவிர்த்த அரக்கர்களை விடுத்து, தேவர்கள், முனிவர்களோடு சேர்ந்து வாழ்ந்து வருகிறேன். உங்களால் எனக்கு ஒரு செயல் ஆக வேண்டியுள்ளது. உயர் குலத்தில் பிறந்த பெண்கள் தமது காம ஆசையைத் தாங்களாகவே தெரிவிக்கமாட்டார்கள். இருந்தாலும் காமமிகுதியால் அவதியுறும் என்னை காமத் துன்பத்திலிருந்து காத்தருள வேண்டும் என்றாள். இதனை,

**"ஏமுறும் உயிர்க்கு நோவேன்**
**என் செய்கேன் யாரும் இல்லேன்**
**காமன் என்று ஒருவன் செய்யும்**
**வன்மையைக் காத்திடு என்றாள்" (ஆர.காண்டம்; சூர்ப்பணகைப் படலம்-45)**

என்ற அடிகளால் அறியலாம். இதற்கு இராமன் உன் அண்ணன்மார்கள் திருமணம் முடித்துக் கொடுத்தால் ஏற்பேன் என்று விளையாட்டாக கூறியதற்கு, காந்தருவ மணம் குறித்த விளக்கத்தைக் கூறுகிறாள். நாம் திருமணம் செய்து கொள்வதை என் அண்ணன்மார்கள் நிச்சயம் ஏற்றுக்கொள்வார்கள் என்கிறாள்.

**பொறாமைக் குணம்**

பொறாமை என்றால் எரிச்சல், தரியாமை என்பது பொருளாகும். அவ்வகையில் சீதையைக் கண்ட சூர்ப்பணகைப் பொறாமைக் கொள்கிறாள். சூர்ப்பணகை இராமனுடன் பேசிக்கொண்டிருந்த வேளையில் சீதை குடிலுக்குள் இருந்து வெளியில் வந்தாள். அவள் சீதையின் அழகைப் பார்த்து வியந்து போனாள். இவள் இராமனின் மனைவியாக இருக்கமாட்டாள் என தானாக நினைத்துக் கொண்டு, சீதையை ஒரு அரக்கி, இவளின்

தோற்றம் உண்மையானதல்ல, ஊன் உண்டு வாழும் இவளைப் பார்த்தால் பயமாக இருக்கிறது. இங்கிருந்து அனுப்பி விடுங்கள் என்று வசைப்பாடுகிறாள்.

**தற்புகழ்ச்சி**

சீதையைப் பார்த்து அரக்கியே என்று அழைத்ததோடு மட்டுமல்லாமல் இருவரின் உரையாடலுக்கும் இடையுறு ஏற்பட்டது என்று சினம் கொள்கிறாள். அச்சமயம் இராமன், இனியும் அரக்கியாகிய சூர்ப்பணகையோடு பேசிக்கொண்டிருப்பது நல்லதல்ல என்றெண்ணி அவளை அங்கிருந்துச் செல்ல சொல்கிறார். அவள் அங்கிருந்துச் செல்லாது, சிவன், பிரமன், திருமால், மன்மதன், தேவர்கள் என அனைவரும் தன்னை அடைவதற்கு தவம் செய்கிறார்கள் என்று தன்னைத்தானே புகழ்ந்து கொள்கிறாள். இதனை,

**"பொற்புடை அரக்கி G+வில்**

**புனலினில் பொருப்பில் வாழும்**

**அற்புடை உள்ளத் தாரும்**

**அரங்கனும் அமரர் மற்றும்**

**எற்பெறத் தவம்செய் கின்றார்" (ஆர.காண்டம்; சூர்ப்பணகைப் படலம்-68)**

என்ற அடிகள் தெளிவுப்படுத்துகின்றன. இதனால் சூர்ப்பணகையின் பொறாமை மற்றும் தற்புகழ்ச்சி குணங்கள் பற்றி அறிய முடிகின்றது.

**தீய எண்ணங்கள்**

சூர்ப்பணகையோடு பேச விரும்பாத இராமன் சீதையோடு குடிலுக்குள் சென்றார். அவ்வாறு சென்றதை எண்ணி சூர்ப்பணகைத் தன் உயிரே போனது போல உணர்ந்தாள். 'இவன் தகுதியில்லாதவன், என்னிடம் ஆசையில்லாதவன், அந்தப்பெண்ணிடம்(சீதை) உறுதியான அன்புடையவன் என்றாலும், இவனைத் தழுவாவிட்டால் என் உயிரை இழப்பேன்' என்று எண்ணுகிறாள்.

ஊழித் தீயில் மாட்டிக் கொண்டதைப் போல, காமவெறியால் துன்பப்பட்டு இரவு முழுதும் தூங்காதிருந்தாள். கலக்கமுற்றாள். இறுதியில் இராமனுடன் இருக்கும் சீதையைக் கொண்டு வந்து மறைத்து வைப்பதால், இராமனை எளிதில் சேரலாம் என்று முடிவெடுத்தாள். மறுநாள் தனது எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ள சீதையிருக்கும் குடிலுக்குள் சென்ற போது அங்கு காவலாக இருந்த இலக்குவனால் தாக்கப்படுகிறாள். உடனே சீதையைத் தூக்கிக்கொண்டு பறக்க முயல்கிறாள். அப்போது இலக்குவன் சூர்ப்பணகையைக் கீழே தள்ளி தன்னுடைய வாளால் அவளது மூக்கு, காதுகள், மார்பகங்கள் என அனைத்தையும் ஒன்றன் பின் ஒன்றாக அறுத்தான். இதனை,

**"மூக்கும் காதும்வெம் முரண்முலைக்**

**கண்களும் முறையால்**

**போக்கிப் போக்கிய சினத்தோடும்**

**புரிகுழல் விட்டான்" (ஆர.காண்டம்; சூர்ப்பணகைப் படலம்-94:3-4)**

என்ற அடிகள் தெளிவுப்படுத்துகின்றன. சூர்ப்பணகையின் தீய எண்ணத்தால் இக்கொடுமை அவளுக்கு நடந்தது.

**புலம்பல்**

சூர்ப்பணகைத் தனது உறுப்புகள் அறுபட்டதால் கீழ் விழுந்து மூர்ச்சையுற்றாள். பிறகு தெளிவடைந்து தன் துன்பம் பொறுக்காமல் தன் குலத்து இராவணனன், கரன், தூடணன், இந்திரசித்து ஆகியோரை அழைத்துப் புலம்பிக் கொண்டிருந்தாள். என் மூக்கையறுத்த ஒரு மனிதன் அதற்கான தண்டனையைப் பெறாமல் இருக்கிறான். பின்பு இராமனிடம் தனது நிலைமையைக் கூறி நியாயம் கேட்கிறாள்.

**பெருமிதம்**

இலக்குவன் நடந்த உண்மையைக் கூறவே, இராமன் கொடிய அரக்கர் குலத்தை அழிப்பதற்காக நாங்கள் காட்டிற்கு வந்திருக்கிறோம். எங்களால் இறந்து போகாது, இக்காட்டை விட்டு வெகுதூரம் சென்று விடு என்கிறார். அப்போது சூர்ப்பணகை தன் அண்ணன் இராவனின் பெருமைகளைக் கூறி, நீங்கள் பிழைப்பது அரிது. என்னை திருமணம் செய்து கொண்டால் நடக்க இருக்கும் போரிலிருந்து உங்களைக் காப்பாற்றுகிறேன். சுவையான பழங்கள் மற்றும் விரும்பும் அனைத்தையும் தருவேன் என்கிறாள். மேலும் தன் சக்தியால், அறுபட்ட மூக்கை மீண்டும் வளர்த்து பழைய அழகைப் பெறுவேன் என்று கூறி பெருமிதம் கொள்கிறாள்.

இதற்கு பதிலளிக்கும் வகையில் இராமன் சூர்ப்பணகையிடம், தாடகையைக் கொன்ற அம்பு தன்னிடமுள்ளது. இழிந்த செயலை விட்டு இங்கிருந்து செல் என்கிறார். சூர்ப்பணகை இராமன் ஏற்றுக் கொள்ளா விடினும், இலக்குவனாவது தன்னை மனைவியாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றாள். இதனைக் கேட்ட இலக்குவன் அவளின் உயிரைப் பறிக்க முற்பட்டான். அச்சமயம் அவள் பயந்து போய், உங்களின் மனக்கருத்தை அறியவே இவ்வளவும் உங்களோடு கெஞ்சினேன் என்று கூறி, பகைமை உணர்வோடு அங்கிருந்துச் செல்கிறாள். இதனால் சூர்ப்பணகையின் காமம், பொறாமை, தற்புகழ்ச்சி, தீய எண்ணங்கள், புலம்பல், பெருமிதம் போன்ற பண்புகள் அதிகரிக்கின்றன.

**தாடகை**

இயக்கர் குலத்தில் நல்ல குணமுடைய சுகேது, தனக்கு மகப்பேறு இல்லாததால் வருத்தமுற்று, பின் பிரமனைத் துதித்து நெடுங்காலம் தவம் செய்து வந்தான். தவத்தின்

சிறப்பால் பிரமன், ஆயிரம் யானைகளின் வலிமை உடைய புதல்வி பிறப்பாள் என்று சுகேதுவிடம் கூறினார். அப்புதல்வியே தாடகை ஆவாள். சுகேது தனது இனத்தின் இயக்கர் தலைவன் சுந்தன் என்பனுக்குத் தாடகையை திருமணம் செய்து கொடுக்க இருவரும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர்.

மகிழ்ச்சி மிகுதியால் சுந்தன் அகத்திய முனிவரின் ஆசிரமத்து மீது மரங்களை வீசிச் சேதம் ஏற்படுத்தினான். இதனால் அகத்திய முனிவர் சினந்து பார்க்க அவரது விழித்தீயில் சுந்தன் சாம்பலாகிறான். கணவன் இறந்தது அறிந்து சுந்தனின் மனைவி தாடகை தன் புதல்வர்களாகிய மாரீசன், சுவாகு ஆகியாரோடு அகத்தியரை எதிர்க்க வருகிறாள். அகத்திய முனிவர் சினம் கொண்டு; தாடகை, மாரீசன், சுவாகு ஆகிய மூவரையும் அரக்கர்களாகும் படி சபிக்கிறார். தன் புதல்வர்கள் இருவரும் சுமாலி என்னும் அரக்கனைச் சார்ந்து சென்ற பிறகு, தாடகை தனிமையானாள்.

**தாடகையின் தோற்றம்**

பாவங்கள் அனைத்தும் ஒன்றாக சேர்ந்து பெண்ணுருக் கொண்டவளாக தாடகைத் தோற்றமளித்தாள். இவளின் தோற்றத்தை,

**“பெருவரை இரண் டொடும் பிறந்த நஞ்சொடும்**
**உருமுறழ் முழக் கொடும் ஊழித் தீயொடும்**
**இரு பிறை செறிந்தெழு கடல் உண்டாம் எனின்**
**வெரு வரு தோற்றத்தள் மேனி மானுமே” (பால காண்டம்; தாடகை வதை படலம்-39)**

என்று கம்பராமாயணப் பாடல் குறிப்பிடுகின்றது.

விசுவாமித்திரர் நடத்தும் வேள்வியின் பொருட்டு, இராமன், இலக்குவன், விசுவாமித்திரர் ஆகிய மூவரும் அங்க நாட்டை அடைந்தனர். அங்கு ஒரு நாள் தங்கி, மறுநாள் பயணம் தொடர்ந்த போது வழியில் பாலை நிலத்து வெப்பத்தால் துன்புற்றனர். அச்சமயம் முனிவர் உபதேசித்த ‘பலை-அதிபலை’ என்ற இரு மந்திரங்களை உச்சரிக்க இராம, இலக்குவனுக்குப் பாலை நிலம் குளிர் நிலமாக மாறியது. இந்நிலத்தின் கொடிய வெப்பத்திற்கானக் காரணத்தை முனிவர் வழி இராமன் அறிந்துக் கொள்கிறார்.

இராவணனின் ஏவலுக்கிணங்கத் தாடகை இப்பகுதியைக் காவல் செய்து வருகிறாள். அவள் மலை போன்ற உருவம் படைத்தவள். அவளால்தான், மருத நிலமாக இருந்த இப்பகுதி, வெப்பம் மிகுந்த பாலை நிலமாக மாறியது என்று முனிவர் கூறி முடிப்பதற்குள், இடிபோன்ற சிரிப்புடன் தாடகை அங்கு வந்தாள். தனது குகைப் போன்ற வாய்திறந்து ‘எனக்கு உணவாக இங்கு வந்தீர்களா?’ என்று வினவிக்கொண்டு தன்னிடம் உள்ள சூலாயுதத்தை அவர்கள் மீது எறிந்தாள்.

**ISBN NUMBER: 978-93-91115-78-4**

**அழிவு**

ஒரு பெண்ணைக் கொல்வது பாவம் எனக் கருதிய இராமனிடம் விசுவாமித்திரர் உயிர்களைத் தின்னும் இவள் பெண்தன்மைக் கொண்டவள் அல்ல என்றும், முன்பு 'கியாதி', 'குமதி' என்பவர்களை முறையே திருமாலும், இந்திரனும் கொன்றதை நினைவூட்டி, தாடகையை அழிக்கக் கூறினார். அப்போது தாடகை வீசிய சூலாயுதத்தை இரண்டு துண்டாக்கி, பிறகு விட்ட ஒர் அம்பு தாடகையின் மார்பைத் துளைத்தது. தாடகைத் தரையில் வீழ்ந்து உயிர் விட்டாள். இதனை,

**"பொன்னெடுங் குன்றம் அன்னான்**
**புகர்முகப் பகழி என்னும்**
**மன்னெடுங் கால வன்காற்று**
**அடித்தலும் இடித்து வானில்**
**கன்னெடு மாரி பெய்யக்**
**கடையுகத்து எழுந்த மேகம்**
**மின்னொடும் அசனி யோடும்**
**வீழ்வதே போல வீழ்ந்தாள்" (பால காண்டம்; தாடகை வதைப்படலம்-71)**

என்ற அடிகளால் அறிய முடிகிறது. இதனால் தாடகையின் தோற்றம், அரக்கத்தனம் வெளிப்படுகிறது.

**அயோமுகி**

அயோமுகி என்பவள் ஒரு அரக்கியாவாள். இலக்குவனின் அழகைக் கண்டு மயங்கியவள். சடாயுவின் இறுதிக்கடனை முடித்த இராமன், சீதையைத் தேடி இலக்குவனோடு பல மலைகள், ஆறுகள், காடுகள் இவற்றைக் கடந்து சென்றான். சூரியன் மறைந்ததால் அங்கிருந்த ஒரு சோலையின் பளிங்கு அறையில் தங்கினர். அப்போது, இராமனுக்கு மிகுந்த நீர் வேட்கை ஏற்பட்டதால் இலக்குவன் தண்ணீர் தேடி நெடுந்தூரம் சென்றான். நீர் இருக்கும் இடமே தெரியவில்லை. அச்சமயம் இரும்புப்போன்ற முகமுடைய அரக்கி அயோமுகி இலக்குவனைப் பார்த்தாள்.

மன்மதன் போன்ற அழகுடைய இலக்குவன் மீது ஆசை கொண்டாள். தன் ஆசையைத் தீர்க்குமாறு அவனைக் கேட்பேன். அவன் சம்மதிக்காவிட்டால், எனது குகைக்கு அவனைத் தூக்கிச் செல்வேன் என்று தனக்குத்தானே முடிவெடுக்கிறாள். விரைவாக தன் முன் வந்து நின்ற அயோமுகியைப் பார்த்து, இவள் ஒர் அரக்கி என்பதில் இலக்குவன் தெளிவடைந்தான்.

**ISBN NUMBER: 978-93-91115-78-4**

இலக்குவன் முன் நின்ற அயோமுகி, உன் மீது ஆசை கொண்டு வந்திருக்கிறேன். என் விருப்பத்தை நிறைவேற்றி தன்னை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டி நின்றாள். என் விருப்பத்திற்கிணங்கினால், தேடும் தண்ணீரை நான் கொண்டு வந்து தருகிறேன் என்றாள். இதைக்கேட்ட இலக்குவன் உன் காது, மூக்கு ஆகியவற்றை அறுப்பதற்;கு முன் சென்றுவிடு என எச்சரிக்கிறான். அப்போது, அயோமுகி முன் எண்ணியது போல் இலக்குவனை மயக்கமுறச் செய்து தூக்கிக்கொண்டு பறந்தாள். மயக்கம் தெளிந்த இலக்குவனால் அயோமுகியின் மூக்கு முதலிய உறுப்புகள் அறுக்கப்படுகின்றன. இதனால் அவள் அலறிப் புலம்பியதை,

**"பேர்ந்தான் நெடுமா யையினில் பிரியா**
**ஈர்ந்தான் அவள்நா சிபிடித்து இளையோன்**
**சோர்ந்தான் இடுபூ சல்செவித் துளையில்**
**சேர்ந்துஆர் தலுமே திருமால் தெருளா" (ஆர.காண்டம்; அயோமுகிப் படலம்-78)**

என்ற அடிகள் தெரிவிக்கின்றன. சூர்ப்பணகையைப் போன்ற அரக்கர் குலத்தைச் சார்ந்த அயோமுகி இலக்குவன் மீது காம ஆசைக்கொண்டு தனது உறுப்புகளை இழந்து வருத்தமுறும் செயல் இதனால் தெரிய வருகிறது.

**முடிவுரை**

திருவெண்ணெய்நல்லூரில் கம்பரால் அரங்கநாதர் முன்னிலையில் கம்பராமாயணம் அரங்கேற்றப்பட்டது. கம்பர் 'கவிச்சக்ரவர்த்தி கம்பர்' என்று அழைக்கும் பெருமைக்குறித்து அறியப்பட்டது. பதினாறு செல்வங்களுள் ஒரு செல்வமாகத் தாய் கருதப்படுகிறாள். இராமன் முடிசூடி வருவான் என்ற இன்ப செய்திக்காகக் காத்திருந்த கோசலை, மகன் தன்னைப் பிரிந்து காட்டிற்குச் செல்கிறான் என்ற செய்திக் கேட்டு மிகுந்த துயரடையும் தாயாக இருக்கிறாள். தன் பிள்ளையோடு மற்ற பிள்ளைகளின் மீதும் அன்பு கொண்டிருக்கும் கைகேயி, கூனியின் வார்த்தைகளால் மனம் மாறி இராமனைக் காட்டிற்கு அனுப்பும் வஞ்ச செயலுடையவளாக மாறுகிறாள். சுமித்திரை இராமன், இலக்குவன் ஆகிய இருவரும் தன்னைப் பிரிந்து காட்டிற்குச் செல்லும்போது, இரண்டு கன்றுகளைப் பிரியும் தாய்ப்பசு போல துன்புறுகிறாள். இதனால் அரசியர்களின் பண்புகள் குறித்து அறியப்பட்டது. சீதையின் சொல் திறமை, தவம், வருத்தம், உறுதிப்பாடு, கற்பு சிறப்பு ஆகியவைப் போற்றுதலுக்குரியதாக இருக்கிறது. சவரி மாதா மற்றும் அனுசூயா தேவி இருவரும் தவ வாழ்க்கை மேற்கொண்டு வாழ்ந்திருப்பதும், அவர்களிடம் தாய்ப்பாசம் மிகுந்திருப்பதும் தெரிய வருகிறது. தாரை, திரிசடை ஆகிய இருவரின் வார்த்தைகளும் தாயன்பு நிறைந்து, நம்பிக்கை ஊட்டுகிறது. மண்டோதரி தன் பிள்ளைகள், கணவன் ஆகியோரை இழந்து

**ISBN NUMBER: 978-93-91115-78-4**

துன்புறும் நிலை வெளிப்படுகிறது. ஆகலிகை இராமனாலும், சுயம்பிரபை அனுமனாலும் சாபம் அடைந்து, சாபவிமோசனம் பெற்று மேன்மை அடைந்த நிலை சிறப்பிற்குரியது. சூர்ப்பணகை, தாடகை, அயோமுகி ஆகிய மூன்று அரக்கியர்களும் காமம், பொறாமை, வஞ்சகம் போன்ற அரக்கக் குணத்தோடு இருந்துள்ளனர். கம்பராமாயணத்தில் மகளிர் தாய்மை, தவம், கற்பு, பொறாமை, நிறைந்தவர்களாகவும், அரக்ககுல மகளிர் அரக்கப் பண்பு நிறைந்தவர்களாகவும் காணப்பட்டுள்ளனர். இதன் வழி மகளிரின் பன்முகப்பண்புகளைக் கம்பர், அவர் வாழ்ந்த காலச்சூழலுக்கேற்ப படைத்துக்காட்டியிருக்கிறார் என்பது பெறப்படுகிறது.

**துணைநூற்பட்டியல்**

[1] அரசேந்திரன் க.முனைவர். *கம்பச்சித்திரம்* (பகுதி ஒன்று), சாளரம் வெளியீடு, சென்னை-14, பதிப்பு ஏப்ரல் 2005.

[2] கங்கா ராமமூர்த்தி. *இராமாயணத்தில் 100 சுவையான நிகழ்ச்சிகள்*, கங்கை புத்தக நிலையம், சென்னை-17, எட்டாம் பதிப்பு ஏப்ரல் 2013.

[3] கமலா சங்கரன். *கம்பனும் குறளும்*, அருந்ததி நிலையம், சென்னை-17, இரண்டாம் பதிப்பு 2013.

[4] *கழகத் தமிழ் அகராதி*. கழக வெளியீடு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-18, 100வது பதிப்பு 2010.

[5] *கம்பராமாயணம் மூலமும் உரையும்*, திருமகள் நிலையம், சென்னை-17, பதிப்பு-2005.

[6] *சங்க இலக்கிய நூல்கள்*. நிA+ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-98, ஐந்தாம் பதிப்பு அக்டோபர் 2014.

[7] சுப்பு ரெட்டியார். *கவிச் சக்கரவர்த்தி கம்பனின் சிறு பாத்திரங்கள்*, ஆனந்த் பப்ளிகேஷன்ஸ், சென்னை-73, பதிப்பு 2011.

[8] சுப.மாணிக்கம் வ. *திருக்குறள் தெளிவுரை*, மணிவாசகர் பதிப்பகம், சென்னை-108, பதிப்பு 2009.

[9] செல்வநாதன் மு.புலவர். *உரைநடையில் கம்பராமாயணம்*, ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை, முதற்பதிப்பு ஜீன் 1993.

[10] பழனிவேலு நா. முனைவர். *வால்மீகி ராமாயணம்-கம்ப ராமாயணம் ஒப்பாய்வு (கதையும் பாத்திரங்களும்}*, தமிழ்ப்பாவை பதிப்பகம், பதிப்பு மே 2019.

**References**

[1] Dr.K. Araseandhiran. *Kambachithiram* (part 1), Salaram Publication, Chennai 14, Edition April 2005.

[2] Kanga Ramamoorthy. *Ramayanathil 100 Suvaiyana Nigalchigal*, Kangai Puthaga nilayam, Chennai 17, Eighth Edition April 2013.

[3] Kamala Sankaran. *Kambanum Kuralum*, Arunthathi Nilayam, Chennai 17, Second Edition 2013.

[4] *Kazhaga Tamil Agarathi* – Kazhagam Publication, Saiva Sithantha Noorpathipu Kazhagam, Chennai 18, Last Edition 2010.

[5] *Kambaramayanam Mullamum Uraiyum*, Thirumagal Nilayam, Chennai 17, Edition 2005.

[6] *Sanga Illakiya Noolgal* – NCBH Pathipu, Chennai 98, 5th Edition Octobar 2014.

[7] Subbu Reddiyar – *Kavi Sakravarthi Kambanin Siru Paathirangal*, Anandh Publication, Chennai 73, Edition 2011.

[8] V.Suba.Manikkam. *Thirukural Thelivurai*, Manivasagar Pathipagam, Chennai 108, Edition 2009.

[9] Pulavar M. Selvanathan. *Uainadaiyal Kambaramayanam*, Sri Indhu Publication, Chennai, First Edition June 1993.

[10 Dr. N. Palanivelu. *Valmiki Ramayanam* - *Kamba Ramayanam Oppaivu* (*Kathaiyum, Patthirangalum*), Tamilpavai Pathipagam, Edition May 2019.

# குறிப்புகள்

**ISBN NUMBER: 978-93-91115-78-4**